இலக்கியப் பூந்துணர்

முதற் புத்தகம்

இயற்றியவர்
பெ. நா. அப்புஸ்வாமி

யூனிவர்ஸிடி ப்ரெஸ்

இலக்கியப் பூந்துணர்

முதற் புத்தகம்

இயற்றியவர்
பெ. நா. அப்புஸ்வாமி

INDIAN BRANCH
ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்
பம்பாய் கல்கத்தா மதராஸ்
1942

ILAKKIYA-P-POONTHUNAR, MUTHAR PUTTHAKAM
(A GARLAND OF TAMIL VERSE AND PROSE, BOOK I)

First edition, 1942

நன்றியுரை

இப்புத்தகத்தின் செய்யுட் பாடத்தில்

'கலைமகள்', 'தாய்நாடு', 'மாலைச் சூரியன்', 'ஒளியும் இருளும்' என்னும் பகுதிகளைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த பாரதிப் பிரசுராலயத்தாருக்கும்,

இரக்ஷணிய யாத்திரிகத்திலிருந்து 'தீயமகன் திருந்தியது' என்னும் பகுதியைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த கிறிஸ்ட்டியன் லிட்டெரச்சர் ஸொஸைட்டியாருக்கும்,

'புத்தரும் மகனை இழந்த தாயும்' என்னும் பகுதியைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த ஸ்ரீ சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கும்,

'பூமி' என்னும் பகுதியைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த ஸ்ரீ ரா. இராகவையங்கார் அவர்களுக்கும்,

இதன் வசன பாடத்தில்

'வல்வில் ஓரி', 'நமது நாற்கால் நண்பர்கள்', '25,000,000,000,000', 'சங்க இலக்கியங்கள்', 'ப்ளாஞ்செட்', 'சோழர்', 'ஒரு கவிமலர்', 'கம்பர்', 'டேவிட் லிவிங்ஸ்ட்டன்', 'மின்சாரமும் மனித வாழ்க்கையும்', 'கிழவியின் நிழல்', 'சீவக சிந்தாமணி', 'சீமைக் கடிதம்' என்னும் பாடங்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த அதனதன் ஆசிரியருக்கும்,

'மாலைச் சூரியன்' என்னும் பாடத்தைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த பார்திப் பிரசுராலயத்தாருக்கும்,

'கஜப் புளுகு' என்னும் பாடத்தைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த ஆனந்த விகடன் பத்திராசிரியருக்கும்,

'தினசரிதை' என்னும் பாடத்தைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த சென்னை அரசாங்கத்தாருக்கும்,

இப்புத்தகத்தைத் தொகுப்பதற்கும், இதற்குக் குறிப்பு முதலியவை எழுதுவதற்கும், இது அச்சேறுவதற்கும் பேருதவி புரிந்த ஸ்ரீ கோ. சேஷாத்திரி ஐயர் அவர்களுக்கும், ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கும், ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸுக்கும் என்னுடைய மனமார்ந்த வந்தனங்கள் உரியன.

இவற்றுள் 'சங்க இலக்கியங்கள்', 'சோழர்', 'கம்பர்', 'டேவிட் லிவிங்ஸ்ட்டன்' என்னும் பாடங்கள் இப்புத்தகத்துக்கென்றே எழுதப்பட்டு இதிலேயே முதன்முதலாக வெளிவந்துள்ளவை.

பெ. நா. அப்புஸ்வாமி

பொருள் அடக்கம்

செய்யுள்

வசனம்

வசனம்

I. தோத்திரம்

I. கடவுள்

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்(டு) உடை யார்அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.

—கம்பர்

II. கலைமகள்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்;
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை இன்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்(து) இருப்பாள்;
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின்(று) ஒளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்(து) உட்பொருள் ஆவாள்.

—பாரதி

III. தாய் நாடு

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.
நன்(று) இது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம்வந் தாற்பின் நமக்(கு) எது வேண்டும்?
வந்தே மாதரம் என்போம்

—பாரதி

II. நீதி

I. திருக்குறள்

அன்பு

1. அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

இன்சொல்

2. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

செய்ந்நன்றி அறிதல்

3. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

நா அடக்கம்

4. தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

ஒழுக்கம்

5. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

வாய்மை

6. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

இன்னா செய்யாமை

7. பிறர்க்(கு) இன்னா முற்பகல் செய்யின் தமக்(கு) இன்னா
பிற்பகல் தாமே வரும்.

கல்வி

8. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

அறிவு

9. அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

ஆராய்ந்து செய்தல்

10. எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப(து) இழுக்கு.

தேர்ந்து கொள்ளுதல்

11. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

முயற்சி

12. முயற்சி திருவினை யாக்கும்; முயற்(று) இன்மை
இன்மை புகுத்தி விடும்.

வினைத் திட்பம்

13. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

நட்பு

14. நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

15. முகம்நக நட்பது நட்பன்று; நெஞ்சத்(து)
அகம்நக நட்பது நட்பு.

—திருவள்ளுவர்

II. இனியவை நாற்பது

1. தங்கண் அமர்வுடையார் தாம்வாழ்தல் முன்இனிதே
அங்கண் விசும்பின் அகல்நிலாக் காண்(பு)இனிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கும்
அன்புடைய ராதல் இனிது.

2. மானம் அழிந்தபின் வாழாமை முன்இனிதே
தானம் அழியாமைத் தானடங்கி வாழ்(வு)இனிதே
ஊனம் ஒன்(று)இன்றி உயர்ந்த பொருளுடைமை
மானுடவர்க் கெல்லாம் இனிது.

3. கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே
உயர்(வு)உள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே
எளியர் இவர்என்(று) இகழ்ந்(து)உரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது.

4. கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருள்இனிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்இனிதே
தெற்றெனல் இன்றித் தெளிந்தாரைத் தீங்(கு)ஊக்காப்
பத்திமையிற் பாங்(கு)இனிய(து) இல்.

—பூதஞ்சேந்தனார்

III. நான்மணிக்கடிகை

1. மொய்சிதைக்கும் ஒற்றுமை யின்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும்பொன்போலும்மேனியைப்—பெய்த
கலம்சிதைக்கும் பாலின் சுவையைக் குலம்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின்.

2. கண்ணிற் சிறந்த உறுப்பில்லை; கொண்டானில்
துன்னிய கேளிர் பிறரில்லை; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல்.

3. நல்லார்க்கும் தம்மூரென்(று) ஊரில்லை; நன்னெறிச்
செல்வார்க்கும் தம்மூரென்(று) ஊரில்லை; அல்லாக்
கடைகட்குந் தம்மூரென்(று) ஊரில்லை; தங்கைத்(து)
உடையார்க்கும் எவ்வூரும் ஊர்.

4. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்;
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம்; குற்றம்
தமரல்லார் கைத்துள்ள(து) ஊண்.

—விளம்பிநாகனார்

IV. நாலடியார்

சினமின்மை

1. இளையான் அடக்கம் அடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்;—எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

கல்வி

2. இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்,
தம்மை விளக்குமால், தாம்உளராக் கேடின்றால்,
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

அறிவுடைமை

3. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

—சமண முனிவர்

V. சிலப்பதிகாரம்

அறவுரை

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்(பு) இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலா(து) அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழைஉயிர் ஓம்புமின்;

அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையா(து) ஒல்லுவ(து) ஒழியாது
செல்லும் தேஎத்துக்(கு) உறுதுணை தேடுமின்;
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்.

—இளங்கோவடிகள்

VI. நன்னெறி

சினத்தை அடக்குதல்

1. உள்ளம் கவர்ந்(து)எழுந்(து) ஓங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு.

பெரியோர் இயல்பு

2. தங்குறை தீர்(வு)உள்ளார் தளர்ந்து பிறர்க்(கு)உறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா(து) உலகில்
நிறையிருளை நீக்கு(ம்)மேல் நின்று.

கொடை

3. 'எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்(கு) ஈந்(து)'என்(று)
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ [அவன்
நின்று பயன்உதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி.

அறம்

4. கொள்ளும் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதல்முன்
உள்ளம் கனிந்(து) அறஞ்செய்(து) உய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார்? பேசு.

—சிவப்பிரகாச சுவாமிகள்

III. காவியம்

I. பாரத வெண்பா

பதின்மூன்ரும்நாட் போர்

இருபக்கத்துச் சேனையும் போருக்கு எழுதல்

1. வெய்ய கதிரோன் விளங்க உலகெங்கும் [துப்
துய்யபொற் குன்றின்மேல் தோன்றுதலும்—கைவகுத்
பாராளும் மன்னர் படையிரண்டும் ஆர்த்தெழுந்து
போராளப் புக்கார்அப் போது.

அபிமன்யு யுத்தசந்நத்தன் ஆதல்

2. விற்புட்டில் இட்டு விறற்பட்டம் சாத்திமிகப்
புக்க சரத்தூணி மேற்போக்கி—உக்கிரமாய்
வெஞ்சிலையொன்(று) ஏந்தி விறற்கரிபோல் தோன்றினன்
வெஞ்சினவேல் மால்மருகன் மிக்கு.

அபிமன்யு தருமனை வணங்கி விடைபெறுதல்


3. விற்கையா லேதொழுதான் வேந்தனை வேந்தனும்தன்
பொற்கையா லேதழுவிப் போக்கினன்—'நற்குலத்து
மாமனையும் தந்தையையும் போல வயவேந்தர்
ஏழுனையை எய்(து) அழிப்பாய்' என்று.

தேரேறிப் போருக்குப் புறப்படுதல் [தேர்

4. மற்ருேழிந்த தந்தையரைத் தாள் இறைஞ்சி மாமணித்
உற்றங்கே மேல்கொண்(டு) உருமுப்போல்-செற்றெதிர்ந்து
சேனையின்முன் சென்று திறல் அழிக்கப் புக்கானே
யானையின்மேல் சீயம்போல் அன்று.

அபிமன்யுவின் போர்த் திறமை

5. எவ்விடத்தன் என்னில் இமைப்பளவில் எங்கெங்கும்
அவ்விடத்தன் ஆகி அமர்புரிந்து—தெவ்வுடையக்
கூறுகூ றாக்கிக் கொடுஞ்சினவாய்க் கூற்றம்போல்
வேறுவே றாய்ப்பொருதான் வேந்து.



வீமசேனன் தருமனைக் கோபித்தல்

6. 'காலனே யன்ன கடற்படைஞர் தம்மேலே
பாலனே செல்லப் படைவிடுத்தாய்,—ஏலங்
குதலைவாய் நாறுங் குருநாடர் கோவே!
மதலையாய் வாழுதியோ மற்று?'

வீமன் போர்க்களம் நோக்கிப் போதல்

7. தங்கோன் திருவடியைக் கைதொழுது தண்(டு)எந்திப்
பொங்கோதம் போற்கொதித்துப் போயினன்—அங்கோத
மால்வண்ணன் தன்மருகன் தன்மதலை நின்றளவும்
கால்வண்ண னாகக் கடிது.

துரியோதனன் கூற்று

8. 'நின்ற குலமதலை நம்படையை நேராகக்
கொன்று குவித்திடுவன் கூற்றம்போல்—இன்(று)இவனை
விண்ணுலகுக்(கு) ஏற்றுயேல் வீமன் துணைபுகுந்து
மண்முழுதும் தானுள்வான் மற்று.'

சயத்திரதன் செயல்

9. மன்சொன்ன சூழ்கழற்கால் மன்னவர்கள் மாமுனைமேல்
முன்சென்ற மூரித்தேர் கால்காப்பப்—பின்சென்ற
கொற்றவன்தான் வந்(து)அமரில் கூடாமை ஈசன்பால்
பெற்றவரத் தால்தடுத்தான் பின்.

அபிமன்யுவின் திறல்

10. வந்(து)எதிர்ந்த பல்வேந்தர் மார்மேலும் தோள்மேலும்
பந்தியாய் நின்ற படைமேலும்—முந்தி
விடுத்தான் அடுசரங்கள் வேல்வேந்தர் தம்மைக்
கெடுத்தான் திறலால் கிளர்ந்து.

அரசரும் பிறரும் அதிசயித்தல் (விருத்தம்)

11. 'களிமாண் உலகுக்(கு) ஓர் காலனோ சொல்லீர்
கடல்வண்ணன் தங்கை கருவுயிர்த்த(து)' என்பார்,
'தெளிமாண வாள் ஏந்திச் செய்கின்ற போரில்
சிலை ஏந்திச் செய்த செரு என்ன(து)?' என்பார்;
'ஒளிமாலொ டன்றோ படைபயின்ற(து)?' என்பார்;
'ஒள்ளிலைவேல் பார்த்தன்சேய் அல்லனோ?' என்பார்;
'புளிமாவ(து) ஆகுமோ தேமாங்கன்(று)?' என்பார்;
'புலிக்குப் பிறந்த(து) எலியாமோ?' என்பார்.

அபிமன்யுவின் தனிமை

12. சுற்றுந்தான் பார்க்கும் துணைகாணான் தேர்காணான்
பற்றத்தான் பார்க்கும் படைகாணான்—முற்றுந்தான்
தன்படையே ஆயினன் தாமரைப்பூப் போன்மலர்ந்தான்
முன்படையும் பின்படையா மொய்த்து.

அபிமன்யுவின் வீழ்ச்சி

13. தண்டொடு தண்டு தடுமாறத் தாமலைந்தார்
மண்டு செருவில் வழக்கழிவு—கொண்ட
குலவேந்தன் தம்பி குமரன்விழ வீழ்ந்தான்
சிலைவேந்தன் வாள்விசயன் சேய்.

—பெருந்தேவனார்

II. சீவக சிந்தாமணி

அரசர் பெருமை

1. தன்னை ஆக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வௌவிற் பிறழ்ந்திடும் பூமகள்
அன்ன வன்வழிச் செல்லின்இம் மண்மிசைப்
பின்னைத் தன்குலம் பேர்க்குநர் இல்லையே.

2. திலக நீள்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்கள் ஒப்ப என்(று) ஓதுப;
குலவு தார் மன்னர்க் கியானிது கூறுவன்:
பலவும் மிக்கனர் தேவரிற் பார்த்திவர்.

3. அருளு மேல் அரசாக்கும் மன்; காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்(து) எனும் மாதெய்வம்;
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி ஆக்கல் அழித்தல்அங்(கு) ஆபவோ?

4. உறங்கும் ஆயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார் விழித் தேயிருந்(து)
அறங்கள் வௌவ அதன்புறங் காக்கலார்.

5. யாவர் ஆயினும் நால்வரைப் பின்னிடில்
தேவர் என்பது தேறும்இவ் வையகம்;
காவல் மன்னவர் காய்வன சிந்தியார்,
நாவினும் உரையார், நவை அஞ்சுவார்.

—திருத்தக்க தேவர்

III. இராமாயணம்

கைகேயி சூழ்வினைப் படலம்

வசிட்டர் முடிசூட்டுதற்குரியவற்றைச் சித்தம் செய்தல்

1. ஆயதோர் அமைதி யின்கண் ஐயனை மகுடம் சூட்டற்(கு)
ஏயும் மங்கலங்க ளான யாவையும் இயையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்கள் நெருக்கம் நீங்க மாதவக் கிழவன் வந்தான்.

2. கங்கையே முதல வாய கன்னி யீறாய தீர்த்த
மங்கலப் புனலும் நாலு வாரியின் நீரும் பூரித்(து)
அங்கியின் வினையிற்கு ஏற்ற யாவையும் அமைத்து வீரச்
சிங்கவா தனமும் வைத்துச் செய்வன பிறவும் செய்தான்.

தசரதரை அழைத்துவரச் சுமந்திரன் செல்லுதல்

3. கணிதநூல் உணர்ந்த மாந்தர்
'காலம்வந்(து) அடுத்த(து)' என்னப்
பிணியற நோற்று நின்ற
பெரியவன் 'விரைவின் ஏகி
மணிமுடி வேந்தன் தன்னை
வல்லையில் கொணர்தி' என்னப்
பணிதலை நின்ற காதல்
சுமந்திரன் பரிவின் சென்றான்.

கைகேயி இராமனை அழைத்துவரச் சொல்லுதல்

4. விண்தொட நிவந்த கோயில்
வேந்தர்தம் வேந்தன் தன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான்
கைகயள் கோயில் நண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரிற்
சொல்ல மற்(று) அவரும் சொல்லப்
பெண்டிரில் கூற்றம் அன்னாள்
'பிள்ளையைக் கொணர்க' என்றாள்.

சுமந்திரன் சென்று இராமனை அழைத்தல்

5. 'கொற்றவர் முனிவர் மற்றும்
குவலயத்(து) உள்ளார் உன்னைப்
பெற்றவன் தன்னைப் போலப்
பெரும்பரி(வு) இயற்றி நின்றார்
சிற்றவை தானும் ஆங்கே
கொணர்கெனச் செப்பினாள் அப்
பொற்றட மகுடம் சூடப்
போதுதி விரைவின்' என்றான்.

இராமன் வருகை

6. ஐயனும் அச்சொல் கேளா
ஆயிரம் மௌலி யானைக்
கைதொழு(து) அரச வெள்ளம்
கடலெனத் தொடர்ந்து சுற்றத்
தெய்வ கீதங்கள் பாடத்
தேவரும் மகிழ்ந்து வாழ்த்தத்
தையலார் இரைத்து நோக்கத்
தார் அணி தேரில் சென்றான்.

வீதியில் மக்களின் மகிழ்ச்சி

7. ‘உய்ந்த(து)இவ் வுலகம்’ என்பார்;
‘ஊழிகாண் கிற்பாய்’ என்பார்;
‘மைந்தநீ கோடி எங்கள்
வாழ்க்கைநாள் யாவும்’ என்பார்;
‘ஐந்(து)அவித்(து) அரிதிற் செய்த
தவம் உனக்(கு) ஆக’ என்பார்;
‘பைந்துழாய்த் தெரிய லாய்க்கே
நல்வினை பயக்க’ என்பார்;

8. ‘உயரருள் ஒண்கண் ஒக்கும்
தாமரை, நிறத்தை ஒக்கும்
புயல்பொழி மேகம் என்ன
புண்ணியம் செய்த?’ என்பார்;
‘செயலரும் செயல்கள் செய்(து)இச்
செம்மலைத் தந்த செல்வத்
தயரதற்(கு) என்ன கைம்மா(று)
உடையம்யாம் தக்க(து)?’ என்பார்;

9. ‘தாய்கையில் வளர்ந்திலன்; வளர்த்தது தவத்தால்
கேகயன் மடந்தை; கிளர்ஞாலம் இவன்ஆள
ஈகையில் உவந்தனள்; இயற்கைஇது என்றால்
தோகையவள் பேருவகை சொல்லஅரி(து)’ என்பார்.

இராமன் கைகேயியின் அந்தப்புரம் அடைதல்

10. ஆயன நிகழும் வேலை
அண்ணலும் அயர்ந்து தேறாத்
தூயவன் இருந்த சூழல்
துருவினன் வருதல் நோக்கி
நாயகன் உரையான் வாயால்
நானிது பகர்வேன் என்னாத்
தாயென நினைவான் முன்னே
கூற்றெனத் தமியள் வந்தாள்.

இராமன் உவகையோடு கைகேயியை வணங்கல்

11. வந்தவள் தன்னைச் சென்னி
மண்உற வணங்கி வாய்த்த
சிந்துரப் பவளச் செவ்வாய்
செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை
மடக்குறத் துவண்டு நின்றான்
அந்திவந்(து) அடைந்த தாயைக்
கண்டஆன் கன்றின் அன்னான்.

கைகேயி 'ஒன்று சொல்ல விரும்புகிறேன்' எனல்

12. நின்றவன் தன்னை நோக்கி
இரும்பினால் இயைந்த நெஞ்சின்
கொன்(று)உழல் கூற்றம் என்னும்
பெயரினில் கொடுமை பூண்டாள்
'இன்(று)எனக்(கு) உணர்த்த லாவ
தேயதே யென்னின் ஆகும்
ஒன்(று)உனக்(கு) உந்தை மைந்த
உரைப்பதோர் உரையுண்(டு)' என்றாள்.

இராமன் விடை

13. 'எந்தையே ஏவ நீரே
உரைசெய இயைவ துண்டேல்
உய்ந்தனன் அடியேன்; என்னிற்
பிறந்தவர் உளரோ! வாழி
வந்த(து)என் தவத்தி னாய
வருபயன் மற்றொன்(று) உண்டோ?
தந்தையும் தாயும் நீரே
தலைநின்றேன் பணிமின்' என்றான்.

கைகேயி கூற்று

14. 'ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவம் மேற்கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வா என்(று)
இயம்பினன் அரசன்' என்றாள்.

இராமனது நிலை

15. இப்பொழு(து) எம்ம னோரால்
இயம்புதற்(கு) எளிதே! யாரும்
செப்பருங் குணத்(து) இராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு; பின்(பு)அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு(து) அலர்ந்த செந்தா
மரையினை வென்ற(து) அம்மா!

16. தெருளுடை மனத்து மன்னன்
ஏவலில் திறம்ப அஞ்சி
இருளுடை உலகம் தாங்கும்
இன்னலுக்(கு) இயைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட
உடையவன் உய்த்த காரே(று)
அருளுடை ஒருவன் நீக்க
அப்பிணி அவிழ்ந்த(து) ஒத்தான்.

இராமன் தன் கருத்தை வெளியிடல்

17. ‘மன்னவன் பணி அன்றாகில்
நும்பணி மறுப்ப னோ?என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றது அன்றோ?
என்இனி உறுதி அப்பால்?
இப்பணி தலைமேற் கொண்டேன்;
மின்னொளிர் கானம் இன்றே
போகின்றேன்; விடையும் கொண்டேன்.’

—கம்பர்

IV. நள வெண்பா

சுயம்வர காண்டம்

நளனது ஆட்சிச் சிறப்பு

1. சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம்கிடப்பத்
தா(து) அவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அரு(கு) ஊட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு.

நளன் அன்னப்பறவையைக் காணுதல்

2. நீள்நிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்
தாள்நிறத்தால்பொய்கைத்தலம்சிவப்ப—மாண்நிறத்தான்
முன்அப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு.

பணிப்பெண்கள் அன்னத்தைப் பிடித்து வருதல்

3. நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற(து) ஒப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

அன்னம் தமயந்தியைப்பற்றி நளனுக்குக் கூறுதல்

4. 'திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே உன்றன்
இசைமுகந்த தோளுக்(கு) இசைவாள்—வசையில்
தமையந்தி என்(று)ஓதும் தையலாள் மென்தோள்
அமையந்தி யென்றோர் அணங்கு.

5. 'எழுவடுதோள் மன்னா இலங்கிழை ஏர் தூண்டக்
கொழுநுதியில் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.'

அன்னம் தமயந்தியிடம் போதல்

6. 'வீமன் திருமகளாம் மெல்லியலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையாய்' என்(று) உரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து.

நளனைப்பற்றித் தமயந்திக்கு அறிவித்தல்

7. 'அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்தோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு?'

தமயந்தியின் சுயம்வரத்தை நாடெங்கும் அறிவித்தல்

8. 'மங்கை சுயம்வரநாள் ஏ(ழு)என்று வார்முரசம்
எங்கும் அறை' கென்(று) இயம்பினான்—பைங்கமுகின்
கூந்தல்மேற் கங்கைக் கொழுந்தோடும் நன்னாடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு.

சுயம்வரத்தை நளனுக்கு அறிவிக்கத் தூதுவர் செல்லுதல்

9. கோதை சுயம்வரநாள் கொற்றவனுக்(கு) உற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந்(து) எய்தினார்—போதில்
பெடையோடு வண்(டு) உறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயி லகம்.

தமயந்தி நளனுக்கு மாலையிடுதல்

10. விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

—புகழேந்திப் புலவர்

V. திருவிளையாடற் புராணம்

குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

திருமணத்துக்கு வந்தவர்களைப் பிராட்டி உபசரித்தனுப்புதல்

1. கன்னி யர்க்(கு)அர சாயினாள் கடிமனை புகுந்த
மின்னி யற்சடை மாதவர் வேதியர் ஏனோர்
எந்நி லத்துள மன்னவர் யாவர்க்கும் முறையே
பொன்னி யற்கலத்(து) அறுசுவைப் போனகம் அருத்தா.

2. பூசு கின்றவும் உடுப்பவும் பூண்பவும் பழுக்காய்
வாச மெல்லிலை எனவும் அம்முறை வழங்காத்
தேச மன்னவர் ஏனையோர் செல்லுநர்ச் செலுத்தி
ஈசன் அன்புறு கற்பினாள் இருக்கும் அவ் வேலை.

அன்னம் முதலியன அளவிறந்து மீந்திருப்பதைப் பிராட்டி அறிதல்

3. மடைவ ளத்தொழிற் புலவர்வந்து அடியிணை வணங்கி
'அடிய ரேம்அட்ட போனகம் ஆயிரத் தொன்றின்
இடைய தாயினும் தொலைந்திலது; யாங்கண்மேற் செய்யக்
கடவ(து) எ(து)?' எனப் பிராட்டிதன்கணவர்முன் குறுகா.

பிராட்டி அதனைப் பெருமானுக்கு அறிவித்தல்

4. பணிந்(து) ஒதுங்கிநின்(று) 'அடிகள்முப்
பத்துமுக் கோடி
கணங்கள் தம்மொடும் இங்(கு) எழுந்(து)
அருள்வது கருதி

இணங்கும் இன்சுவைப் போனகம்
எல்லையின்(று) ஆக்கி
உணங்கு கின்ற(து)உண்(டு) எஞ்சிய(து)
எனைத்தென உரைக்கின்.

5. 'இமையக் குன்றமும்அடைகலா இதன்புறங் கிடந்த
சிமையக் குன்றுகள் எட்டமும் சேர்ந்தென நிமிரச்
சமையக் கொட்டிய வாலரிப் புழுக்கலும் சாதக்(கு)
அமையக் கொட்டிய கறிகளின் வருக்கமும் அனைத்தே.'

6. என்ற போ(து) இறை எம்பிரான் தேவியா ரிடத்தில்
ஒன்றும் அன்பினுல் ஒருவிளை யாடலை நினைந்தோ
தன்த னிக்குடைப் பாரிடத் தலைவன(து) ஆற்றல்
அன்று யாவரும் அறிந்திடக் காட்டவோ அறியேம்.

பெருமான் விடை

7. சிறிது வாணகை செய்து'மூ
வேந்தரிற் சிறந்த
மறுவில் மீனவன் அரும்பெறல்
மகள் உனக்(கு) அரிதில்
பெறுவ தேது?வான் தருவும்நின்
பணிசெயப் பெற்(று)இங்கு
உறைவ தேல்பிறர் திருவெலாம்
உன்னதே யன்றோ?

8. 'குடை எடுக்கும் இக் குறியதாட் குறட்கு ஒரு பிடிசோ(று)
இடுமின்; அப்புறஞ் சோறுமால்' எனத்தொழுது எல்லாம்
உடைய நாயகி போயினுள்; குறியனும் உடனே
நடைதளர்ந்துகண் புகைந்துவாய் புலர்ந்திட நடந்தான்.

குண்டோதரன் செயல்

9. படைக்கண் ஏவலர் இறைமகள்
பணியினால் பசிநோய்
தொடுத்த வன்தனைக் கொண்டுபோய்ச்
சொன்றிமுன் விடுத்தார்;
அடுத்(து)இ ருந்ததே கண்டனர்
அன்னமா மலையை
எடுத்(து)அ யின்றதும் அடிசில்அங்(கு)
இருந்ததும் காணார்.

10. பல்ப ழக்குவை வேற்றுருப் பண்ணியம் கன்னல்
மெல்சுவைத்தண்டு தெங்(கு) இவை யன்றியும் வேவா
வல்சி காய்களின் வருக்கமும் நுகர்ந்துமா றுமல்
எல்லை தீர்நவ பண்டமும் எடுத்துவாய் மடுத்தான்.

குண்டோதரன் செயலைப் பிராட்டி பிரானுக்கு அறிவிக்கச்செல்லுதல்

11. அலங்க லோதிகண்(டு) அதிசயம் அடைந்துதன் அன்பின்
நலங்கொள் நாயகன் முன்புபோய் நாணம்உட் கிடப்ப
இலங்கு பூங்குழல் சுவல்மிசை இறக்கியிட்(டு) ஒல்கி
நிலங்கி ளைத்துநின் றுள்நிலை கண்டனன் நிருபன்.

பெருமான் பிராட்டியை வினவுதல்

12. அஞ்சி லோதியை வினவுவான் அறிகலான் போலக்
'குஞ்சி யாரழல் அன்னஅக் குடவயிற் றவன்உண்(டு)
எஞ்சி யுள்ளவேல் பூதங்கள் இன்னமும் விடுத்(து)உன்
நெஞ்(சு) உவப்பவே அருத்துதும்' என்னலும் நிமலை.

பிராட்டியின் விடை

13. 'ஐய இன்னும்இக் குறட்பசி அடங்கிடா; வேறு
வெய்ய பாரிட வீரரை விடுத்தியேல் எடுத்து
வையம் யாவையும் வயிற்றிடை வைப்பரே; அதனால்
செய்ய காலருத் திரப்பெயர் தேற்றமாம் உனக்கே.

14. 'சங்க வார்குழைக் குறள்மகன் தன்செயல் தானே
இங்கு வந்(து)உரை செய்திட அறிதி' என்று இறைமுன்
மங்கை நாயகி குமுதவாய் மலர்பொழு(து) எயிற்றுத்
திங்கள் வாய்முழை யான்பசித் தீச்சுட வந்தான்.

குண்டோதரன் கூறுதல்

15. 'நட்டம் ஆடிய சுந்தர, நங்கைஎம் பிராட்டி
அட்ட போனகம் பனிவரை அனையவாய்க் கிடந்த,
தொட்டு வாய்மடுத் திடவும்என் சுடுபசி தணியா(து)
இட்(டு) உணுதவர் வயிறுபோல் காந்துவ(து)' என்றான்.

—பரஞ்சோதி முனிவர்

VI. குசேலோபாக்கியானம்

வாயிற்காவலர் கூறுதல்

1. 'நின்னுடை வர(வு) உரைத்தேம்
நிருபனுக்(கு) அப்போழ்து உற்ற
பன்னருங் களிப்பை யாமோ
பகர்ந்திட வல்லம்! ஐய!
முன்னம் அங்கிருந்த இன்பம்
முழுவதும் மறந்து நின்றான்;
நன்னர்நெஞ் சுடைய நீரார்
நட்பினிற் சிறந்த(து) உண்டோ?

2. 'ஆதலின் எம்பிரானுக்(கு) அகத்துமிக்(கு)
உவகை உய்ப்ப
ஏதமில் முனிவர் ஏறே!
எழுந்(து)அரு ளுக'என்(று) அங்கைப்
போதகம் கூப்பி னார்கள்.
பொருக்கென எழுந்து, செம்மை
வேதம்முற் றுணர்ந்த ஐயன்
விரைதர நடக்க லுற்றான்.

குசேலர் கண்ணனைக் காணுதல்

3. எண்அனைக்(கு) இலங்கு மார்பம்
ஈந்தருள் பிரானை, நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
வலம் இட முறக்கொண் டானை,
மண்அனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனை, மணக்கும்
கண்ணனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான்.

கண்ணன் குசேலரை எதிர்சென்று வணங்குதல்

4. காண்டலும் உவகை பூத்துக்
கால்விசை கொடுந டந்தான்
ஆண்டகை அவனும் கண்ணுற்(று)
அணைஉடைத்(து) எழுநீத் தம்போல்
நீண்டபூம் பள்ளி நீத்து,
நிலவுபேர் அன்பு பொங்கப்
பூண்டமா தவன்முன் சென்று
பொன்னடி வணங்கி னானல்.

5. திலகம் மண்தோய ஐயன்
திருவடி வணங்கிப் பின்னர்
நிலவு மெய்ப் புளகம் போர்த்து
நிரம்புறத் தழுவிக் கொண்டான்;
'குலமறைத் தலைவன்' என்றும்
'கூர்ந்த மெய் நட்பன்' என்றும்
மலர்தலை உலகம் கூறும்
வாய்மை காத்(து) அருளினனே.

குசேலருடைய நிலை

6. நீருறும் உப்புப் போலும்,
நெருப்புறு பளிதம் போலும்,
ஏருறு வடிவத் தண்ணல்
இடத்துத்தன் மனம் கலப்பப்
பேருறு பவஞ்ச வாழ்க்கைப்
பிணிப்(பு) ஒழிந்(து) அகலக் கஞ்சத்
தாருறு மார்பத்(து) ஐயன்
தன்னையும் மறந்தி ருந்தான்.

கண்ணன் குசேலரைக் குசலம் விசாரித்தல்

7. 'பூன்ற தயை என்னிடத்(து) எப்
போதும் நீ வைத்தருள்க.
ஆன்றஎன(து) உளத்தினைவிட்(டு)
அகன்றிலைஇந் நாள்காறும்:
சான்றகுணத் தாய்! இன்னும்
சந்ததமும் நினைந்திருப்பேன்.
தோன்றஅனே கம் பெறினும்
தொன்னட்பின் சிறந்தனவோ?

8. 'நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்பு பெரு நீர்மையளே?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய உயிராநின் தனைப் பேணும் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல(வு) உஞற்றுவளே?

9. 'பைங்குதலை வாய்மைந்தர் பலர்பிறக்க வேண்டுமே,
எங்கும் அரும் புகழுடையாய்! எத்தனைமைந் தர்கள் பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கலறப் புரிந்தனையோ? செய்தனையோ உபநயனம்?

10. 'நள்ளார்கள் அண்மைக்கண் இருந்தாலும் நட்புறுத்தார்;
விள்ளார்கள் சேய்மைக்கண் இருந்தாலும் விருப்பொழியார்
தள்ளாத பல்பொருள்கள் தனைச்சூழ இருந்தாலும்
உள் ஆதவன் கதிரை உறநோக்கும் நெருஞ்சியே.

கண்ணன் தின்ன ஏதேனும் தரும்படி குசேலரைக் கேட்டல்

11. 'பந்தனை அகன்ற மேலோய்! பற்பல நாட்குப் பின்பு
வந்தனை; எனக்(கு) என் கொண்டு வந்தனை? அதனை இன்னே
தந்தனை யாயின் நன்று. தருசுவைப் பக்கணத்(து) என்
சிந்தனை நின்ற(து)' என்றான் தெரிவரும் வஞ்சக் கள்வன்.

12. 'திருந்த இங்களித்தி' என்று
செங்கரம் மலர்த்தி நீட்டப்
'பொருந்த இன் பால் உண்பான்பால்
புளித்த காடியைக் கொடுத்திட்(டு)
அருந்தி(டு) என்(று) உரைத்தல்போல் இவ்
வவற்கொடை' என்று வாளா
இருந்தனன் குசேல மேலோன்.
இவன்உளம் அறிந்த கண்ணன்,

13. மலிதரும் அன்பின் வந்த
வண்பொதி அவிழ்த்து நோக்கி
'வலிதரும் அவற்றுள் நன்று
வாய்த்தது நமக்கி(து)' என்று,
ஒலிதரு கழற்கால் ஐயன்
ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயில்
போகட்டுக் கொண்டான் மாதோ.

14. 'நாட்டும் இவ்வவல் விருப்பம்
நமக்கு மிக் குள்ள தென்று
கேட்டுளாய் கொல்லோ? முன்னம்
கிளந்திருப் பதுவும் அன்றென்(று)

எட்டுமென் மலர்ப்பூந் தொங்கல்
இமையவர்க்(கு) அமிர்தம் முன்னாள்
ஊட்டிய புகழின் மேலோன்
ஒருபிடி அவல் தின்றானே.

—தேவராசப் பிள்ளை

VII. இரக்ஷணிய யாத்திரிகம்: ஆதிபருவம்

சுவிசேஷ மார்க்கப் படலம்

தீய மகன் திருந்தியது

1. ஒருவன்அன்புடையதந்தைக்(கு) ஓரிருபுதல்வர் உள்ளார்
இருவரில் இளையான் 'ஐய என்ஒரு பாகம் எற்குத்
தருக'என்(று) இரந்துகேட்பத் தந்தைதன்உரிமையாவும்
நிருவிகற் பாகப் பங்கிட்(டு) உதவினன் நேர்மை யாக.

2. கைப்பொருள் கண்டான் தந்தை
கரைந்தசொற் பொருளைக் காணான்
மெய்ப்பொருள் அறியான் உள்ளம்
விழைந்தசிற் றின்ப மாயப்
பொய்ப்பொருள் நச்சி ஓடிப்
புறம்புபோய்த் தந்தை ஈந்த
அப்பொருள் இழந்தான் அந்தோ
அகதியா யினன் சின் னாளில்.

3. அங்கொரு குடும்பி தன்னை
அடுத்(து) அவன் பன்றி மேய்த்துத்
திங்களோர் இரண்டு மூன்று
செல்லஅத் தேசம் எங்கும்
வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து
வெதுப்பிடும் பசிக்(கு) ஆற்றாய்
நங்கினான் பன்றிக்(கு) ஊட்டும்
நொறுங்குகுற்(று) உமித் தவிட்டை.

4\. குற்(று)உமித் தவிடும் கிட்டாக்
கொடும்பஞ்சம் அதிக ரிக்கச்
சற்(று)உளம் தெளிந்தா னாகிச்
சஞ்சலித் (து) அழு(து) 'என் தந்தைக்(கு)
உற்றஊ ழியர் அனேகர்
உண்டுதேக் கெறிய யான்ஓர்
துற்(று)உண(வு) இன்றி ஆவி
சோர்குவல்; இ(து) என் துர்ப்புத்தி.

5\. 'புகலொன்றும் இல்லேன்' என்னுப்
புந்தியில் பிழையை உள்ளி
மிகஉளம் உடைந்து நைந்தான்
மெய்ம்மன ஸ்தாபங் கொண்டான்.
'தகவுடைத் தாதை பக்கல்
சார்குவ னேல்தான் பெற்ற
மக(வு)எனப் பரிவர் அல்லால்
மறுத்திடார்' எனத்தே றுற்றுன்.

6\. ஒல்லையே எழுந்தான், தந்தை
உத்தம குணமுன் ஈர்க்க
அல்லல்செய் பசிபின் உந்த
அடுத்தனன்; அறிந்து, தந்தை
வல்லைவந்(து) அணைத்து, முத்தி,
மகிழ்ந்தனன்; மகவாசைக்(கு) ஓர்
எல்லையும் உளவோ மைந்தன்
எத்தனை பிழைசெய் தாலும்?

7\. 'எந்தையே, எந்தையே' என்(று)
ஏங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந்(து) 'உமக்கு முன்னும்
தெய்வத்துக் கெதிருமாகப்

புந்தியற் றளவில் பாவம்
புரிந்தனன்; இனியான் உந்தம்
மைந்தன் என்(று) உரைக்கத் தானும்
அபாத்திரன்; மதியொன்(று) இல்லேன்;



8. 'ஐய, மன் னிக்கச் சித்த
மாயின்மற்(று) அளிய னேன்யான்
உய்யுமா(று) அருளி, நும்பால்
ஊழியத்(து) ஒருவ னாக்கி,
வையகத்(து) இருத்து' கென்று
வாய்திறந்து அரற்றி நிற்ப,
'நையல்'என்(று) அருளிற் கூட்டிச்
சென்றனன் அகத்துள் நண்பால்.

9. 'மகன் இவன் மரித்தான்; இன்னே
மறுத்துயிர் பெற்றா னாகத்
தகவுடை விருந்(து) எமர்க்குச்
சமைக்'கெனப் பணித்து மைந்தற்(கு)

உகவையின் வஸ்தி ராதி
உடுத்(து)அருங் கலமும் பூட்டிப்
புகாறு மகிழ்கொண் டாடி
இருந்தனன் புதல்வ னோடும்.

10. ஆயிடைச் சேட்டன் வந்தான்;
அகக்களி யாட்டுக் கண்டான்.
'மேய(து)என்?' எனவி னவி
அறிந்தனன், வெகுண்டு நின்றான்;
நேயமார் தந்தை நேர்ந்து
'நின்ஒரு கனிட்டன் மாண்டு
போயவன் பிழைத்து வந்த
புதுமையின் களியி(து)' என்றான்.

11. 'மைந்தநீ என்னோ(டு) உள்ளாய்;
வாழ்(வு) எனக்(கு) உள்ள யாவுஞ்
சொந்தம் மற்(று) உனக்கே அன்றோ?
சோதரன் மதியற்(று) ஏகி
நொந்துவந்(து) அணைந்தான் மீண்டு
நுண்மதி யுடைய நீ உன்
சிந்தனை திருகல் நன்றோ?
சேர்ந்துடன் களித்தி' என்றான்.

—கிருஷ்ண பிள்ளை

VIII. புத்தரும் மகனை இழந்த தாயும்

விருத்தம்

1. மண்ணில் வாழ்வுறும் மக்கள் மடிவது
திண்ண மென்(று) உளம் தேறத் தெளிவுரை
அண்ணல் அன்(று) ஓர் அணங்கினுக்(கு) ஓதிய
புண்ணி யம்பெறு காதை புகலுவாம்.

தாழிசை

2. மூடமான இளமறியை முதுகில் ஏந்தி
மூவுலகும் கருணையினால் வென்ற வீரன்
திடமாகப் பல உயிரும் அளிக்கும் சோணைத்
தெய்வநதிக் கரைவந்து சேர்ந்த போது,



கும்மி

3. மானைப் பழித்த விழியுடையாள்—ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள்—பெண்ணின்
தெய்வம் எனத்தகும் சீருடையாள்.

4. ஆறாகக் கண்ணீர் வடித்து நின்றாள்—கையில்
ஆண்மக(வு) ஒன்றையும் ஏந்தி நின்றாள்
தேறாத உள்ளமும் தேற்றுவிக்கும்—ஞான
தேசிகன் சேவடி போற்றி நின்றாள்.

விருத்தம்

5. சந்திர மதிபோல் நின்ற
தையலை நோக்கி ஐயன்
'வெந்துயர் விளைந்த(து) என்னே?
விளம்புக' எனலும் அன்னாள்
நைந்துநொந்(து) உருகி உள்ளம்
நயனத்தின் வழியாய் ஓட
மைந்தனைக் காட்டி இந்த
மறுமொழி கூற லுற்றாள்:

வேறு

6. 'அத்திமரம் ஓங்கியெழும் அருஞ்சோலை யதனில்
அயலொருவர் துணையின்றி அடியாளும் அன்பாய்ப்
புத்திரனைப் போற்றிவரும் பொறுமையினைக் கண்டு
புண்ணியநீ கொண்டபரி(வு) அளவுண்டோ ஐயா?

7. 'தலைநாளில் நீகண்ட சிறுமகனும் இன்று
தள்ளாடும் உயிரோடு கிடக்கின்றான் ஐயா
தொலையாத கொடும்பாவி யானும் இனி இந்தத்
தொல்லுலகில் வாழ்வதில் ஓர் பயனுண்டோ ஐயா?

8. 'சிரித்தமுகம் எனமலர்ந்து செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடும்அவ் வேளை
விரித்தபடம் எடுத்தர(வு)ஒன்(று) அடுத்(து)ஒருகை பற்றி
விளங்குமணிக் கடகம்என வளைந்துகிடந் ததுவே.

9. 'பால்மணம்மா றாதசிறு பாலகனும் அறியான்;
படஅரவை விளையாட்டுப் பண்டம்எனக் கொண்டான்;
வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வலித்து
வருத்தமெழச் சிறுகுறும்பு செய்துவிட்டான் ஐயா.

10. 'சிறுபொழுது சென்றிட என் செல்வமகன் உடலில்
சீதம் மிகப் பரந்(து)உணர்வு தீர்ந்துவிட்ட(து) ஐயா.
நிறுத்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட(து) ஐயா.
நீட்டியகால் மடங்காது நிமிர்ந்துவிட்ட(து) ஐயா.

வேறு

11. 'காடும் மலையுங் கடந்துவந்தேன்—உன்னைக்
கண்டு துயரெல்லாம் போக்கவந்தேன்.
வாடும் மலர்ச்செண்டு போல்கிடக்கும்—இந்த
மைந்தன் உயிரெழுச் செய்வை ஐயா.

கண்ணிகள்

12. நீடும் மதியினைப்போல் நிலவெறிக்கும் செல்வமுகம்
வாடி நிறம்மாறிய(து)என் வயிற்றில்எரி மூட்டு(து)ஐயா.
13. 'பின்னி முடிச்சிடம்மா பிச்சிப்பூச் சூட்டிடம்மா'
என்னும் மொழிகள் இனி எக்காலம் கேட்பன்ஐயா!
14. நெஞ்சிற் கவலையெலாம் நிற்காமல் ஓட்டும்அந்தப்
புஞ்சிரிப்பைக் காணாது புத்திதடு மாறு(து)ஐயா.

விருத்தம்

15. கன்(று)ஒ ழிந்தகா ராவின் கலக்கம்ஒத்(து),
அன்(று)அ ரற்றி அழுத அரிவையை
என்றும் எங்கணும் எவ்வுயி ரும்தொழ
நன்று கண்டமெய்ஞ் ஞானியும் நோக்கியே:

சிந்து

16. 'தாயேநின் மனக்கவலை—ஒழிந்திடத்
தக்கநல் மருந்தளிப்பேன்.
சேயினை எழுப்பிடுவேன்—விளையாடித்
திரியவும் செய்திடுவேன்.

17. 'நாவிய கடுகுவேண்டும்—அதுவும் ஓர்
நாவுரி தானும் வேண்டும்.
சாவினை அறியாத—வீட்டினில்
தந்ததா யிருக்கவேண்டும்.

18. 'பக்கமாம் பதிகளிலே—சென்றுநீ
பார்த்(து) இது வாங்கிவந்தால்
துக்கமும் அகலும் அம்மா—குழந்தையும்
சுகமாக வாழும் அம்மா.'

தாழிசை

19. என்(று) உரைத்த மொழிகேட்(டு) அவ் வேழை மார்பில்
ஏந்திஅணைத் திடுமகனோ(டு) ஊரில் எங்கும்
சென்றுகடு(கு) இரந்துவெறுங் கைய ளாகித்
திரும்பிமுனி திருவடியைச் சிரமேற் கொண்டு,

ஆசிரியப்பா

20. 'புவியெலாம் நிறைந்த புகழோய்! புலவர்
கவியெலாம் நிறைந்த கருணையங் கடலே!
ஊரெலாம் அலைந்தேன்; ஒவ்வொரு மனையும்
ஏறி இறங்கினேன்; என்குறை உரைத்தேன்.
ஏழை ஒருமகள்—ஏழை யலா(து) எவர்
ஏழைக்(கு) இரங்குவர்?—என்கதை கேட்டு
மார்போ(டு) அணைத்த மதலையைக் கண்டு
மாறாக் கண்ணீர் வடிவதை நோக்கி
'ஆறாத் துயரம் அடைந்தனள் இவள்' எனப்
பரிவு கொண்(டு)என் பக்கம் நின்று
நாவிக் கொழித்த நாவுரிக் கடுகையும்
அளந்(து)என் மடியில் அளித்திட வந்தனள்.
யானும்,
இட்ட கடுகை ஏற்பதன் முன்னம்,
'தாயரே! நீவிர் தங்கும் மனைஇது

சா(வு)அறி யாத தனிமனை தானோ?
தந்தை தாயர் தமக்கை தங்கை
மைந்தர் எவரும் மரித்ததும் உண்டோ?
உரைத்திடும்' என்றேன். உரைகேட்(டு) அவரும்,
'வினவியது என்னை? விரிநீர் உலகில்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றார்
இறந்தார் என்கை இயல்பே அம்மா!
காலையில் உதித்த செங்கதிர்ச் செல்வன்
மாலையில் தளர்ந்து மறைவதும் இலையோ?
இம்மா நிலத்தில் இயற்கையின் குறிப்பெலாம்
அம்மா நீயும் ஆய்ந்திலை போலும்!
இறந்தவர் எண்ணிலர்; இருப்பவர் சிலரே.
பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும்
உலகின் இயற்கை; ஒழித்தலும் எளிதோ?'
என ஆங்கு,
தேறுதல் மொழிகள் தெரிந்தவை கூறிக்
கண்முன் சான்றுகள் காட்டி நின்றனர்.
யானும், உன்
கட்டளை உணர்ந்து கவலை கைம்மிக
மற்றொரு வீட்டின் வாயிலிற் சென்றேன்.
அங்குளார்,
கடுகினை அளந்து கட்டிவைத்(து), 'அம்மா!
உழுதவர் இந்நாள் உலகில் இல்லை;
விதைத்தவர் அன்றே விண்ணுல(கு) எய்தினர்;
காத்தவர் காலமும் கழிந்து விட்டது;
அடிமையும் இறந்துநாள் ஐந்தா றுகுது.
காலனை எவரே கடக்க வல்லவர்?'
என்று கூறினர். என்செய ஐயா?'

புத்தர்பிரான் விடை

விருத்தம்

21. 'இம்மா நிலத்து(இவ்) வுண்மையெலாம்
யானும் அறியச் செல்கின்றேன்;
அம்மா நீயும் உன் மகனை
அடக்கம் செய்போ' என்(று) உரைத்தான்
வெம்மா வினையின் வேர்அறுத்து
விளங்கும் ஞான ஒளிகண்(டு) இங்(கு)
எம்மா தவருந் தொழு(து) ஏத்த
எழிலார் கமலத்(து) எழுந்தோனே.

—தேசிக விநாயகம் பிள்ளை

IV. பலவகை

1. நெய்தல்

கழிமலர்ந்த காவிக் களிவண்டு பாடக்
குழிமலர்ந்த நீலங் குறுமுறுவல் கொள்ளும்;
குழிமலர்ந்த நீலங் குறுமுறுவல் கொள்ளப்
பொழில்மலர்ந்த பூம்புன்னை நுண்தாது சிந்தும்.

—பழம் பாடல்

2. போர் யானை

கொடிமதில் பாய்ந்(து)இற்ற கோடும் அரசர்
முடிஇடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோள் கிள்ளி களிறு.

—முத்தொள்ளாயிரம்

3. மாவளவன் குதிரை

சாலிஅரி சூட்டால் மடைஅடைக்கும் நீர்நாடன்
மாலும் மழைத்தடக்கை மாவளவன்—கால்இயல்மா
மன்னர் முடிஉதைத்து மார்பகத்துப் பூண்உழக்கிப்
பொன்உரைகல் போன்ற குளம்பு.

—பழம் பாடல்

4. தமிழ்

ஓங்க லிடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருள்கடியும்—ஆங்(கு) அவற்றுள்
மின்நேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்நேர் இலாத தமிழ்.

—பழம் பாடல்

5. சந்திர களங்கம்

பெரியோ ருழையும் பிழைசிறி(து)உண் டாயின்
இருநிலத்துள் யாரும் அறிதல்—தெரிவிக்கும்
தேக்கும் கடலுலகில் யாவர்க்கும் தெள்ளமுதம்
வாக்கும் மதிமேல் மறு.

—பழம் பாடல்

6. பாலைவனம்

1. தீய அக்கொடிய கான கத்தரை
திறந்த வாய்தொறும் நுழைந்தஅச்
சாயை புக்கவழி யாதெ னப்பரிதி
தன்க ரங்கொடு திளைக்குமே.

2. ஆடு கின்றசிறை வெம்ப ருந்தின்நிழல்
அஞ்சி அக்கடு வனத்தைவிட்(டு)
ஓடு கின்றநிழல் ஒக்கும் நிற்கும்நிழல்
ஓர்இடத்தும்உள அல்லவே.

3. செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார்
செய்த(து) ஒக்கும்அச் செந்த ரைப்பரப்(பு);
அந்நெ ருப்பினில் புகைதி ரண்ட(து)ஒப்(பு)
அல்ல(து) ஒப்புறு அதனி டைப்புறு.

4. அணிகொண்ட குரக்கினங்கள் அலைகடலுக்(கு) அப்பாலை
மணல் ஒன்று காணுமல் வரைஎடுத்து மயங்கினவே.

—சயங்கோண்டார்

7. பேய்கள்

1. பெருநெ டும்பசி பெய்கல மாவன,
பிற்றை நாள்முனை நாளின் மெலிவன,
கருநெ டும்பனங் காடு முழுமையும்
காலுங் கையும் உடையன போல்வன.

2. வன்பி லத்தொடு வாதுசெய் வாயின,
வாயி னுல்நிறை யாத வயிற்றின,
முன்பி ருக்கின் முகத்தினும் மேற்செல
மும்மு ழம்படும் அம்முழந் தாளின.

3. வற்ற லாக உலர்ந்த முதுகுகள்
மரக்க லத்தின் மறிபுறம் ஒப்பன,
ஒற்றை வான்தொளைப் புற்றெனப் பாம்புடன்
உடும்பும் உள்புக்(கு) உறங்கிடும் உந்திய.

4. கொட்டு மேழியுங் கோத்தன பல்லின,
கோம்பி பாம்பிடைக் கோத்(து) அணி தாலிய,
தட்டி வானைத் தகர்க்குந் தலையின,
தாழ்ந்து மார்பிடைத் தட்டும் உதட்டின.

5. அட்ட மிட்ட நெடுங்கழை காணிலென்
அன்னை அன்னையென் றலுங் குழவிய,
ஒட்டல் ஒட்டகங் காணில்என் பிள்ளையை
ஒக்கும் ஒக்கும்என்(று) ஒக்கலை கொள்வன.

6. துஞ்ச லுக்(கு)அணித் தாம்என முன்னமே
சொன்ன சொன்ன துறைதொறும் பேயெலாம்
அஞ்ச லித்(து)ஒரு காலக லாமல்அவ்
வணங்கி னுக்(கு)அரு காக இருக்கவே.

—சயங்கொண்டார்

8. பிறவிக் குணம்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்த(து)ஒரு கல்வி மனப் பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

—ஔவை

9. ஆடம்பரப் புலவர்

விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்,
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்,—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும், அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

—ஔவை

10. வினாவிடை

'தேரு லீப்புரவி வார ணத்தொகுதி
திறைகள் கொண்டுவரு மன்னநின்
தேயம் எ(து)?உனது நாமம்எது? புகல்.'
'செங்கை யாழ்தடவு பாணகேள்?
வாரும்! ஒத்தகுடி நீரு(ம்)நானு(ம்). மக
தேசன் ஆறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்(து)அ ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்.
நீரும் இப்பரிசு பெற்று மீளவர
லாகும்; ஏகும்அவன் முன்றில்வாய்:
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரும் நிற்கும்ஒரு வேம்புநிற்கும்; உயர்
பனையும் நிற்கும்; அதன் அருகிலே
அரசும் நிற்கும்அர சைச்சு மந்தசில
அத்தி நிற்கும் அடை யாளமே.

11. விகடராமன் குதிரை

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்(து)இரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி.

—காளமேகப் புலவர்

12. மோர்

காரென்று பேர்படைத்தாய் ககனத்(து) உறும்போது;
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்;
வாரொன்று மென்கூந்தல் ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய்; முப்பேரும் பெற்றாயே.

—காளமேகப் புலவர்

13. நாகதேவன் இட்ட உணவு

வாயில்ஒன்று கல்லும்ஒன்று நெல்லுமான அன்னமும்
வாடலாக ஆறுமாதம் வைத்திருந்த கத்திரிக்
காயில்இட்ட கறியும்உப்பி லாதகஞ்சி வண்ணமும்
காம்பொடிந்த ஓர்அகப்பை கைப்பிடித்த வண்ணமும்
தூயதாய்த் துலக்கலின்றி அழுக்கடைந்த பாத்திரம்
தூக்கஉள் அசுத்தநீர் துறுத்துவந்த நேர்த்தியும்
ஓயலின்றி ஈக்கள்வீழ்ந்து மொலுமொலென்ற சட்டியும்
உடன்கொணர்ந்த நாகதேவன் ஊண்மறப்ப(து) இல்லையே!

—அந்தகக் கவி வீரராகவ முதலியார்

14. உபதேசம்

ஒன்(று)என்(று)இரு; தெய்வம் உண்(டு)என்(று) இரு; உயர்
செல்வமெல்லாம்
அன்(று)என்(று)இரு; பசித்தோர் முகம்பார்; நல்
அறமும் நட்பும்
நன்(று) என்(று)இரு; நடுநீங்காமலே நமக்(கு)
இட்டபடி
என்(று) என்(று)இரு; மனமே உனக்கே உப
தேசம் இதே.

—பட்டினத்தார்

15. நகர் வளம்

(மூத்த பள்ளி)

1. சோதி மாமணி வீதி நெருக்கும்
சுரும்பு பாடி இரும்பும் உருக்கும்
சாதி நால்வளம் நீதி பெருக்கும்
தடத்து வாளை குடத்தை நெருக்கும்
போதில் மேய்ந்(து)இள மேதி செருக்கும்
புலமெல் லாம் தண் மலர்விண் டிருக்கும்
ஆதி நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே.

(இளைய பள்ளி)

2. தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலைவாய்க் கன்னல் ஆலை உடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தம் சாறுயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாம் தன் பதியிற் கிடைக்கும்
மத்தம் சூடும் மதோன்மத்தர் நாடு
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே.

—முக்கூடற் பள்ளு

16. மழைக் குறிகள்

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி;—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே;
நேற்றும் இன்றும்கொம்புசுற்றிக் காற்றடிக்குதே;—கேணி
நீர்ப்படுஞ் சொறித்தவளை கூப்பிடுகுதே;
சேற்று நண்டு சேற்றைக்கிள்ளி ஏற்றடைக்குதே;—மழை
தேடியொரு கோடி வானம் பாடியாடுதே;
போற்றுதிரு மால்அழகர் ஏற்றமாம்பண்ணைச்—சேரிப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக்கொள்ளுமே.

—முக்கூடற் பள்ளு

17. மலை வளம்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.

—திரிகூடராசப்புன் கவிராயர்

18. நூவன்

1. புலியொடு புலியைத் தாக்கிப் போர்மத யானை சாய்க்கும்
வலியவர் திரிகூடத்தில் மதப்புலிச் சிங்கன் முன்னே
கலிகளுங் கதையும் பேசிக் கையிலே ஈட்டி வாங்கி
எலிகளைத் துரத்தும் வீரன் ஈப்புலி நூவன் வந்தான்.

2. கரிக்குருவிக்குக் கண்ணியுங் கொண்டு
காணுங் கோழிக்குப் பொரியுங் கொண்டு
வரிச்சிலைக் குளுவரிற் கவண்டன் மல்லன்
வாய்ப்பான நூவனும் வந்தானே.

3. கொட்டகைத் தூண்போல் கால்இலங்க
ஒட்டகம் போலே மேல்இலங்க
கட்டான திரிகூடச் சிங்கன் முன்னே
மட்டிவாய் நூவனும் வந்தானே.

—திரிகூடராசப்பன் கவிராயர்

19. விண்ணப்பம்

1. வற்றாச் சமுத்திரமே வள்ளலே வான்பொருளே
சித்தர் உளத்தில் தெளிவே நிராமயமே!

2. துன்புறும் என்நெஞ்சத் துயரமெலாம் தீர்க்கவெனக்(கு)
அன்(பு)உருவாய் நின்ற அருளே நிராமயமே!

3. தாயிருக்கப் பிள்ளை தளரா(து) ஒருபோதும்.
நீயிருக்க நான்தளரல் நேரோ நிராமயமே?

—மஸ்தான் சாகிபு

20. மாலைச் சூரியன்

விருத்தம்

1. அடிவானத்தே அங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்!
இடி வானத்(து) ஒளி மின்னல் பத்துக் கோடி
எடுத்(து)அவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே
மொய்குழலாய் சுழற்றுவதன் மொய்ம்பு காணாய்
வடிவான(து) ஒன்றாகத் தகடு இரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்!

2. அமைதியொடு பார்த்திடுவாய் மின்னே, பின்னே
அசைவுறும்ஓர் மின்செய்த வட்டு; முன்னே
சமையும்ஒரு பச்சைநிற வட்டம் காண்பாய்!
தரணியில்இங்(கு) இதுபோல்ஓர் பசுமை உண்டோ?
இமைகுவிய மின்வட்டில் வயிரக் கால்கள்
எண்ணில்லா(து) இடையிடையே எழுதல் காண்பாய்!
உமைகவிதை செய்கின்றாள், எழுந்து நின்றே
உரைத்திடுவோம் பல்லாண்டு வாழ்க என்றே.

அகவல்

3. பார்! சுடர்ப் பரிதியைச் சூழவே படர் முகில்
எத்தனை தீப்பட்(டு) எரிவன! ஓகோ!
என்னடீ இந்த வன்னத்(து)இயல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! செழும் பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! வெம்மை தோன் ருமே
எரிந்திடும் தங்கத் தீவுகள்! பாரடீ!
நீலப் பொய்கைகள்! அடடா! நீல
வன்னம் ஒன்றில் எத்தனை வகையடீ!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை! கரிய பெரும் பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடும் தங்கத்
தோணிகள், சுட ரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ் சிகரங்கள்! காணடி. ஆங்கு
தங்கத் திமிங்கிலம் தாம் பல மிதக்கும்
இருட் கடல்! ஆஹா! எங்குநோக் கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்.

—பாரதி

21. ஒளியும் இருளும்

வான மெங்கும் பரிதியின் சோதி;
மலைகள் மீதும் பரிதியின் சோதி;
தானை நீர்க்கடல் மீதிலும் ஆங்கே
தரையின் மீதும் தருக்களின் மீதும்
கானகத்திலும் பற்பல ஆற்றின்
கரைகள் மீதும் பரிதியின் சோதி;
மானவன்தன் உளத்தினில் மட்டும்
வந்து நிற்கும் இருள் இது வென்னே!

— பாரதி

22. பூமி

1. வருணன் மஞ்சன மாட்டவும் வானிடை இரவி
இருள்கை யா(து)ஒளிர் திருவிளக்கு ஏந்தவும் இளங்கால்
தருணம் ஓர்ந்துமுன் விசிறவும் தழல்புகை தரவும்
கருணை கூர்பவள் காசினி எனும் உயர் கன்னி.

2. நீல வானவி தானத்தின் கீழ் நிலை நிறைந்து
வாலி தாய வெண் மதிமுதல் உடுக்கணம் வழங்கும்
கோல வான்சுடர் விளக்கினிற் குவலயம் விரித்துச்
சால நல்லிருள் போர்த்(து) இனி(து) உறங்குவள் தரைமான்.

3. தாரகைக்குள கதிர்களுக்(கு) இலை;நல சசியல்
நேரம் விட்டொளிர் கதிர்களுக்(கு) இலை;ஒளி நிறைந்த
சூரி யற்குள கதிர்களுக்(கு) இலை;இலை சுடர்க்கே
பார்ம கட்குள கதிர்பசி இருள்கடி பான்மை.

—ரா. இராகவையங்கார்

I. வல்வில் ஓரி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் கடை யெழு வள்ளல்கள் என்று சிறப்பிக்கப்பெற்ற ஏழு பேர்களில் வல்வில் ஓரி என்பவன் ஒருவன். அவன் கொல்லி மலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவனாகிய ஒரு சிற்றரசன்; வீரத்திலும் கொடையிலும் சிறந்தவன். ஒரு முறை வில்லை வளைத்து



அம்பை எய்தால் அந்த அம்பு பல பொருள்களை ஒருங்கே துளைத்துச் செல்லும்படி செலுத்தும் வன்மையை அவ்வீரன் பெற்றிருந்தான். அவ்வாறு எய்யும் வில்லுக்கு 'வல்வில்' என்ற பெயர் வழங்கும். ஓரி யென்னும் இயற்பெயரை யுடைய அவன் அத்தகைய வன்மையை உடையவனாக இருந்ததனால் 'வல்வில் ஓரி' என வழங்கப்பெறுகிறான். இராமபிரானுக்கும் அத்தகைய வன்மை இருந்தமையின் அவரை 'வல்விலிராமன்' என்று பெரியோர் வழங்குவர்.

வல்வில் ஓரியின் வில்வன்மையையும் ஈகைச் சிறப்பையும் ஒருங்கே புகழ்ந்து வன்பரணர் என்னும் புலவர்பெருமான் ஒருவர் ஒரு செய்யுள் இயற்றியிருக்கிறார். அது புறநானூற்றில் 152-ம் செய்யுளாக அமைந்திருக்கின்றது. இசையில் வல்ல பாணன் ஒருவன் தன் சுற்றத்தாரோடு ஒரு மலைச் சாரலில் கண்ட காட்சியையும் பெற்ற பேற்றையும் வருணிப்ப தாக அப்பாட்டு உள்ளது. அதிற் கண்ட வரலாறு வருமாறு:—

நெருங்கி அடர்ந்த காட்டுக்குள்ளே யானையின் முழக்கமும் புலியின் கர்ஜனையும் காட்டுப் பன்றியின் ஆரவாரமும் எங்கள் காதைத் துளைத்தன. நிலத்திலே அங்கங்கே பாம்புப் புற்றுகளும் உடும்புகளும் எங்களுக்கு நடுக்கத்தை விளைவித்தன. நானும் விறலியும் என் சுற்றத்தினரும் சென்றுகொண்டிருந்தோம்.

விர்ரென்று ஒரு சத்தம் கேட்டது. நாங்கள் திடுக்கிட்டோம். என்ன மாயம்! மலைபோல நின்றுகொண்டிருந்த யானை யொன்று இடிபோல முழங்கிப் பொத்தெனக் கீழே விழுந்தது. அதன் மேலே பாய்வதற்காக வாயைப் பிளந்துகொண்டிருந்த புலியொன்று காடு முழுவதும் கிடுகிடுக்கும்படி கத்திக்கொண்டு சுருண்டு தரையில் உருண்டது. அதன் வாயிலிருந்து இரத்தம் அருவிபோலப் பாய்ந்தது. புலி விழுந்ததோ இல்லையோ, உடனே அருகில் ஓடிக்கொண்டிருந்த கலைமான் ஒன்று துடிதுடித்து விழுந்து உயிர் நீத்தது. அந்த மானுக்கு அப்பால் உரலைப் போன்ற தலையையுடைய காட்டுப் பன்றி ஒன்று நின்றிருந்தது. அதுவும் அடுத்தபடி தரைமீது உருண்டு மாய்ந்தது. எல்லாவற்றையும் கண் இமைக்கும் நேரத்தில் ஊடுருவிச் சென்ற ஓர் அம்பு கடைசியாக அங்கிருந்த ஒரு புற்றினுள்ளே சென்றது. அங்கும் அது வீணாகச் செல்லவில்லை. புற்றிலே கிடந்த உடும்பு அதற்கு இறுதி இரையாக ஆயிற்று.

எல்லாம் மிக விரைவில் நடந்தன. அம்பு யானையின்மேல் மின்னலைப்போல் பாய்ந்ததுதான் தெரியும். அதன் பிறகு அது தன் செயலால் தன்னைப் புலப்படுத்திக்கொண்டதே யொழிய, அதைக் கண்ணால் பார்க்க இயலவில்லை. உடம்பு துளைக்கப்பட்ட யானையும், பிளந்த வாய் ரத்தம் கக்கக் கிடந்த புலியும், பதறி விழுந்து மடிந்த மானும், காட்டுப்பன்றியும், உடும்பும் அந்த அம்பின் வேகத்தையும் வெம்மையையும் கூர்மையையும் எங்களுக்கு விளக்கிக்கொண்டு பிணமாகக் கிடந்தன.

இந்த நிகழ்ச்சியைக் கண்டு ஸ்தம்பித்துப்போயிருந்த எங்களுக்குமுன் சிறிது தூரத்தே ஒரு வீரன் தோன்றினன். அம்பா அவற்றைக் கொன்றது? வல்வில் வேட்டையிலே சிறந்த அவனல்லவா கொன்றான்! நான் அவனை அடிமுதல் முடிவரையில் பார்த்தேன்.

'இப்படி அம்பை எய்யும் வேடனும் உலகில் இருக்கிறானா? இவன் இந்த மிருகங்களைக் கொன்று விற்கும் பொருட்டு வேட்டைசெய்பவனாகத்தோன்றவில்லையே. இவனுடைய உடல் அமைப்பும், முகமலர்ச்சியும், இவன் அணிந்துள்ள ஆபரணங் களும், மார்பிலே பூசிய சந்தனமும் இவனை வெறும் வேடுவனாகக் காட்டவில்லை. இவன் சிறந்த செல்வன்; வீரன். ஆயின், இவன் யாராக இருக்கலாம்?' என்று நான் யோசனை செய்ய லானேன். சட்டென்று எனக்கு ஒரு நினைவு உண்டாயிற்று. 'இவன் கொல்லி மலைக்குத் தலைவனாகிய ஓரியாக இருப் பானோ? அல்லவோ? அவனாகத்தான் இருக்கவேண்டும்' என்று எண்ணினேன். அவனும் வரவர எங்களை நெருங்கினான். 'சரி, நாம் ஒரு தந்திரம் செய்து பார்ப்போம். அப்போது உண்மை தெரிந்துவிடும்' என்று கருதி, என்னுடன் இருந்தவர்களைப் பார்த்து, 'நான் இப்போது பாடப்போகிறேன். விறலி, நீயும் சேர்ந்து பாடு; மிருதங்கத்தைச் சரிபண்ணிக்கொள்ளுங்கள்; யாழில் சுருதி சேர்த்துக்கொள்ளுங்கள்; பெருவங்கியத்தை

ஊதத் தொடங்குங்கள்; சல்லரி வாத்தியத்தையும் ஆகுளி யென்னும் சிறு பறையையும் பதலை யென்னும் ஒரு கண் மாக்கிணையையும் அடிக்க ஆரம்பியுங்கள். எங்கே, என் கையில் அந்தப் பிரம்பைக் கொடுங்கள்' என்று எல்லோரையும் சித்தப்படுத்தினேன். அந்தக் கானகத்தில், யானையும் புலியும் மானும் பன்றியும் உடும்பும் அவன் வல்வில் வெற்றிக்கு அடையாளமாகக் கிடந்த களத்தில், எங்கள் கானம் தொடங்கியது. நான் உத்ஸாகமாகப் பாடினேன். பாடிக்கொண்டே நாங்கள் அவனை அணுகினோம்.

அவனை அணுக அணுக எனக்கு அவனே ஓரி யென்பது உறுதியாயிற்று. இல்லாவிட்டால் அவனது நடையிலே அவ்வளவு கம்பீரம் இருக்குமா? எங்கள் பாட்டை அவன் எவ்வளவு கவனமாகக் கேட்டான்! பாணர் பாட்டைக் கேட்டுக் கேட்டுப் பழகிய காது அவன் காது. அந்தப் பாட்டை அளந்தறியும் சிறந்த கருவி அவன் செவி. வேட்டை செய்த அயர்ச்சியில் எங்கள் சங்கீதம் ஒரு மருந்தாக அவனுக்கு உதவியது. அவன் முகமலர்ந்தான்.

அந்த மலர்ச்சி என் குரலுக்கு ஒரு கிளர்ச்சியைக் கொடுத்தது. கீழ்ஸ்தாயியிலே சஞ்சாரம்செய்தேன். மத்திமஸ்தாயிக்குச் சென்று ஸ்வரங்களை மாறி மாறிப் பாடினேன்; மேலும் சென்றேன். என் குரல் உச்சஸ்தாயியையும் எட்டியது. எனக்கே என் பாட்டு என்றும் இல்லாத இன்பத்தை ஊட்டியது. 'இவன் கானகத்திலே வாழும் முரட்டு வேடனல்லன்; கலைநுகர்ச்சியினால் இன்பத்தை அடையும் ஓரிதான்' என்பதை ஒவ்வொரு கணமும் உணர்ந்தேன்.

ஒரு வகையாக ஆரோகண அவரோகணக் கிரமப்படி பாடிய பிறகு, பாட்டை முடிவுக்குக் கொண்டுவரலாமென்ற எண்ணம் உண்டாயிற்று. பிறகு அவன் பெயர் வரும் சிறு பகுதியைக் கடைசியில் அமைத்துப் பாடினேன். அதுவரையில் நிமிர்ந்த முகத்துடனும் ஆவலுடனும் பாட்டைக் கேட்டுக்

கொண்டிருந்த அவன் தன் பெயரை நான் சொன்னவுடன் நாணத்தால் முகங் கவிழ்ந்தான். உயர்ந்த மக்களின் இலக்கணம் அல்லவா அது? 'இவன் ஓரி என்பதற்கு இதைக்காட்டிலும் வேறு ஆதாரம் என்ன வேண்டும்?' என்று நான் குதூகலித்தேன்.

பாட்டை முடித்துவிட்டு, 'நாங்கள் எவ்வளவோ தேசங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறோம்; வீரர்களையும் வேட்டையாடுவோர்களையும் கண்டு களித்திருக்கிறோம். ஆனாலும் உன்னைப் போல இவ்வளவு சிறப்பாக வேட்டை புரிவோர் யாரும் இல்லை' என்று நான் கூறினேன். அவன் நான் கூறியதைக் கேளாதவன்போல் இருந்ததன்றி, பின்னும் நான் ஏதேனும் தன்னைப் புகழ்ந்து பேசுவேனோ என்று எண்ணி நான் மேலும் பேசுவதற்குமுன் தன் கையிலிருந்த புழுக்கிய மான் மாமிசத்தைத் தந்தான். அவன் வேட்டையாடிப் பெற்ற மானின் தசை அது. நல்ல தேனையும் குடிக்கத் தந்தான். புத்துருக்கு நெய்யைப்போல இருந்தது அது. நாங்கள் உண்டு பசியாறினோம். அவன் அதோடு நிற்கவில்லை. தன் மலையிலே பிறந்த பொன்னையும் பல மணிகளையும், 'இவைகளை அங்கீகரித்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லிக் கொடுத்தான்.

அவன் கொல்லி மலைக்குத் தலைவனாகிய வல்வில் ஓரியென்பதைப்பற்றிப் பின்னுமா சந்தேகம் இருக்கும்? அவன் தனக்கென்று ஒன்றையும் வைத்துக்கொள்ளாமல் கொடுப்பவன். அவன் செய்த வேட்டை எங்களுக்கு உணவைக் கொடுத்தது. அவன் பெற்ற பொன்னும் மணியும் எங்களுக்குப் பரிசிலாக உதவின.

II. நமது நாற்கால் நண்பர்கள்

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

பல்லாயிர வருடங்களுக்கு முந்திய காலத்தில், மனிதர்கள் வீடுகளில்லாமல் காடுகளில் மிருகங்கள்போல் வாழ்ந்து வந்தார்கள். அந்தக் காலத்தில், அவர்கள், மிருகங்களை வேட்டையாடிக்கொண்டும், மிருகங்களால் வேட்டையாடப் பட்டும் இருந்தார்கள். இப்படி யிருந்துவந்த நெடுங்காலத்துக்குப் பின்பு அவர்கள் காட்டு மிருகங்களை வீட்டு மிருகங்களாகப் பழக்கி, யுத்தகாலங்களிலும் சமாதான காலங்களிலும் தங்களுக்கு வேண்டியவாறு பலவகையாக உபயோகப்படுத்து வாராயினர்.

இவ்வாறு பழக்கப்பட்ட மிருகங்கள், மனிதர்களுக்குப் புலிகள்போலப் பகையாயிராமல் நாய்கள்போல நட்பாயிருப் பதனால், 'நமது நாற்கால் நண்பர்கள்' எனத்தக்கவையாயின. பழக்கப்பட்ட மிருகங்களில் பிரதானமானவை யானை, குதிரை, ஒட்டகம், மாடு என்பவைகளாம். இவைகளைப் பற்றிய சில விவரங்கள் பின் வருவன:

யானை தரையில் வாழும் பிராணிகள் எல்லாவற்றிலும் மிக்க பருமனும் பலமும் உடையதாயிருப்பதோடு, மற்ற மிருகங்களுக்கில்லாத வேறு சிறப்புத்தன்மைகளும் பெற்றுள்ளது. அதன் உடலின் பெருமையை நோக்க, மிகவும் குறுகிய கழுத்தும் சிறுத்த கண்ணும் உடையது. யானையின் கால்கள் ஏனைய மிருகங்களின் கால்கள்போலன்றி, முடக்கில்லாமல், நேரானவைகளாய், தூண்கள் போன்றிருக்கின்றன. அதன் மூக்கும் மேலுதடும் ஒன்றுசேர்ந்து அமைந்த உறுப்பாகிய துதிக்கை விசேடமான தென்பது விரித்துரைக்க வேண்டிய

தில்லை. அந்தத் துதிக்கை புல், குழை முதலிய உணவுப் பொருள்களையும் தண்ணீரையும் எடுத்து வாயின் உள்ளே சேர்த்தற்கும், உத்திரம் போன்ற பெரிய பொருள்களையும் ஊசிபோன்ற மிகச் சிறிய பொருள்களையும் இலகுவாகப் பற்றியெடுத்தற்கும், மனிதரின் கையும் விரலும் செய்யும் வினைகளுள் பலவற்றைச் செய்தற்கும் ஏற்றதாயிருக்கின்றது. யானைக்குக் கழுத்துக் குறுகியதாயிருத்தலால், போதிய அளவு குனிந்து புல் மேயவும் தண்ணீர் குடிக்கவும் இயலாத குறையைத் துதிக்கை நிரப்புகின்றது.

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னமே, எகிப்தியர்களால் யானைகள் யுத்தங்களில் உபயோகிக்கப்பட்டன; பிந்திய காலங்களில் அவை பகைவர்களைக் கொம்புகளாற் குத்தித் துளைத்தும் துதிக்கையாற் கட்டி நெரித்தும் காலால் மிதித்து நசுக்கியும் கொல்லவும், கோட்டை வாயிற் கதவுகளை முட்டித் திறக்கவும் உடைக்கவும், பீரங்கிகளைக் கொண்டுபோகவும் உபயோகப்படுத்தப்பட்டன. சமாதான காலங்களில் காடுகளில் வெட்டி வீழ்த்தப்பட்ட விருட்சங்களை வேண்டுமிடங்களுக்குக் கொண்டுபோகவும், புலி வேட்டையாடுவோர் அச்சமின்றி ஏறிச் செல்லவும் உதவுகின்றன. நாடு நகரங்களில், ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பெற்று மேலே அம்பாரி வைத்துக் கட்டப்பட்டு, அரசர் பிரபுக்கள் மணமக்கள் முதலியோர் கோலாகலமாகப் பவனி வரும் வாகனமாகவும் ஆடம்பர வைபவங்களைச் சிறப்பிக்கின்ற கம்பீரமான காட்சிப் பொருளாகவும் உபயோகப்படுகின்றன.

குதிரைகளுக்குக் குளம்புகள் பல்லாயிர வருடங்களுக்கு முன் ஒவ்வொரு காலிலும் நான்காயிருந்தன வென்றும், அவைகள் காலகதியில் மூன்றாகி, இரண்டாகி, ஒன்றாகியிருக்கின்றன வென்றும், குதிரைகளின் பிறப்பிடம் அமெரிக்கா வென்றும், அவைகள் அங்கிருந்து மற்றக் கண்டங்களுக்குப் பரவின

வென்றும், யாது காரணத்தினுலோ அமெரிக்காவில் ஒன்று மில்லாமல் ஒழிந்துபோயின வென்றும், கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபோது அங்கே குதிரையே யில்லாதிருந்ததென்றும், பின்பு அங்கே குதிரைகள் ஐரோப்பியரால் கொண்டுபோகப்பட்டு, விருத்தியாயின வென்றும், இப்போது அமெரிக்காவைப் போலக் குதிரை மிகுந்த இடம் வேறில்லை யென்றும் பிராணி நூலார் வாயிலாகவும் சரித்திராசிரியர் வாயிலாகவும் அறிகின்ருேம்.

குதிரைகள் சரித்திர காலத்துக்கு மிகமிக முற்பட்ட சில காலத்திலேயே மனிதராற் பழக்கப்பட்டும், அவர்கள் எழுதவும் படிக்கவும் பழகுதற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே ஏறி நடத்தப்பட்டும், உணவாக உபயோகிக்கப்பட்டும் வந்தன வென்று விஞ்ஞான சாஸ்திரம் வெளியிடுகின்றது.

குதிரைகள் இங்கிலாந்து முதலிய சில தேசங்களில் உழு தொழில் புரிகின்றன. அவைகள் எல்லாத் தேசங்களிலும் ஏறு குதிரையாகவும், பொதிக் குதிரையாகவும், வண்டிக் குதிரையாகவும் உபயோகப்படுகின்றன. இவையன்றி வேறு பல வேலைகளிலும் உபயோகமாகின்றன. படையில் ஒரு முக்கியமான பகுதி குதிரைப்படை யென்பது கூறவேண்டியதில்லை.

ஒட்டகங்கள், ஒரு திமில் உடையனவும் இரு திமில் உடையனவு மென, இருவகைப்படும். முன்னதை அரேபியாவிலும் பின்னதை மத்திய ஆசியாவிலும் காணலாம். குதிரைகளைப் போலவே ஒட்டகங்களுக்கும் முதற் பிறப்பிடம் அமெரிக்கா வென்பது குறிக்கத்தக்கது. இக்காலத்தில் அவை ஆஸ்திரேலியாவுக்கும் வேறு பல விடங்களுக்கும் கொண்டு போகப்பட்டு விருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஒட்டகம், வளமற்ற வறண்ட காடுகளில் வளர்வனவும் மற்ற மிருகங்களெல்லாம் வெறுப்பனவுமான கசப்பும் முள்ளு முள்ள செடிகளை விருப்போடு மேயும். உவர்த் தண்ணீரை உவப்புடன் குடிக்கும். அதற்கு இரைப்பையில் பல நாட்களுக்குப் போது

மான தண்ணீரைச் சேமித்து வைக்கும் பல சிறு பைகளுண்டு. அதன் பாதங்கள் 'பாவடி' என்றவாறு பரந்தவைகளாய் மணலில் அழுந்தாதவையா யிருக்கின்றன. இத்தன்மைகளால் ஒட்டகம் தண்ணீர் கிடையாததாய்க் கடல்போல விரிவான மணல் வனாந்தரங்களைக் கடப்பதற்குத் தக்க சாதனமாயிருக் கின்றது. இவ்வாறிருத்தல்பற்றி, ஒட்டகத்துக்கு 'வனாந்தரக் கப்பல்' என ஒரு பெயரும் வழங்குகின்றது.

அராபியர் ஒட்டகத்தின் இறைச்சியை உணவாகவும், பாலைப் பானமாகவும் உபயோகிப்பார்கள். அதன் உரோமத் தைக் கொண்டு உடுக்கும் ஆடையும், கூடாரச் சீலையும் நெய்வார் கள். அதன் முதுகின்மேல் அம்பாரிபோல் அமைத்த 'படவீடு' என்னும் கூடாரத்தில் குடும்பத்தோடிருந்து பிரயாணஞ் செய் வார்கள். இவ்வாறாக ஒட்டகம் அராபியருக்குத் தின்ன மாமிசமும், குடிக்கப் பாலும், உடுக்க ஆடையும் உதவுவதோடு குடியிருக்க வீடாயும், சவாரியும் யுத்தமுஞ் செய்யக் குதிரை யாயும், மூட்டை சுமக்கப் பொதி யெருதாயும், பாலைவனக் கடலைக் கடக்கக் கப்பலாயும் பலவகைகளில் பயன்படுகிறது.

ஒட்டகங்கள் ஒரு திமிலும் இரு திமிலும் உடைமை காரணமாக இருவகைப்பட்டதுபோல, மாடுகளும் (காளை களும் பசுக்களும்) திமில் உள்ளவை, திமில் இல்லாதவை யென இருவகைப்பட்டிருக்கின்றன. இந்தியா தேசத்து மாடுகள் திமில் உடையவை. ஐரோப்பிய கண்டத்து மாடுகள் திமில் இல்லாதவை.

இந்தியா தேசத்தைப் போல மாடுகள் இன்றியமையாத தேசம் உலகத்தில் வேறெதுவு மில்லை யென்றும், இந்தியருள் நூற்றில் எண்பது பங்கினருக்கு விவசாயமே பிழைப்புத் தொழிலா யிருக்கிற தென்றும், எஞ்சிய இருபது பங்கினரில் பதினைந்து பங்கினர் விவசாயத்தோடு நெருங்கிய தொடர் புடைய தொழில்களையே சீவனோபாயமாக உடையரென்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

குடியானவர்கள் விவசாய வேலைகள் பெரும்பாலனவற்றை மாடுகளைக்கொண்டே செய்விக்கின்றார்கள். உழுதல், விதைத்தல் முதலாக அறுவடை யிறுதியாகப் பயிர்த்தொழில் முழுவதும் இயந்திரங்களைக்கொண்டு செய்யும் அமெரிக்கர் முதலிய மேல்நாட்டுக் கிருஷிகர்போல இந்திய விவசாயிகள் மாடுகளுக்குப் பதிலாக இயந்திரங்களை உபயோகிக்கும் காலம் சமீபமாக இல்லை. காளைமாடுகள் உழுதலும், பரம்படித்தலும், தண்ணீர் இறைத்தலும்செய்கின்றன. நெல்முதலிய விளைபொருள்களைப் பொதி யெருதுகளாகச் சுமந்தும், வண்டிக்காளைகளாக வண்டியில் வைத்து இழுத்தும் மணல், சேறு, மேடு, பள்ளம் மிகுந்துள்ள கஷ்டமான பாதைகள் வழியாகக் களஞ்சியங்கள், சந்தைகள் முதலிய இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. எண்ணெய் வித்துக்களைச் செக்கில் ஆட்டலும், கரும்புகளை ஆலையில் அரைத்தலுமாகிய உழைப்புக்களைச் செய்கின்றன. பசுமாடு, அநேகமாக, வருடந்தோறும் ஒரு கன்று ஈனுதலோடு அனைவருக்கும் மிக்க உபயோகமான பாலும் கொடுக்கின்றது. ஆணும் பெண்ணு மாகிய மாடுகளெல்லாம் நிலத்தை வளப்படுத்தி விளைவை மிகுவித்தற்கு உதவுகின்ற சாணமும் மூத்திரமும் தருகின்றன.

கொல்லப்பட்ட மாட்டு மாமிசம், உலகத்திற் பெரும் பாலாரான மனிதருக்கு உணவாகின்றது. அதன் தோல், பதனிடப்பட்டுப் பலவாறு உபயோகப்படுகின்றது. கொம்புகள் சிமிழ்களாகவும் சீப்புக்களாகவும் கத்திக்கைபிடிகளாகவும் பானபாத்திரங்களாகவும் உருவாக்கப்படுகின்றன. எலும்புகள் தந்தங்களுக்கு அடுத்தபடியாக உபயோகப்படுகின்றன. தோற்கழிவுகளையும் குளம்புகளையும் கொதிக்கவைத்து வச்சிரப் பசை உண்டாக்கப்படுகின்றது. நரம்புகளைச் சக்கிலியர்களும் பிறரும் நூலுக்கும் கயிற்றுக்கும் பதிலாக உபயோகிக்கின்றார்கள். குளம்புகளிலிருந்து செய்யப்படும் எண்ணெய் தோல்களை மிருதுவாக்குதற்கு மிகச் சிறந்த சாதனமாயுள்

ளது. கொழுப்பிலிருந்து மெழுகுவர்த்திகள் செய்யப்படுகின்றன. இவ்வாறாக மாட்டின் உடம்பில் எந்தப் பகுதியும் பயன்படாமல் அவமாவதில்லை.

தமிழ்மொழியில் 'மாடு' என்ற சொல் 'செல்வம்' என்றும் பொருள்படுவதுபோலவே, வேறு பல பாஷைகளிலும் மாட்டைக் குறிக்கும் சொற்களுக்குச் செல்வம் என்ற பொருளும் இருத்தல் கவனிக்கத்தக்கது. இதன் காரணம், மிகப் பழங் காலத்திலிருந்த மனிதருக்கு மாடே செல்வமாயிருந்ததேயாம். அக்காலத்தில் அதிக மாடுகளுடையவர்கள் அதிகச் செல்வமுடையவர்களாயும், குறைந்த மாடுகளுடையவர்கள் குறைந்த செல்வமுடையவர்களாகவும் மதிக்கப்பட்டிருந்தார்கள்.

மனிதர் காட்டு மாட்டைப் பிடித்து அடக்கி வசப்படுத்திய காலமே நாகரிகம் துவங்கிய காலமென்றும், அதுவரையும் நிலைப்பிடமின்றி மிருகங்கள்போலத் திரிந்துகொண்டிருந்த மனிதர்களே தமக்கு அகப்பட்ட மாடுகள் தப்பியோடிவிடாமல் கட்டுப்பட்டுத் தங்கி நிற்கும் (தொழு) இடங்களையும் அவைகளைத் தாங்கள் பக்கத்திலிருந்து காத்துக்கொண்டிருக்கும் (குடில்) இடங்களையும் நிலைவரமாக உபயோகிப்பாரானார்களென்றும், பசியை நீக்க வேட்டையாடும் அவசியமின்றித் தம் வசமாயிருந்த மாமிசத்தைப் புசித்தும், வாடை குளிர்களால் வருந்தாமலிருக்க அந்த மாடுகளின் தோலை உரித்துப் போர்த்தும், சுமைகளைச் சுமத்தலும் இழுத்துக்கொண்டு போதலும் ஆகிய வேலைகளை அம்மாடுகளைக்கொண்டு செய்வித்தும் வாழ்வார்களானார்களென்றும், இவ்வாறாக நாகரிகத்துக்கு முதற்காரணம் மாடு என்றும் விஞ்ஞான சாஸ்திரிகள் விளம்புகின்றார்கள்.

III. மாலைச் சூரியன்

சி. சுப்பிரமணிய பாரதி

அடிவானத்தில் சூரிய கோளம் தகதகவென்று சுழன்று கொண்டிருந்தது; இருபது கோடி மின்னல்களை எடுத்து ஒரு சக்கரமாக வார்த்துச் சுழற்றுவதுபோலிருந்தது. ஆரம்பத்திலேதான் கண் கூசும். சிறிது நேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்தால் பிறகு கண் கூச்சம் தீர்ந்துபோய்விடும். இரண்டு வட்டத் தகடுகள் ஒன்றின்மேலொன்று சுழலும். கீழேயிருப்பது சுத்தமான மின் வட்டம். மேலே மரகத வட்டம். பச்சை வர்ணம்! அற்புதமான பசுமை!

பச்சைத் தகடு பின்புறத்திலிருக்கும் மின் தகட்டை முழுதும் மறைத்துக்கொண்டிருக்கும். ஆயினும் இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக் கிரணங்கள் கண்மீது பாயும்.

பார்! சூரியனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவதுபோலத் தோன்றுகிறது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனைவித வடிவங்கள்! எத்தனையாயிர விதமான கலப்புக்கள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சி விட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனைவகை நீலம்! எத்தனைவிதச் செம்மை! எத்தனைவகைப் பசுமை! எத்தனைவகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்! எரிகின்ற தங்க ஜரிகைக்கரை போட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கே பார்த்தாலும் ஒளித்திரள், வர்ணக்களஞ்சியம். போ, போ, என்னால் அதை வர்ணிக்க முடியாது!

IV. 25,000,000,000,000

பெ. நா. அப்புஸ்வாமி

ஒருநாள் இடைவேளை நாங்கள் சாப்பிட்டுவிட்டு விளையாடிக்கொண்டிருந்தோம். மணி அடித்தது. உடனே விளையாட்டை நிறுத்திவிட்டு, வியர்வையைத் துடைத்துக்கொண்டு, வகுப்புக்குள் போனோம். நாங்கள் போனதும் எங்கள் உபாத்தியாயர் சுந்தரராமையரும் உள்ளே வந்தார். நாங்கள் உட்கார்ந்தோம். கரும்பலகையில் 25,000,000,000,000 என்றும், அதன் கீழே மறு வரியில் 50,000,000,000,000 என்றும் எழுதியிருந்தது.

சங்கரன் எப்பொழுதும் நாக்குத் துடுக்கு உள்ளவன். அவன் எழுந்திருந்து 'ஸார், இதென்ன ஸார் இது? ஒரே பூஜ்யமாக இருக்கிறதே! ஒன்று, இரண்டு, மூன்று......முதல் வரியில் பன்னிரண்டு பூஜ்யம். இரண்டாவது வரியில் பதின் மூன்று பூஜ்யம். மொத்தம் இருபத்தைந்து பூஜ்யமா?' என்றான்.

'அத்தனை பூஜ்யத்தையும் பார்த்தால் உங்கள் மார்க்காக இருக்குமோ என்று தோன்றுகிறது' என்று சிரித்தார் சுந்தரராமையர். நாங்களும் சிரித்தோம்.

'சொல்லுங்கள், ஸார்' என்றான் சங்கரன்.

'சொல்லுகிறேன். அதற்காகத்தான் எழுதியிருக்கிறேன்.'

'எனக்கு என்னவோ சைபரைக் கண்டால் பிடிக்கவில்லை. வேறு எதையாவது பற்றிச் சொல்லுங்கள், ஸார்' என்றான் மணி.

'ஆஹா, மணி அவர்களே, அப்படியே செய்கிறேன். நான் கொல்லத்துக்குப் போன கதை சொல்லியிருக்கிறேனா?'

'இல்லை, ஸார்! சொல்லுங்கள்' என்று ஆவலுடன் கேட்டான் மணி.

'உங்கள் மாதிரியாக நானும் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது விடுமுறை நாட்கள் வந்தன. அப்பொழுது என் மாமாவும் நானுமாக ரயிலேறி மேற்கே கொல்லத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாமென்று போனோம். நாங்கள் பெரிய கப்பல் ஒன்றையும் பார்த்ததில்லை. "கடற்கரை ஓரத்தி லுள்ள பட்டணங்கள் எல்லாவற்றிலும் பெரிய துறைமுகம் இருக்கும். அங்கே பல கப்பல்கள் இருக்கும்" என்பது எங்களுடைய எண்ணம். ஆகவே, கொல்லத்தில் உள்ள துறைமுகத்தையும் அங்கே நிற்கும் கப்பல்களையும் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்தோம்.

'நாங்கள் கொல்லம் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி, சாப்பிட்டுவிட்டுத் துறைமுகத்தைப் பார்க்கப் புறப்பட்டோம். அரபிக் கடல் மேற்குக் கடல் என்று நாங்கள் படித்திருந்தோம். ஆகையால் மேற்கே பார்த்துத்தான் போகவேண்டுமென்று தீர்மானித்தோம். ஒரு சாலையாவது நேரே மேற்காகப் போகவில்லை. சுமாராக மேற்கைப் பார்த்துப் போகிற சாலை ஒன்றின் வழியே சிறிது தூரம் போனோம். சாலை இரண்டாகப் பிரிந்தது. எந்த வழியாகப் போவதென்று தெரியவில்லை. அதனால் அங்கே வந்தவர் ஒருவரைப் பார்த்து, "துறைமுகம் எங்கே இருக்கிறது?" என்றோம். அவர் எங்களைச் சற்று வெறித்துப் பார்த்துவிட்டு, "இவ்விடே" என்றார். "எவ்வளவு தூரம்?" என்றோம். மறுபடியும் அவர் சற்று யோசித்துப் பிறகு "கூப்பிடு தூரம்" என்றார். நாங்கள் நடந்தோம், நடந்தோம்; துறைமுகத்தைக் காணவில்லை. கடலோசையும் கேட்கவில்லை. நாங்கள் ஒரு மைல் தூரத்துக்கு மேல் நடந்திருப்போம். இந்த மாதிரியாக ஐந்தாறு தடவை ஆயிற்று. நாங்கள் கேட்ட ஒவ்வொருவரும் புதிதாக வேறு ஒரு திக்கைக்

காட்டுவார்கள், கூப்பிடு தூரம் என்பார்கள். நாங்கள் நடந்து நடந்து கால் சோர்ந்துவிட்டது.

'கடைசியாக ஒருவனைக் கேட்டோம். அவன் இன்னொரு திக்கைக் காட்டினான்; கூப்பிடு தூரம் என்றான். "எங்கே, கூப்பிடு பார்ப்போம்" என்றேன். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பதில் சொல்லாமல் போய்விட்டான். நாங்களும் துறைமுகத்தைப் பார்க்காமல் வீடு வந்து சேர்ந்தோம். இது தான் நான் கொல்லத்துக்குப் போன கதை.'

'நல்ல வேடிக்கை, ஸார்.'

'கூப்பிடு தூரம் என்றால் எவ்வளவு தூரம் ஸார்?' என்றான் சங்கரன். நாங்கள் சிரித்தோம்.

'அது ஆளைப் பொறுத்தது; தொண்டையைப் பொறுத்தது; அக்கம் பக்கத்திலுள்ள ஓசைகளைப் பொறுத்தது. பட்டணத்தில் கூப்பிடு தூரம் என்றால் ஐம்பது அல்லது நூறு கஜம் என்று வைத்துக்கொள்ளலாம். கிராமாந்தரத்தில், அதிலும் வயற் காட்டில், அரை மைலுக்குக்கூடக் குரல் கேட்கும்.

'அதனால் கூப்பிடு தூரம் என்பது ஒரு குறிப்பிட்ட அளவு அன்று; நாம் கஜம், பர்லாங்கு, மைல் என்று சொல்வது போல் அது ஆகாது.

'அப்புறம் இன்னுமொன்று கேட்டிருக்கிறீர்களா? உங்கள் பாட்டியிடம் போய் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊர் எவ்வளவு தூரம் என்று கேட்டால், அது "இரண்டு நாழிகை வழி", அல்லது "மூன்று நாழிகை வழி" என்று சொல்லுவாள்; கேட்டிருக்கிறீர்களா?'

'கேட்டிருக்கிறோம்.'

'அப்படி என்றால் என்ன?'

'நாழிகை வழி என்றால் ஒரு மைல் அல்லது ஒன்றரை மைல் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன்' என்றான் ஒருவன்.

'அது சரிதானு, ஸார்?' என்றுன் மற்றொருவன்.

'சரியும், தப்பும். "ஒரு நாழிகை வழி" என்றால் சாதாரணமாய் நடப்பவர்கள் ஒரு நாழிகையில் நடக்கக்கூடிய தூரம். ஒரு நாழிகை என்றுல் எவ்வளவு?'

'ஒரு நாளுக்கு அறுபது நாழிகை. அதாவது இருபத்து நான்கு மணிக்கு அறுபது நாழிகை........ஒரு நாழிகை என்றுல் இருபத்து நாலு நிமிஷம், ஸார்' என்று கணக்குப்போட்டுச் சொன்னுன் மணி.

'சரி. சாதாரணமாய் நடக்கிறவன் மணிக்கு மூன்று மைலுக்குமேல் மூன்றரை மைல்வரை நடக்கமுடியும். அதனுல் ஒரு நாழிகை நேரத்தில் ஒரு மைலுக்கு மேல் கிட்டத்தட்ட ஒன்றரை மைல் வரை நடக்க முடியும். தெரிந்ததா?'

'தெரிந்தது.'

'முன்னுல் சொன்னது காதினுடைய சக்தியைக்கொண்டு வைத்த அளவு; இது நேரத்தைக் கொண்டு வைத்த அளவு. இதைப் போலவே, "இரண்டு நாள் பிரயாணம், மூன்று நாள் பிரயாணம்" என்று சொல்வதுமுண்டு. முன்னுளிலே சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போகவேண்டுமானுல் கால் நடையாகவோ மாட்டுவண்டி மார்க்கமாகவோ போவார்கள். தினம் பத்துப் பதினைந்து மைலுக்குமேல் போகமுடியாது. அதனுல் இந்தப் பிரயாணத்துக்கு இரண்டு மூன்று மாதம் பிடிக்கும். இதை "இரண்டு மாத வழி" என்றுவது, "மூன்று மாத வழி" என்றுவது சொல்வதுமுண்டு. ஆயிரம் மைல் என்று சொல்வதற்குப் பதிலாக இப்படிச் சொல்வதும் ஒரு வழி அல்லவா?'

'இப்பொழுது ரயில் சீக்கிரம் போய்விடுகிறதே, ஸார்!'

'ஆமாம். அதனுல் ரயில் மார்க்கத்தை மனத்தில் வைத்துக்கொண்டு கல்கத்தா ஒன்றரை நாள் பிரயாணம் என்றும் சொல்லலாமல்லவா ?'

'ஆகாயவிமானம் இன்னும் சீக்கிரம் போகுமே.'

'நேரே போனால் ஆறு ஏழு மணி நேரத்தில்கூடப் போகமுடியுமாம். அதனால் ஆகாயவிமானக் கணக்கை வைத்துக்கொண்டு "கால் நாள் பிரயாணம்" என்று சொன்னால் என்ன?'

'நன்றாகச் சொல்லலாம்.'

'யுத்த விமானம் மணிக்கு முந்நூறு முந்நூற்றைம்பது மைல் பறக்குமாம்! ஆகவே அரைக்கால் நாளில் அது கல்கத்தாவுக்குப் போகும். அதனால் "யுத்த-விமானி அரைக்கால் நாள் வழி" என்று சொல்லக்கூடாதா, ஸார்?'

'சொல்லலாம்; நான் சொல்ல வந்த விஷயம் உங்களுக்கு நன்றாக விளங்கிவிட்டது. கரும்பலகையில் ஏதோ எழுதியிருக்கிறதே, அதை இப்பொழுது சற்றுக் கவனிக்கலாமா?—எங்கே, மணி, கரும்பலகையில் எழுதியிருக்கிற தொகையைப் படி.'

'இருபத்தைந்து, பன்னிரண்டு பூஜ்யம்.'

'வெகு அழகு! சரியாகப் படி.'

சிறிது நேரம் யோசித்துவிட்டு, 'இருபத்தைந்து லக்ஷம் கோடி. அது என்ன ஸார்?'

'அது மைல்.'

'இத்தனை மைல் எதற்கு ஸார்?'

'நமக்கு மிகவும் கிட்ட உள்ள நக்ஷத்திரம், நம்மிடமிருந்து அவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று வானசாஸ்திரிகள் கணக்குப் போட்டிருக்கிறார்கள்.'

'அது என்ன நக்ஷத்திரம்?'

'தெற்கே "திரிசங்கு" என்று ஒரு நக்ஷத்திரக் கூட்டம் இருக்கிறது. அதைச் சேர்ந்தது. அது நம்மிடமிருந்து 25,000,000,000,000 மைல் தூரத்தில் இருக்கிறது.'

'சூரியனைவிடத் தூரமா?'

'சூரியன் நம்மிடமிருந்து ஒன்பது கோடி மைல் தூரத்தில் இருக்கிறது.'

'சரியாகவா?'

'ஒன்பது கோடியே முப்பது லக்ஷம்; இந்த நக்ஷத்திரம் அதைவிட இரண்டு லக்ஷத்து எழுபத்தையாயிரம் மடங்கு அதிக தூரத்தில் இருக்கிறது.'

'அடேயப்பா! எவ்வளவு தூரம்?'

'மனத்தாலும் இந்த தூரத்தைக் கிரகிப்பது கஷ்டம். யுத்த விமானம் நிற்காமல், பெட்ரோல் விட்டுக்கொள்ளத் தங்காமல், நேரே போய்க்கொண்டே இருந்தால் கிட்டத்தட்ட ஒரு கோடி வருஷத்தில் இந்த நக்ஷத்திரத்திற்குப் போய்ச் சேரும்.'

'அத்தனை வருஷமாகுமா?'

'ஆகும். இந்த நக்ஷத்திரந்தான் நமக்கு மிகவும் கிட்ட உள்ள நக்ஷத்திரம். மற்ற நக்ஷத்திரங்கள் எல்லாம் இதைவிடத் தூரமானவை. இந்த நக்ஷத்திரத்தை யுத்த விமானத்தின் கணக்கை வைத்துக்கொண்டு "ஒரு கோடி வருஷ வழி" என்று சொல்லலாம். ஆனால் இதனிலும் தூரமாயுள்ள நக்ஷத்திரங் களைப்பற்றி எப்படிக் குறிப்பிடுவது? ஆகையால், யுத்த விமானத்தையும்விட வேகமாகப் போகக்கூடியது ஒன்றை வைத்துத்தான் இவற்றைக் குறிப்பிட முடியும்.'

'அப்படி என்ன இருக்கிறது?'

'ஒளி, அதாவது வெளிச்சம் இருக்கிறது. இது விநாடிக்கு லக்ஷத்து எண்பத்தாறுயிரம் மைல் வீதம் போகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.'

'விநாடிக்கா ஸார், லக்ஷத்து எண்பத்தாறுயிரம் மைல்?'

'ஆமாம். ஒரு விநாடிக்குத்தான், ஒரு லக்ஷத்து எண்பத்தாறுயிரம் மைல். அப்பேர்ப்பட்ட வண்டியில் ஏறிக்கொண்டு புறப்பட்டாலும் இந்த நக்ஷத்திரத்துக்குப் போய்ச்சேர நாலு வருஷம் ஆகும். அதனால் வெளிச்சக் கணக்கை வைத்துக் கொண்டு பார்த்தால் இது நாலு வருஷதூரம். நக்ஷத்திரங்கள் நம்மிடமிருந்து இருக்கும் தூரங்களை இப்படித்தான் கணக் கிட்டிருக்கிறார்கள். தெரிந்ததா?'

'தெரிந்தது.'

'ஸார், ஒன்று மறந்துவிட்டீர்களே.'

'என்ன?'

'அடுத்த வரியில் ஐந்தும் பதின்மூன்று பூஜ்யமும் போட்டிருக்கிறீர்களே, அது என்ன ஸார்?'

'ஆகாசத்திலே எல்லா நக்ஷத்திரங்களையும்விட மிகவும் பிரகாசமான ஒரு நக்ஷத்திரம் இருக்கிறது. அதற்கு "ஸிரியஸ்" என்று பெயர். நம்முடைய தேசத்தில் அதை "லுப்தகன்" என்று சொல்லுகிறார்கள். அது நம்மிடமிருந்து அத்தனை தூரம் இருக்கிறது.'

'எட்டு வருஷ தூரந்தானே, ஸார்?'

'சரி' என்றார் சுந்தரராமையர்.

'உனக்கு மேல்வகுப்பும் எட்டுவருஷ தூரம் இருக்கும்' என்று சிரித்தான் மணி.

V. சங்க இலக்கியங்கள்

எஸ். வையாபுரிப் பிள்ளை

இப்போது கிடைக்கும் பழைய தமிழ்ச் செய்யுட்களிற் சில கிறிஸ்து அப்தத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டவை. ஆதலால் தமிழிலக்கிய சரிதம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தொடங்கியுள்ளது. இப்பெருமை எல்லா மொழிகளுக்கும் உரியதன்று. மலையாள மொழியில் கி. பி. பதினாலாம் நூற்றாண்டிலும், தெலுங்கு மொழியில் கி. பி. பதினோராம் நூற்றாண்டிலும், கன்னட மொழியில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலும் ஆதி யிலக்கியங்கள் தோன்றின. இப்பொழுது பல தேசங்களிற் பயிலப்பட்டுப் பெருஞ் சிறப்புடன் விளங்கும் ஆங்கில மொழியிற்கூட இலக்கியம் முதன்முதலில் தோன்றியது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தான். ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கு, எபிரேயம் முதலிய

ஒரு சில மொழிகளி லுள்ள ஆதி இலக்கியங்களே தமிழிலக்கி யங்களி னளவு பழமை வாய்ந்தவை.

மிகப் பழமையான காலந் தொட்டே தமிழ் சிறப்புற்று வாழ்ந்துவந்த இடம் பாண்டியநாடு என்று கூறுவர். வில்லி புத்தூரார் என்ற கவிஞர்,

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை

என்று தமிழைக் குறித்துக் கூறுகின்றார். இப்பாண்டிய நாட்டிலே தலைநகராகிய மதுரையிலே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்த தென்பது கர்ணபரம்பரைச் செய்தி. கிறிஸ்து அப்தத்தின் இரண்டாம் நூற்றாண்டு இச்சங்கம் இருந்த காலம் என்பர் ஆராய்ச்சியாளர். தமிழ்ச் செய்யுட்களையும் புலவர்களையும் ஆராய்ந்து சீர்தூக்கி மதிப்பிடுதல் இச்சங்கம் செய்துவந்த பணியென்று கூறப்படுகின்றது. நாற்பத்தொன்பது புலவர்கள் இச்சங்கத்தில் இருந்தார்கள் என்பர். சங்கத்தைப் பற்றிய வரலாறு இறையனார் களவியலுரை என்ற நூலிலே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இது கடைச்சங்கம் என்றும், இதற்கு முன் இரண்டு சங்கங்கள் இருந்தன என்றும் களவியலுரை கூறும். தலைச்சங்கம் 4440 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் இருந்தனவாம்.

கடைச்சங்கக் காலத்து நூல்களே நமக்கு இப்போது கிடைப்பவை. இந்நூல்களையே நாம் ‘சங்க இலக்கியங்கள்’ என வழங்குகிறோம். ‘தொல்காப்பியம்’ என்ற பேரிலக்கண நூல் இடைச்சங்கக் காலத்து இறுதியில், அதாவது சுமார் கி. மு. 5000-ல்தோன்றியதென்றும், தலை, இடைச் சங்கங்களிற் பிறந்த ஏனை நூல்கள் கடல்கோட்பட்டு அழிந்துவிட்டன என்றும் பரம்பரை வரலாறு கூறுகின்றது.

சங்க இலக்கியங்களை இரு பெருங் கூறுகப் பகுக்கலாம்: பத்துப்பாட்டு எட்டுத்தொகை யென. பத்துப் பாட்டுக்க

ளாவன: முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றை

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். மலைபடுகடாம் என்ற நூலுக்குக் கூத்தராற்றுப்படை என்ற பெயரும் உண்டு.

முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்ற ஐந்து பாட்டுக்களும் ஆற்றுப்படை என்ற நூல் வகையைச் சார்ந்தவை. கொடையாளி ஒருவனிடம் பெருஞ்செல்வத்தைப் பரிசாகப் பெற்றுத் திரும்பும் கூத்தர் முதலியோர் வழியிலே எதிர்ப்பட்ட இரவலரைக் கண்டு, அக்கொடையாளியின் பெருமையைக் கூறி, அவனிடம் சென்று தாம் பெற்றதுபோல் பெருஞ் செல்வம் பெறுமாறு வழிப்படுத்துதலே இந்நூல் வகையின் கருத்து. ஆறு—வழி; படை—படுத்துதல். ஏனைய ஐந்து பாட்டுக்களில் மதுரைக்காஞ்சி, நிலையாமையை ஓர் அரசனுக்கு அறிவுறுத்தி, இவ்வுலகில் வாழும் நாட்களை உயர்ந்த லக்ஷியங்களை மேற்கொண்டு இனிதாகக் கழித்தல்வேண்டு மென வற்புறுத்துகிறது. குறிஞ்சிப்பாட்டு ஓர் ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தும்பொருட்டு இயற்றப்பட்டதென்று சரித்திரம் வழங்குகிறது. இப்பாட்டுக்களுட் சில அகப்பொருளையும் சில புறப்பொருளையும் பற்றியவை. அகம் என்பது காதல் பற்றிக் கூறும் பகுதி. புறம் என்பது அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைக் கூறும் பகுதி.

பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனும், சோழருள் கரிகாற் பெருவளத்தானும், தொண்டைமான் இளந்திரையனும் பத்துப்பாட்டிற் புகழப் பட்டிருக்கின்றனர்.

எட்டுத் தொகையாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங் குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அக நானூறு, புறநானூறு என்பன. இவற்றை

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியே அகம் புறமென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித் தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியவை; ஏனைய மூன்றும் புறப்பொருள் பற்றியவை. ஐங்குறுநூற்றில் ஐந்நூறு செய்யுட்களும், பதிற்றுப்பத்தில் நூறு செய்யுட்களும், பரிபாடலில் எழுபது செய்யுட்களும், கலித்தொகையில் நூற்றைம்பது செய்யுட்களும் உள்ளன. ஏனைய நூல்கள் ஒவ்வொன்றிலும் நானூறு செய்யுட்கள் உள் ளன. கலித்தொகை கலிப்பாவாலும், பரிபாடல் பரிபாட்டா லும் இயன்றன. மற்றை ஆறு தொகை நூல்களும் ஆசிரியப் பாவால் இயன்றன. அகம் பற்றியவற்றுள் ஐங்குறுநூறு— திணை ஒவ்வொன்றுக்கும் நூறு வீதம்—குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல் என்ற ஐந்து திணைகளுக்குமாக ஐந்நூறு செய்யுட்கள் கொண்டது. புறம் பற்றிய நூல்களுள், ஒவ்வொரு சேரனுக்கும் பத்துச் செய்யுள் வீதம், பத்துச் சேர அரசர் களுக்குரிய நூறு செய்யுட்கள் கொண்டது பதிற்றுப்பத்து. எட்டுத் தொகை நூல்களுள் பரிபாடலுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பு உண்டு. அதிலுள்ள பாட்டுக்கள் பண்முறையால் தொகுக்கப்பெற்று உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்தவை.

கலித்தொகையி லுள்ள தாழிசைகள் இசையோடு பாடுதற்கு ஒத்தனவா யுள்ளன.

தொகைநூல் ஒவ்வொன்றிலு முள்ள செய்யுட்கள் பல புலவர்களால் பாடப்பெற்றவை. அப்புலவர்கள் ஓரிடத்தவ ரல்லர்; ஓரினத்தவரல்லர்; ஒரு காலத்தவருமல்லர்; ஒரு சமயத்தைச் சார்ந்தவரு மல்லர். அவர்களைக் கணக்கிட்டு 'நானூற்று நாற்பத்தொன்பதின்மர்' என்று களவியலுரை கூறும்.

சில புலவர்களுடைய பெயர்கள் காணப்படவில்லை. ஒரு வருக்குக் 'கல்பொரு சிறு நுரையார்' என்று பெயர். அவர் இயற்றிய செய்யுளில்,

கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே

என்று வந்துள்ளது. இங்கே காணப்படும் உவமானத்தி னின்றும் அவருக்குப் பெயர் எழுந்துள்ளமை வெளிப்படை. ஆசிரியர் காலத்தே அவர்க்கு வழங்கிய இப் புனைபெயர் பிற் காலத்தும் வழங்கி அதுவே பெயராக முடிந்திருக்கலாம். அல்லது அவர் பெயர் மறைந்துபோன பிற்பாடு, செய்யு ளின் தொடரினின்றும் ஒரு பெயர் பிற்காலத்தாரால் கொடுக் கப்பட்டும் இருக்கலாம். சில பெயர் முற்கூறியபடியும், சில பெயர் பிற்கூறியபடியும் தோன்றியிருத்தலும் கூடும். உண்மை இதுவென்று இப்போது தெரியக்கூடவில்லை. இங் ஙனம் புனைபெயருள்ளவர்கள் சுமார் இருபத்தைந்து ஆசிரியர் கள். இவர்களை நீக்கிப்போலும் களவியல் உரைகாரர் கணக் கிட்டது.

பெயர் தெரிந்த புலவர்களுள் சுமார் இருபத்தேழு பெண் பாற் புலவர்கள் காணப்படுகின்றார்கள். அதாவது நூற்றுக்கு ஆறு விழுக்காடு கணக்காகின்றது. பொதுமக்களிடையே கல்வி பரவாத முற்காலத்து இவ்வளவாகப் பெண்பாற் புலவர் இருந்தமை பாராட்டுதற்கு உரியது. இவருள்ளே ஒளவை

யார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், பாரிமகளிர் முதலியோர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

தமிழிலே தொகைநூல்கள் மிகப் புராதன காலத்துத் தானே தொகுக்கப்பட்டமை போல, கிரேக்க மொழியிலும் மிகப் பழைய காலத்தில் 'அந்தாலஜி' என்று கூறப்படும் தொகைநூல் தொகுக்கப்பட்டுள்ளதென அறிகின்றோம். கிரேக்கத் தொகைநூலின் வரலாற்றைக் குறித்து ரிச்செர்ட் கார்னெட் என்ற ஆசிரியர் விளக்கமாக எழுதியிருக்கின்றனர். அந்தாலஜி என்ற சொல்லுக்குப் பூந்துணர் என்று பொருள். சுமார் கி. பி. 90-ல் மிலீகர் என்பவரால் இத்தொகைநூல் தொகுக்கப் பெற்றதாம். இத் தொகைநூற் செய்யுட்கள், தெய்வங்களையும், புகழ்பெற்று விளங்கிய அரசர் முதலிய பெரியோர்களையும், பெரு நிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. சுருங்கச் சொல்லல், பொருளாழமுடைமை, நவின்றோர்க் கினிய நன்மொழி புணர்த்தல், பொருளின் ஒருமை என்ற குணங்கள் இவற்றிலே நன்கு விளங்கின என்று சொல்லப்படுகிறது. இவ்வியல்புகளோடு பொருந்திய கிரேக்கத் தொகை நூல் புறநானூறு என்னும் தமிழ்த் தொகைநூலோடு பெரிதும் ஒப்பிடற்பாலதா யுள்ளது. மிலீகரது தொகை நூலுக்குப் பின் நான்கு தொகைநூல்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. இவைகளெல்லாம் அந்தாலஜி என்ற பெயராலேயே வழங்கின. இறுதியில் தொகுக்கப்பட்டது ஜஸ்டினியன் என்னும் அரசன் (கி. பி. 483–565) காலத்தி லாகும். இந்தத் தொகைநூலிலே காதற்செய்யுட்கள் பல துறைகளாகப் பகுக்கப்பட்டுச் சேர்க்கப்பெற்றுள்ளன என்று அறிகிறோம். இதனோடு தமிழ்த் தொகைநூல்களுள் அகப்பொருள் கூறுவனவாய் அமைந்துள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்தும் ஒப்பிடத்தக்கன.

பழமையிலும் பொருளமைதியிலும் செய்யுள் நயத்திலும் மாத்திரமே யன்றி வேறு சில அம்சங்களிலும் இவ்விரு மொழி

களிலு முள்ள தொகைநூல்கள் ஒப்பிடற்குரியன. கிரேக்க நாகரிகம் நீடித்திருந்த காலத்தில் அதன் நிலைமை பலபடியாக மாறிவந்திருக்கின்றது. இம் மாறுபாடுகளுக்கு இடையேயும் கிரேக்கத் தொகைநூல் கிரேக்கர்களுக்குப் புத்துயிர் கொடுத்துதவிய அமிர்த சஞ்சீவினியாய் நீடித்து நிலைத்து வந்திருக்கின்றது. இதுவே போன்றுள்ளன தமிழ்த் தொகைநூல்களும். இரண்டிலும் பழைய நாகரிகங்களும் பழக்க வொழுக்கங்களும் பிரதிபலித்துக் காண்கின்றன. பிற்காலத் தெழுந்த இலக்கியங்களின் நெறியை வரம்பு கட்டுதற்கும் இத்தொகைநூல்கள் உதவின. இவ்வாருகப் பலபடியாலும் இரு தேசத்துத் தொகைநூல்களும் ஒன்ருேடொன்று உவமிக்கக் கூடியனவா யுள்ளன.

தொகைநூற் செய்யுட்களிலே சிறந்து விளங்குகிற சில பொது வியல்புகளை இனிக் கவனிப்போம். பின்வருவது புறநானூற்றுச் செய்யுள்:

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும், தொடைபுணர்ந்(து),
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்(கு) என்றுஞ் சான்ருேர்
சான்ருேர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே.

இது பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இருந்த நட்பினைக் கண்டு கண்ணகனுர் என்ற புலவர் பாடியது. ‘இனம் இனத்தோடு’ என்ற பழமொழியின் கருத்து இச்செய்யுளோடு ஒப்பிடத்தக்கது. சான்ருேர் வெவ்வேறு இடங்களில் தோன்றி வாழ்ந்தபோதிலும் ஒருவரோடொருவர் நெருங்கிய கேண்மை கொள்வர் என்பது செய்யுளின் கருத்து. இதற்கு ஓர் உபமானம் தரப்படுகிறது. பொன்னும் பவளமும் முத்தும் இரத்தினமும் ஒன்றினின் ருென்று வெகு

தூரத்தில் தோன்றியபோதிலும் விலைமிக்க நல்ல அணிகல மொன்று அமைக்குங் காலத்து அவை ஓரிடம் வந்து கோவை பொருந்திச் சேருகின்றன என்பது உபமானம். இதன் அழ கும் நயமும் அறிந்து இன்புறத்தக்கன. 'சாலார் சாலார் பாலராகுபவே' என்பது சொல்லியொழிக்க வேண்டியதாத லாலே, அவ்வடியை இலேசாக உச்சரித்து விட்டுவிடுதல் வேண்டும். உபமானம் செல்லும் வரையும் எதுகை மோனை நயங்களால் செய்யுளடிகள் சிறந்து விளங்குவதும், அது முற்றிய பின், கருத்தின் தனியாற்றலே துணையாக மோனை முதலிய நயமின்றியும் அழகுபடக் கடைசி யிரண்டடிகள் அமைந்திருப்பதும் புலவரின் கவித்வ சக்தியை அறிவுறுத்து கின்றன. கருத்துக்கேற்ற சொற்கள், சுவைத்துத் தேர்ந் தெடுத்த சொற்கள், கட்டுரைச் சுவைபட அமைந்த சொற் செறிவு, எளிமையும் ஆற்றலும் படைத்த செய்யுள் நடை, கம்பீரமான ஓசை நயம், பொருள் செல்லும் கதியும் செய்யு ளின் கதியும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் அமைதி—இவை யனைத்தும் இச் செய்யுளில் விளங்குகின்றன. இவ்வியல்புகள் சங்கச் செய்யுட்களுட் பெரும்பாலனவற்றிற் காணப்படுகின் றன. இத்தகைய செய்யுட் செல்வம் நம்மவரால் என்றும் போற்றுதற் குரியது.

VI. 'ப்ளாஞ்செட்'

'எஸ்.'

ப்ளாஞ்செட் என்பது ஒரு புதிய பரிமளக் கூந்தல் தைலம் அன்று; பந்தயக் குதிரையும் அன்று; அரைச்சாண் அளவுள்ள ஒரு ஜாதிக்காய்ப் பலகை. மிருதுவாக இழைத்துப் பளபளப்பாக வார்ணிஷ் இட்டிருக்கும்; ஆனால் இது சாதாரணப் பலகை அன்று. 'செட்டியாரே, ஒரு சிலேட்டுப் பலகை கொடுங்கள்' என்று நாம் உரக்கக் கேட்கிற கடைகளில் இது அகப்படாது. வாசலில் வில்லை போட்ட சேவகன் நிற்கிற ஷாப்புக்களில் நுழைந்து, விநயத்துடன், அங்குள்ளவருடைய காதில் மெல்லச் சொல்லிக் கேட்டால், ஐந்து ரூபாய்க்கு இது கிடைக்கும். இதன் சக்தியும் விலையை அனுசரித்தே இருக்கும். ஏனெனில், இது பரலோகத்தி லிருக்கிற தேவதைகளோ, காலம் சென்ற நம்முடைய முன்னோர்களோ, இவ்வுலகத்திற்கு வருவதற்கு ஏற்ற ஓர் இன்றியமையாத பாலம் ஆகும்.

இதன் மூலம் அவர்களை அழைப்பது சுலபம். மேஜையின்மேல் ஒரு வெள்ளைக் கடிதத்தை விரிப்பதற்கு ஒரு க்ஷணம், அதன்மேல் இந்த ப்ளாஞ்செட்டை வைப்பதற்கு ஒரு க்ஷணம், இதன் பிறகு, மேஜைக்கு இருபுறமும் வீற்றிருக்கும் இருவர் தங்களுடைய விரல்களை ப்ளாஞ்செட்டின் மீது வைக்க ஒரு க்ஷணம், ஆக மூன்று க்ஷணத்தில் இதன் சக்தியை அறியலாம். சாதனம் செய்து பழகியவர்களுக்கு இரண்டரை க்ஷணத்திலேயே பலன் கிடைக்கும்.

நம்முடைய இஷ்ட தேவதையையோ, காலஞ்சென்ற முன்னோரில் ஒருவரையோ மனதில் தியானித்துக்கொண்டு, நமக்கு


விடை தெரியவேண்டிய எந்தக் கேள்வியையும் உரக்க வெளியிட வேண்டியதுதான் தாமதம்; உடனே அந்தத் தேவதையோ முன்னோரோ, இஷ்டப்பட்டால் அந்தக் கேள்விக்கு விடை கொடுப்பர். அதாவது, ப்ளாஞ்செட் அந்தக் கடிதத்தின் மேல் நகர ஆரம்பிக்கும். அதன் கால்களில் ஒன்று சீவின 'பென்ஸில்' ஆகையால், அது நகர நகரக் கடிதத்தின்மேல் எழுத்துக்கள் தோன்றும். அவைகளை நாம் வாசித்துக்கொள்ள வேண்டியதுதான்.

என்னுடைய நண்பர்களில் ஒருவர் பெரிய அதிகாரி; தவிரவும், பெரிய குடும்பி. தம்மை ஊரைவிட்டு ஊர் மாற்றுவது, தமக்குச் சம்பள உயர்வு கிடைப்பது, பிள்ளைகளுக்குப் பரீக்ஷையில் ஜயம் கிடைப்பது, பிள்ளை பிறக்குமா பெண் பிறக்குமா என்பது இவைபோன்ற முக்கிய விஷயங்களிலெல்லாம், அவர் தம்முடைய ப்ளாஞ்செட்டின் அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளத் தவறுவதில்லை. அனேகமாய் விடைகளும் சரியாகப் பலிக்கின்றன என்பதே அவருடைய அபிப்பிராயம்.

விதிவசமாக, எனக்கு முழங்காலில் வாயுப் பிடிப்புப் பல வருஷங்களாக என்னை உபத்திரவித்துக்கொண்டே இருந்தது. அதற்காக இதுவரையில் நான் அழைத்திருக்கிற டாக்டர்களுடைய பெயரும் விலாசமும் சேர்த்து எழுதினால் ஒரு புஸ்தகமாகும். நான் சாப்பிட்டிருக்கிற மருந்துகளின் சீசாக்களுடைய 'கார்க்குக்களை' மாத்திரம் ஒன்றின்மேல் ஒன்றாக நிற்கவைத்தால், மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில் கோபுரத்தை விட ஒன்றரை முழ உயரம் அதிகமாகவே இருக்கும். இந்த ஸ்திதியில் என்னுடைய நண்பர் தம்முடைய ப்ளாஞ்செட்டின் அற்புத பலனைப் பற்றி அடிக்கடி சொல்வதை நான் கேட்டு விட்டுச் சும்மா இருக்கமுடியுமா?

ஒருநாள் எனக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. யாதெனில், 'இப்படித் திரிகாலஞானியாகிய ஒரு தேவதை நாம்

அழைக்கும்போதெல்லாம் தயாராக ப்ளாஞ்செட்டில் வந்து இறங்கும்பொழுது, அது தெரிந்து சொல்லக்கூடாத விஷயமா இந்த மானிட வைத்தியர்கள் எனக்குச் சொல்லப்போகிறார் கள்?' என்பதே. அன்று இரவு போஜனம் முடிந்தவுடன், என்



நண்பரையும் அவருடைய மந்திரப் பலகையையும் என்னு டைய வீட்டிற்கு வரவழைத்து, ஆவலுடன் மேஜையின்மேல் சுத்தமான 'டபிள் பூல்ஸ்காப்' கடிதம் ஒன்றைப் பரப்பி, நண் பரை எதிர்ப்பக்கம் இருக்கவைத்து, பிரச்னத்திற்கு உட்கார்ந் தேன். தேவதையும், தனக்கு ஏவவிடப்போகிற கடினமான வேலையைத் தெரிந்துகொண்டோ—வேறு எந்தக் காரணத்தினா லேயோ—கால்மணி சென்றும், அரைமணி கழித்தும், உத்தரம் கொடுக்கவில்லை. ஆனால் நானும் 'முயற்சி உடையார் இகழ்ச்சி

அடையார்' என்பதை மறக்கவில்லை. என் சிநேகிதரோ பொறுமைக் களஞ்சியம். என் முழங்கால் பிடிப்பு வழக்கத்தைக் காட்டிலும் அன்று அதிகமாகவே இருந்தபடியால், இரண்டு மணி நேரமாகியும் நாற்காலியை விட்டு எழுந்திருக்காமல் உட்கார்ந்துகொண்டிருப்பதே எனக்கும் சவுகரியமாயிருந்தது. அப்படியே வீற்றிருந்து, ப்ளாஞ்செட்டின்மேல் வைத்த கையை எடுக்காமல் ஒரு நிமிஷத்திற்கு ஒரு தடவை 'நல்ல மருந்தாகச் சொல்லு', 'மருந்தின் பெயரைச் சொல்லு' என்று நான் ஜபித்துக்கொண்டே இருந்தேன்.

கடைசியாக இராத்திரி சுமார் பன்னிரண்டு மணிக்கு 'ட்சேஞ்ளாப்' என்று விடை கிடைத்தது. என்னுடைய சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. இதுவரையில் நான் எத்தனையோ 'காட்லாக்' புஸ்தகங்களைப் புரட்டியதாலும் அனுபவத்தாலும் கூடியவரையில் எல்லா மருந்துப்பெயர்களும் எனக்குத் தெரிந்தவைகளே. ஆகையால் எங்கே 'திப்பிலி மருந்து', 'பெயின் பாம்'—இம்மாதிரி ஒரு சாதாரண மருந்தின் பெயரையே இந்தப் பிளாஞ்செட்டும் எழுதப்போகிறதோ என்பதே இதுவரை எனக்கு இருந்த விசாரம். ஆனால் 'ட்செஞ்ளாப்' என்பதோ அப்படி யில்லை. ஒருவரும் அதைச் சாதாரணம் என்று இகழ முடியாது. அவசரத்தில் பெயரை உச்சரிக்கக் கூட முடியாத இப்புதிய மருந்து எனக்காகவே சிருஷ்டித்தாற் போல் தோன்றிற்று. இந்தச் சந்தோஷத்தில் மிகுதியுள்ள இராப்போதுக்கு எனக்கு உறக்கம் வரப்போவதில்லை என்பது திண்ணம். ஆகையால் அப்பொழுதே எனக்குத் தெரிந்த ஒவ்வொரு கம்பெனிக்கும் மருந்தை உடனே 'வீ. பீ.'யில் அனுப்பும்படியாகக் கடிதங்கள் எழுதினேன். சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய ஊர்களுக்கெல்லாம் எழுதினேன். ஸ்வதேசி, பரதேசி என்கிற வித்தியாசம் பார்க்காமல் எல்லாக் கடைகளுக்கும் எழுதினேன். டில்லி அதிக தூரம். அவ்விடத்திலிருந்து மருந்து வந்து சேருவதற்கு முன் மற்ற ஊர்களி

லிருந்து மருந்து கிடைத்து, நான் சாப்பிட்டு, வியாதிகூடக் குணமாய்விடு மென்றும், டில்லியிலிருந்து வரவழைப்பது வீண் பொருள் நஷ்டமென்றும் எனக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தபோதிலும் அன்றிரவு என்னுடைய மனசு இருந்த ஸ்திதியில், நான் பொருள் நஷ்டத்தைக் கவனிப்பவனாக இல்லை; ஆகையினால் டில்லிக்கும் எழுதினேன். டாக்கா என்னும் ஊரின் பெயரே எனக்கு எப்பொழுதும் பிடிக்காது. ஏனென்றால், தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்தால் அங்கே தினசரி ஒரு கொலைக்கேசாவது நடந்துகொண்டே இருக்கிறது என்று தெரிகிறது. அப்படியிருந்தும், டாக்காவிலிருக்கும் மருந்து ஷாப்பிற்கும் ஒரு கடிதம் அனுப்பினேன். கையிலிருந்த தபால் கவர்கள் முழுவதும் எழுதித் தீர்ந்த பிறகுதான் நான் எழுதுவதை நிறுத்தி நித்திரையைத் தேடத் தொடங்கினேன்.

சென்னையிலிருந்துதான் முதலில் பதிலை எதிர்பார்க்க முடியும். அதற்கே மூன்று நாள் செல்லும். ஏனென்றால் மத்தியில் ஞாயிற்றுக்கிழமை ஒன்று குறுக்கே புகுந்து காலதாமசம் செய்தது. அந்த மூன்று நாளையும் எப்படியோ கடத்தினேன் கையில் பதில் கடிதம் கிடைத்தது: 'நாங்கள் இந்த மருந்தின் பெயரை இதுவரையில் கேட்டதில்லை. ஆகையால் மருந்தை அனுப்ப முடியவில்லை என்று வருத்தப்படுகிறோம். வேண்டுமானால் சீமைக்கு எழுதி வரவழைத்துத் தருகிறோம்' என்பது அந்தப் பதில். இவருடைய வருத்தம் யாருக்கு வேண்டும்? மருந்தையல்லவோ நான் கேட்டேன்! சென்னபட்டணம் என்பது சிறிய நகரந்தான் என்று எனக்கு நெடுநாளாக அபிப்பிராயம். இவ்வளவு சிறந்த மருந்தைக்கூடத் தயாராக வைத்துக்கொள்ளாத ஊரைப் பற்றி நான் கொண்டிருந்த அபிப்பிராயம் இதனால் ஸ்திரப்பட்டது.

மேலும் இரண்டு மூன்று நாட்களில் பம்பாய் கல்கத்தா கம்பெனிகளிலிருந்து 'நாஸ்தி' என்ற பதிலே கிடைத்தது. ஆனால் அவர்கள் மருந்து இல்லையே என்று சிறிதேனும் வருத்

தப்படவில்லை. எப்படியும் தமிழர்க்குள்ள ஈவு இரக்கம் மற்றவர்களுக்கு இல்லை. தவிரவும் பம்பாய்க்காரன் கடிதத்தில், அந்த மருந்து தற்சமயம் கையில் இல்லாது போனாலும், மூட்டைப் பூச்சிகளைப் போக்கடிப்பதற்கு அதைக் காட்டிலும் உயர்ந்தனவாகப் பலவித மருந்துகள் அவனிடம் இருப்பதாகவும், அவைகளில் ஒன்று டின் ஒன்றுக்கு ஆறணு, டஜன் நாலு ரூபாய், வீ. பீ. செலவு பிரத்தியேகமென்றும் கண்டிருந்தது; கடிதத்தின் அடியில் அச்செழுத்தில் கக்குவான் இருமலுக்கு எப்பொழுதும் முள்ளம்பன்றி மார்க்குள்ள பீடிகளையே உபயோகிக்க வேண்டுமென்ற போதனையும் கொடுக்கப்பட்டிருந்தது.

கல்கத்தா கம்பெனிக்காரன், மருந்தின் பெயரைப் பார்த்தால் ஜப்பான் தேசத்தில் செய்ததாயிருக்கவேண்டுமெனத் தோன்றுவதாகவும், இப்பொழுது அங்கே யுத்தமாயிருக்கிறபடியால், யுத்தம் நின்றவுடன் எழுதி வரவழைத்துத் தருவதாகவும் எழுதினன். டாக்காவிலிருந்து பதிலே வரவில்லை. அநேகமாய், என்னுடைய கடிதத்தைக் கொண்டுபோவதற்குரிய 'தபால் பியூனை'யே கொலை செய்திருப்பார்கள் என்று ஊகித்தேன்.

டில்லியிலிருந்து பதில் வருகிற வரைக்கும் எனக்குத் தாங்கவில்லை. அதற்கு அவசியமும் இல்லாமற் போய்விட்டது. ஏனென்றால் இதற்குள் ஒரு புதிய யோசனை தோன்றிற்று. அன்றிரவு, என்னுடைய நண்பரைத் திரும்பவும் வரவழைத்து, ப்ளாஞ்செட்டின் முன்பு உட்கார்ந்தோம். இந்தத் தடவை நான் சாதாரணக் கேள்வியாகக் கேட்கவில்லை. கேள்வி கேட்பதற்குப் பதிலாக ஒரு பிரார்த்தனை செய்தேன்: 'பிளாஞ்செட்டே, நீ சொல்லிய மருந்தை நீயே கொண்டுவந்து கொடு' என்று மன்றாடினேன். கொஞ்ச நேரம் பதிலே கிடைக்கவில்லை. இருந்தாலும் என் வேண்டுகோளை நான் ஜபித்துக் கொண்டேயிருந்தேன். கடைசியில் பதில் கிடைத்தது, 'உக்கிராண அறையில் பலகையின்மேல் கவிழ்த்து வைத்திருக்கும்

கற்சட்டிக்குள் பார்' என்று. முழங்கால் பிடிப்பையும் லக்ஷயம் செய்யாமல் ஓடிப்போய்க் கற்சட்டியை நிமிர்த்திப் பார்த்தேன்; மருந்தைக் காணோம்; ஓட்டடை இருந்தது. திரும்பவும் ப்ளாஞ்செட்டைப் பிரார்த்தித்தேன். 'கடியாரத்தின் பின் பக்கம் பார்' என்று பதில் கிடைத்தது. எனக்கு இந்தத் தடவை நிரம்பவும் சந்தேகந்தான். இருந்தாலும் விரைவாகக் கடியாரத்தை ஆணியினின்றும் தூக்கிப் பார்த்தேன்; மருந்தைக் காணோம். கடியாரம் கை தவறிக் கீழே விழுந்தது; கண்ணாடி உடைந்தது. எனது நண்பருக்கு மனசு வருத்தம். எனக்குப் படபடப்பு அதிகமாயிற்று. மூன்றாவது தடவையாக உட்கார்ந்து பிரார்த்தித்தேன். இந்தத் தடவை பதில் கிடைத்தது என்னவென்றால், 'ப்ளாஞ்செட் எழுதும் கடிதத்தின் அடியிலேயே மருந்து' என்பதே. அதிக ஆவலுடன் காகிதத்தின் ஒரு மூலையை நான் தூக்கினேன். என் நண்பரும் அங்ஙனமே மற்றொரு மூலையைத் தூக்கினார். இருவர் கையும் ஒன்றோடொன்று முட்டி ப்ளாஞ்செட்டானது தட்டப்பட்டு, மேஜையிலிருந்து கீழே விழுந்தது; விழுந்ததில் அது உடைந்தது. தவிரவும் அது விழுந்த சப்தம் என்னுடைய காதுக்கு 'ஆகாகா' என்று பரிகசித்ததுபோல் கேட்டது.

அது முதல் ப்ளாஞ்செட் உபாஸனை நின்றுவிட்டது. என்னுடைய முழங்கால் பிடிப்பும் ஸ்திரமாகத் தங்கிவிட்டது இடது கையினால் முழங்காலைத் தடவிக்கொண்டே, இவ்வுண்மையான வரலாற்றை நடந்தது நடந்தபடி எழுதி உங்களுக்குத் தெரிவித்தேன். உடைந்துபோனதும் இப்பொழுது சதா மௌனமுள்ளதுமாகிய ஒரு 'ப்ளாஞ்செட்' மலிவான விலைக்குக் கிடைக்கும் என்கிற விஷயத்தையும் இந்தச் சந்தர்ப்பத்திலேயே விளம்பரஞ் செய்கிறேன்.

VII. சோழர்

க. அ. நீலகண்ட சாஸ்திரி

சோழநாட்டின் எல்லைகள் ஆவன மேற்கில் குழித்தலைக் கடுத்த கோட்டைக்கரையும், கிழக்கில் சமுத்திரமும், மற்ற இரண்டு திசைகளிலும் வெள்ளாறு என்ற ஒரே பெயர் கொண்ட இரண்டு ஆறுகளுமாம். வடபால் எல்லையாகக் கூறப்பட்டுள்ள வெள்ளாறு பரங்கிப்பேட்டையில் சமுத்திரத் தில் கலப்பது. மற்றையது புதுக்கோட்டை வழியாய்ச் செல் வது; பாண்டி நாட்டின் வட எல்லையும் இதுவே. ஆகவே, சோழநாடு என்னும் பெயர் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கள் முழுமையையும், புதுக்கோட்டையிலும் தென் ஆர்க்காட்டிலும் சில பகுதிகளையும் சேர்த்துக் குறிக்கும்.

இந்நாட்டில் ஆதிகாலந் தொட்டு அரசுபுரிந்து வந்த மன்னர்கள் சோழ வமிசத்தைச் சார்ந்தவர்கள். நாட்டின் பெயர் முன்னதா, அல்லது நாட்டை ஆண்ட மன்னரின் குடிப் பெயர் முன்னதா என்ற ஐயத்தைத் தீர்க்க யாதொரு வழியு மில்லை.

சோழ மன்னர்கள் சூரிய வமிசத்தில் உதித்தவர்கள். அவர்களுடைய கொடி புலிக்கொடி. அவர்களுடைய ஆணை களில் பொறிக்கப்பட்ட முத்திரையும் புலியே. முதன் முத லாக அவர்களுடைய தலைநகரமாக இருந்தது திருச்சிராப் பள்ளியின் அருகேயுள்ள உறையூர். இவ்வூரை உறந்தை யென்றும், கோழி யென்றும் சொல்வதுண்டு. கோழி ஒன்று யானையுடன் போர் புரிந்து வெற்றி பெற்ற இடம் இது என்றும், ஆதலால் இவ்வூருக்குக் கோழி என்ற பெயர் இடப் பட்டதென்றும், இக்காரணம் பற்றியே சோழர்கள் இதைத்

தலைநகராகக் கொண்டனரென்றும் ஒரு வரலாறு கூறுகிறது. வேறு சில தலைநகரங்களைக் குறித்தும் இதே மாதிரியான வேறு கதைகள் வழங்கி வருகின்றன. இக்கதைகளை யெல்லாம் ஐதிகங்களாக நினைக்கவேண்டுமே தவிர உண்மைச் சரித்திர நிகழ்ச்சிகளாகக் கொள்ளுதல் பொருந்தாது.

உறையூரி லிருந்து ஆண்டுவந்த மன்னர்களின் பெயர் களும் செயல்களும் சங்க நூல்கள் எனப்படும் மிகப் பழைய தமிழிலக்கிய நூல்களில் காணப்படுகின்றன. ஆனால் அம் மன்னரின் வரிசைக் கிரமமாவது, அவர்களுள் ஒருவரோ டொருவருக்கு ஏற்பட்டிருந்த உறவுமுறையாவது சரிவர அவற்றில் கொடுக்கப்படவில்லை யாதலால், அக்காலத்துச் சரிதத்தைக் கோவையாக எழுதக்கூடவில்லை.

சங்க காலத்துச் சோழ மன்னருக்குள் மிகப் பிரசித்தி பெற்றவன் கரிகால் வளவன். சிறு பிராயத்தில் இவனுடைய கால் நெருப்புற்றுக் கருகியதால் இவன் இப்பெயர் பெற்றான் என்பர். குழந்தைப் பருவத்தில் இவன் பகைவரால் சிறைப்படுத்தப்பட்டிருந்தான். வயது வந்ததும் தன் தோள் வலியாலும் வாள்வலியாலும் சிறையினின்றும் வெளிப்பட்டு அரசுரிமை பூண்டான். வெண்ணி என்னும் ஊரில் நடந்த போரிலும் இவனுடைய வீரம் வெளியாயிற்று. அந்தப் போரில் இவன் 'இரு பெருவேந்த'ராகிய பாண்டியனும் சேரனும் 'ஒரு களத்தவிய'ப் பொருதான். மற்றுமுள்ள சிறு பகைவர்களை யும் வென்று சோழ நாட்டை மேம்படுத்தினான். இவன் வீரத் திற் கேற்ற உதாரகுணம் வாய்ந்தவன்; தெய்வங்களை வழி பட்டும், யாகங்கள் பல செய்தும், 'நான்மறையோர் புகழ் பரப்பியும்' தர்மராஜ்யத்தை ஸ்தாபித்தவன்; கற்றாரிடத்தும் புலவரிடத்தும் மிக்க அன்பு பூண்டவன். இவன் அவர்களை விருந்தினராக வரவேற்று, அவர்களுக்கு வேண்டிய பரிசுகளை உவந்து கொடுத்து, அவர்களோடு கூடவே சிறிது தூரம் சென்று வழியனுப்பும் சிறப்புப் பொருநராற்றுப்படை யென்

னும் பாட்டில் அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பத்துப் பாட்டுள் மற்றொன்றாகிய பட்டினப்பாலையில் இவனுடைய காலத்திலே காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்துவந்த வியாபாரத்தின் மிகுதியைக் கீழ்வரும் அடிகள் விளக்குகின்றன:

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு

பட்டினப்பாலையைப் பாடியதற்காகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் கரிகாலன்பால் பெற்ற பரிசு 'பத்தொடாறு நூறாயிரம் பொன்' என்பர் கலிங்கத்துப்பரணி யின் ஆசிரியரான ஜயங்கொண்டார். கரிகாலனைப் பற்றி இம் மாதிரியான கதைகள் பல பின்னாட்களில் உண்டாயின.

இனி, கியாதி பெற்ற உறையூர்ச் சோழ வாசர்களுள் சோழன் செங்கணான் ஒருவன். இவன் கழுமலப் போரில் கணைக்காலிரும்பொறை என்ற சேரனைச் சிறைப்படுத்தினான். சேரனுடைய நண்பராகிய பொய்கையார் என்னும் புலவர் களவழிநாற்பது என்னும் நூலில் செங்கணானது வீரத்தைப் புகழ்ந்து பாடி, சேரனைச் சிறைமீட்டதாகச் சொல்லப்படு கிறது. முற்பிறப்பில் சிலந்தியா யிருந்து சிவபெருமானை வழிபட்டானென்று சைவபுராணங்களாலும், சோழ அரசனாகப் பிறந்து எண்தோளீசற்கு எழில்மாடங்கள் பல சமைத்தானென்று திருமங்கை ஆழ்வாராலும் செங்கணான் போற்றப் படுகின்றான்.

உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழர்கள் ஆண்ட காலம் சுமார் கி. பி. முதல் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகள் என்று கொள்ளலாம். பின்னர் வெகுகாலம் வரை அவர்கள் வலி குன்றி மறைந்து கிடந்தார்கள்.

மீண்டும் இவர்கள் தங்களுடைய அதிகாரத்தைத் தமிழ் நாடு முழுவதும் பரப்பத் தொடங்கிய காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பாகம். அப்போது விஜயாலய சோழன் தஞ்சாவூரைக் கைப்பற்றி அதைத் தன் தலைநகராகக் கொண்டான். இவனது மகன் ஆதித்தனும், ஆதித்தனது மகன் பராந்தகனும் பல்லவரோடும், பாண்டியரோடும், சேரரோடும்போர்புரிந்து வெற்றியடைந்து, சோழசாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். இலங்கைத் தீவையும் படையெடுத்துத் தங்களுக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டார்கள். இவர்கள் காலத்தில் கப்பற்படையும் கடல்வியாபாரமும் அதிகரிக்கத் தொடங்கின. ஆனால், பராந்தகனுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் சோழ ஆதிக்கத்தின் முற்போக்குக்குப் பெருந்தடையொன்று ஏற்பட்டது. பராந்தகன்பால் நட்புப்பூண்டு, அவனோடுகூட நின்று பாணர் வைதும்பர் முதலிய பகையரசரை முறியடித்து, அவர்களைத் தம் தம் நாடு கைவிட்டு ஓடும்படி வெருட்டி, பிறகு அந்நாடுகளை—வட ஆர்க்காடு, சித்தூர் முதலிய பிரதேசங்களை—பராந்தகன் சார்பாக ஆண்டுவந்த கங்க அரசனாகிய அத்திமல்லன் காலஞ்சென்றான். தோற்று ஓடிப்போன அரசர் துங்கபத்திரை நதிக்கு அக்கரையில் பிரபலமாக ஆண்டுவந்த ராஷ்டிரகூட அரசனாகிய கன்னரதேவன் பால் அடைக்கலம் புகுந்தனர். தங்கள் நாடுகளை மீட்டுக் கொடுக்கவேண்டுமென்று அவனை வேண்டினர். அவ்வேண்டுகோளுக்கு இணங்கி அவனும், அவனுடைய சிற்றரசனாகிய பூதுகன் என்னும் கங்கனும் சோழநாட்டின்மீது படையெடுத்தனர். அரக்கோணத்திற்குத் தென்கிழக்கில் ஆறுமைல் தூரத்திலுள்ள தக்கோலம் என்னும் ஊரில் பெரும் போர் நிகழ்ந்தது.

அதில் சோழ சைனியம் தோல்வியுற்றது. பராந்தகனுடைய மூத்த மகனான ராஜாதித்தன் யானையின்மீது கட்டிய அம்பாரியில் வீற்றிருந்து போர் நிகழ்த்தினான். அந்த அம்பாரியிலேயே பூதுகன் அவனைக் குத்தி வீழ்த்தினான். இந்தப் போர் நிகழ்ந்த காலம் கி. பி. 949.

இந்த வெற்றிக்குப் பிறகு சில வருஷ காலம் கன்னரதேவன் தென்னாட்டிலேயே தங்கியிருந்து, பராந்தகனுக்கு விரோதமாகப் போர்களையும் முற்றுகைகளையும் நடத்தி, அவனுடைய ராஜ்யத்தைச் சீர்குலைத்தான். இவ்வாறு செய்ததற்கு அறிகுறியாகத் தன்னுடைய சாசனங்களில் 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்' என்று தன்னைப் புகழ்ந்து கொள்ளுகிறான். சோழ அரசனுக்குத் துன்பங்கள் அதிகரிக்கவே, அதற்குச் சிறிதுகாலம் முன் தங்கள் சுதந்திரத்தை இழந்து, சோழ ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட பாண்டியர் முதலிய சிற்றரசர்கள் அவனை எதிர்த்துத் தங்களுடைய சுதந்திரத்தை மீட்டுக்கொண்டனர்.

இத்தகைய ஈனதசையினின்று சோழர்களின் ஆதிக்கத்தை மறுபடியும் உயரச்செய்து, தமிழ்நாடு முழுவதும் அதைப் பரவச் செய்தவன் முதலாம் இராஜராஜன். இவன் மேற் கூறிய முதல் பராந்தகனுடைய பேரனான இரண்டாம் பராந்தகனுடைய இரண்டாவது மகன். இவனுடைய ஆட்சிக் காலம் கி. பி. 985–1014. விஜயாலயனுடைய வம்சத்தில் பிறந்து ஆண்ட அரசர்கள் எல்லோருள்ளும் வீரத்திலும், நற்குணங்களிலும், ஆட்சித்திறனிலும், குடிகளுடைய நன்மதிப்பிலும் சிறந்து மேலாக விளங்கினவன் இவனே. சோழ அரசர்கள் யாவரினும் இவனே மேம்பட்டவன் என்று சொன்னாலும் மிகையாகாது.

இவன் புரிந்த போர்களின் பயனாகச் சோழருடைய ஆட்சி மறுபடியும் பாண்டிநாடு, மலைநாடு உட்பட்ட கேரளநாடு கங்கநாடு முதலிய தேசங்களில் நிலைநாட்டப்பட்டது. இலங்

கைத் தீவும், மாலதீவங்கள் என்று வழங்கும் 'பல் பழந்தீவு பதினுயிரமும்'கூட இவனுடைய கடற்படையின் வெற்றிகளால் சோழ சாம்ராஜ்யத்தில் சேர்க்கப் பெற்றன. மஹாராஷ்டிர தேசத்தில் ராஷ்டிரகூட அரசரை வென்று, தங்களுடைய அதிகாரத்தை மீட்டுக்கொண்ட கல்யாணிச் சளுக்கியருட னும் இவன் போர்புரிந்தான். தெலுங்கு தேசமான வேங்கி நாட்டில் ஏற்பட்டிருந்த அராசகத்தை நீக்கித் தன்பால் சரண் புகுந்த சக்திவர்மனுக்கு அவனுடைய அரசுரிமையை மீட்டுக் கொடுத்தான். இதுமுதல் வேங்கி நாட்டுச் சளுக்கியருக்கும் தமிழ்நாட்டுச் சோழர்களுக்கும் நெருங்கிய நட்பு நிலை நின் ருேங்கி வளர்ந்தது. இவ் வரச குலங்கள் இரண்டிற்கும் விவாக மூலமான சம்பந்தங்கள் ஏற்பட்டன. கடைசியாக, கி. பி. 1070-ல் சோழ அரசர்களுக்கு ஆண் சந்ததிகள் இல்லாமற் போகவே, பெண்வழியில் வேங்கி சளுக்கிய குலத்தில் உதித்த முதற் குலோத்துங்கன் சோழ நாட்டுக்கும் அதிபதியானுன்.

இராஜராஜன் சிறியவையும் பெரியவையுமாகப் பல கற் கோயில்களைக் கட்டினுன். இவை யாவற்றுள்ளும் அளவிலும் அழகிலும் இணையில்லாதது தஞ்சையிலுள்ள இராஜராஜேச் சுரம் என்னும் கோயில். இந்நாளிலே இது பிருகதீசுவரர் கோயில் என்று வழங்கப்படுகிறது. நாலு பக்கங்களிலும் பல மைல் சுற்றளவுக்குச் சிறு கல் துண்டுகூடக் கிடைப்பது அரி தாகிய தஞ்சாவூரில் மிகப் பெரிய பாறைகளால் 'குன்றமன்ன தோர் பெருங்கோயிலை' இராஜராஜன் நிருமாணஞ் செய்தான். வெகு தூரத்திலிருந்து இப்பாறைகள் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பெருஞ்செயலானது, சோழ மன்னர்கள் நினைத்தால் கைகூடாத காரியம் யாதொன்றும் இல்லை என் பதை நிரூபிக்கும்பொருட்டு இயற்றப்பட்டதோ என்று எண் ணச் செய்கிறது. இக்கோயிலின் கர்ப்பகிருகம் சுமார் நூறடிச் சதுர முள்ளது. இதன் சுவர்கள் பத்து அடிக்குமேல் கனமுள் ளவை. விமானத்தின் உயரம் சுமார் இருநூறு அடி. பிற்காலத்

திலே கட்டப்பட்ட கோயில்களிலே சுற்றியுள்ள பிராகார மதில் சுவர்களின் மீது உயர்ந்த கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறின்றி, இப்பழைய கோயிலில் கர்ப்பகிருகத்தின்மேல் உயர்ந்த விமானத்தைக் கட்டியிருப்பது இதன் தனிச் சிறப்பாகும். சுவர்களிலும், சுற்று மாளிகைத் தூண்களிலும், முன் மண்டபத்தின் அடிப்படையிலும் அழுத்தமாகவும் அழகாகவும் பல சாஸனங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இராஜராஜன் தன்னுடைய ஆட்சியின் இருபத்தொன்பதாவது ஆண்டில், 'நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ இராஜராஜேசுவரமுடையார்க்கு நாம் கொடுத்தனவும் கோயிற் சுவர்களின்மீது எழுதப்படவேண்டும்' என்று இட்ட கட்டளையை நிறைவேற்றும்பொருட்டே இச்சாஸனங்களில் பெரும்பாலன பொறிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இவ்வெழுத்துக்கள் செதுக்கப்பட்டு ஓர் ஆயிரம் ஆண்டுகளான போதிலும், நேற்றுத்தான் செதுக்கியவைபோல இவை காணப்படுகின்றன. இது கல்லின் உறுதியினலோ, அல்லது சிற்பியின் கைத்திறத்தாலோ!

இராஜராஜன் பெரிய சிவபக்தன்; ஆனல் பிற மதங்களை வெறுத்தவன் அல்லன். தஞ்சாவூர்க் கோயிலி லுள்ள சிற்பங்களில் சில புத்த சரிதச் சிற்பங்களாக உள்ளன. தவிரவும், நாகபட்டணத்தில் பெரிய புத்தப்பள்ளி ஒன்றைக் கட்ட அவன் அனுமதி கொடுத்ததுமல்லாமல், அப்பள்ளிக்கு ஆனைமங்கலம் என்ற ஊரைப் பள்ளிச்சந்தமாகவும் கொடுத்தான். இப்பள்ளிக்கு 'இராஜராஜப் பெரும்பள்ளி' என்றும் 'சூடாமணிவர்ம விஹாரம்' என்றும் பெயரிட்டார்கள். சூடாமணிவர்மன் என்பவன் ஸ்ரீவிஜயம் என்ற நாட்டின் அரசன். ஸ்ரீவிஜயம் என்பது இக்காலத்தில் பாலம்பாங் என்று வழங்கப்படுகிற ஊர்; இது சுமாத்திராத் தீவி லுள்ளது. ஸ்ரீவிஜயத்தின் அரசர்கள் கடாரம் என்ற ஊரையும் சேர்த்து ஆண்டுவந்தார்கள். இது இக்காலத்தில் கெடா எனப்பட்டதும், மலேயாவின் மேல்கரை

யில் உள்ளதுமான ஒரு பெரிய பட்டணம். நாகபட்டணத்து விஹாரத்தைக் கட்டினவன் சூடாமணிவர்மனுடைய மகன் மாரவிஜயோத்துங்கவர்மன். இவன் தான் கட்டின விஹாரத்துக்குத் தன்னுடைய தகப்பன் பெயரையும், தன்பால் நட்பு மிக்க சோழ அரசனுடைய பெயரையும் இட்டான். ஸ்ரீவிஜயமானது அக்காலத்தில் சோழ ஆதிக்கத்துக்குச் சமமான பெரிய கடலாதிக்கத்தைப் பெற்றிருந்த சாம்ராஜ்யம். அதற்கு ஒருபுறம் நம் நாட்டுச் சோழ மன்னரோடும், மற்ருெரு புறம் சீனுதேசத்துச் சக்கரவர்த்திகளோடும் நெருங்கின தொடர்பு உண்டு. அதன் மூலமாகச் சோழ அரசருக்குச் சீனுவுடன் பழக்கங்கள் ஏற்பட்டன. மலேயாவிலும், சுமாத்திரா, ஜாவாத் தீவுகளிலும் உள்ள துறைமுகங்களில் சீனரும் இந்தியரும் வியாபார முறையில் அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. இந்திய வியாபாரிகளும், சோழ மன்னரின் தூதர்களும் பலமுறை சீனுவுக்குப் போய்வந்தனரென்று சீனுதேசத்துச் சரித்திர நூல்கள் கூறுகின்றன.

இராஜராஜனுக்குப் பின் அவன் மகன் இராஜேந்திரன் பட்டம் எய்தினுன். இவன் தகப்பனுக் கேற்ற பிள்ளை. சிறு பிராயத்திலேயே இவன் தன் தகப்பனுடைய போர்களிலும் அரசியல் முறைகளிலும் ஊன்றிப் பழகிவந்தான். இவன் வட நாடுகளில் தண்டெடுத்துப் பல மன்னரை வென்று, தோற்றுப் போன மன்னர் தலையின்மீது கங்கை நீரை ஏற்றித் தன் தலைநகருக்குச் சுமந்துவரச் செய்தபடியால் இவனுக்குக் கங்கைகொண்ட சோழன் என்ற பெயர் கிடைத்தது. கங்கைகொண்ட சோழபுரம் என்னும் புதிய தலைநகர் ஒன்றை இவன் நிருமித்து அதன் அருகே சோழகங்கம் என்ற பெயர்பெற்ற ஏரியை வெட்டுவித்தான். வடநாட்டுத் தண்டயாத்திரையின் பயனுகக் கொண்டுவரப்பட்ட கங்கைநீரை இந்த ஏரியில் விடுத்தான். ஆகையால் இந்த ஏரியை இவனுடைய நீர்வடிவமான ஜயஸ்தம்பம் என்கிருர்கள். கங்கைகொண்ட சோழபுரத்துக்

கோயிலை மட்டும் இன்றும் காணமுடிகிறது. ஊரும் எரியும் மாயமாய் மறைந்துபோயின. கோயிலின் அமைப்பு அநேகமாய்த் தஞ்சைக் கோயிலைப்போலவே இருக்கின்றது; ஆனால் சிற்ப வேலைகளில் அதை விஞ்சியுள்ளது.

இராஜேந்திரன் 'அலைகடல் நடுவுட் பல கலஞ் செலுத்தி' ஸ்ரீவிஜயத்தின் மீது படையெடுத்துச் சென்றான். மாரவிஜயோத்துங்கவர்மன் மகன் சங்கிராம விஜயோத்துங்கனையும் அவனுடைய பிரதான நகரங்களான ஸ்ரீவிஜயம், கடாரம் இவற்றையும் பிடித்துக்கொண்டான். ஆனால், ஸ்ரீவிஜயம் நீண்டகாலம் சோழரால் ஆளப்பட்டதாக எண்ணுவதற்குரிய சின்னம் ஒன்றும் அகப்படவில்லை. சோழ அரசருக்கும் ஸ்ரீவிஜய மன்னருக்கும் ஏற்பட்டிருந்த நட்பு எப்போது, யாது காரணத்தால், பகையாக மாறிற்றென்பதும் புலப்படவில்லை.

இவ்வாறு இராஜராஜனும் அவன் மகனும் ஆண்ட காலம் சோழநாட்டின் மகோன்னத தசையின் காலமாகும். அப்பொழுது சோழ நாடானது தமிழ்நாடு முழுவதுக்கும் தலைமை பூண்டு விளங்கிற்று. தமிழ்நாடு முழுவதையும் முதன்முதல் ஒரு தனிக் குடைக்கீ ழிருத்திச் செவ்வனே ஆண்ட மன்னர்கள் இவ்விருவருமே.

இவர்களின் அரசாட்சி முறைகள் மிகவும் பாராட்டத்தக்கன. அரசாங்க அமைப்பு நாட்டின் வளத்தையும், கைத்தொழில்களின் வளர்ச்சியையும், ஜனங்களின் சுகத்தையும் பெருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது. நில அளவின் கணக்கும், வரிகளின் விவரமும், அரசனும் அவனுடைய அதிகாரிகளுமாக ஆணை நடத்திவந்த வகையும் சாஸனங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன. ஊர் ஊராய்க் கிராம காரியங்களைப் பார்த்துவரச் சபைகள் ஏற்பட்டிருந்தன. இச் சபைகள் அரசனுக்குக் கிராமத்திலிருந்து சேரவேண்டிய வருஷ வருவாயைத் தாமே வசூல் செய்து செலுத்திவந்தன. ஊரின் மற்றக் காரியங்களை நேராகவோ அல்லது வாரியங்கள் என்று

சொல்லப்பட்ட உட்கழகங்கள் மூலமாகவோ கவனித்துவந்தன. படிப்பு, வைத்தியம், வயல்களுக்கு நீரைப் பகுத்துக் கொடுத்தல், நடை பாதைகளையும் சாலைகளையும் சரிவரப் பாதுகாத்தல், ஏரிகள் தூர்ந்துபோகாமல் குழியெடுத்தல், இன்னும் இவைபோன்ற காரியங்களெல்லாம் கிராமச் சபைகளையே சார்ந்தன. அரசனுல் ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகள் அங்கங்கே எல்லாக் காரியங்களும் சரிவர நடக்கின்றனவா என்று மேற்பார்ப்பதிலும், குற்றங் குறைகள் ஏற்பட்டால் அவைகளை விசாரிப்பதிலும், உயர்தர நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட விவகாரங்களைத் தீர்ப்பதிலும், இவைபோன்று ராஜ்யம் முழுவதுக்கும் பொதுவாயுள்ள காரியங்களைக் கவனித்து நடத்துவதிலும் அமர்ந்திருந்தார்கள். பொதுவாகப் பார்க்கும்போது, அரசாட்சியின் திறமையிலும், குடிகளின் சுதந்திரம் இராஜபக்தி தேசாபிமானம் முதலிய நலன்களிலும், நாட்டின் செழிப்பிலும் சோழர்கள் ஆண்ட காலத்துக்கு ஒப்பான காலம் வேறு யாதொன்றுமே இல்லையெனலாம். இராஜராஜன் காலத்தில் சைவத் திருமுறைகள் வகுக்கப்பட்டன. அதற்கு அடுத்த நூற்றூண்டில் சேக்கிழார் பெரிய புராணமும் கம்பர் இராமாவதாரமும் பாடப்பெற்றன. ஆதலால் தமிழ் இலக்கியம் ஓங்கி வளர்ந்ததும் சோழருடைய ஆட்சிக் காலத்திலேதான்.

VIII. ஒரு கவிமலர்

'பி. ஸ்ரீ.'

ஒரு காலத்தில் பொருட் செல்வத்தோடு செவிச்செல்வமும் படைத்த பிரபு சிகாமணி ஒருவன் இருந்தான். அவனுள்ளம் எப்பொழுதும் அழகுக் கலைகளையும் அறிவுக் கலைகளையும் தழுவி வளர்ந்தது. பண்டைத் தமிழகத்திலே தமிழரது பெருவாழ்விலே பூத்துச் செழித்த இலக்கிய நறுமலர்கள் அவனது வாழ்க்கையினை நீங்காது சூழ்ந்து பரிமளித்துக்கொண்டிருந்தன. அவனது வள்ளன்மை உத்தமக் கவிஞர்க்கும் கலைஞர்க்கும் ஓர் ஊன்றுகோலாக உதவியது.

சில ஆண்டுகளாக, அப்பிரபு புதியதொரு நல்ல பாட்டைக் கேட்டு இன்புற வேண்டுமென்று ஆசைகொண்டிருந்தான். ஆனால் பாட்டு, பெரும்பொருளாலும் ஆக்கப்படுவதன்று என்பதை அவன் நன்கறிவான். நற்கவிதைக்கு அலந்துபோன அவனுள்ளத்தில் ஒரு புதிய ஆலோசனை பிறந்தது. அதற்கிணங்க, அவன் தன் ஆஸ்தான மண்டபத்தில் ஒரு பொற்கிழி தூக்கி, அதனைத் தன் உள்ளத்திற்கு இன்னமுதமாகும் ஓர் அருங்கவி பாடும் புலவருக்கு அளிப்பதாக நாடெங்கும் அறிவித்தான்.

பிரபு இரஸிகனாக இருந்ததால் அப்பொற்கிழியை அழகுபெற அமைந்துள்ள இலட்சுமி சிலையொன்றின் கரத்திலே திகழ்வித்தான். இலட்சுமிதேவி உயிரோவியமாகச் சித்திரிக்கப் பெற்றிருந்தாள். பொய்கையில் புதிதாக மலர்ந்ததொரு செந்தாமரை மலரில் செம்மாந்து வீற்றிருப்பதாக அத்தேவி அமைக்கப்பெற்றிருந்தாள். சிறிது தூரத்தே யிருந்து நோக்குவோர், மண்டபத்தின் ஒரு பகுதியில் பொய்கை குளிர்ந்த நீரோடு அலை யெறிந்துகொண்டிருப்பதாகவும், அந்நீர்ப் பரப்

பிலே ஓர் இனிய செந்தாமரை தலையவிழ்ந்து மலர்ந்திருப்ப தாகவும், அம்மலரின்மீது அழகுத் தெய்வத்தின் ஆனந்தரூபம் அரசிருந்து பொற்கிழியும் கையுமாக எதிர்நோக்கி நகை புரிவ தாகவும் கருதி மயங்குவாராயினர்.

பொன்னரசியின் கரத்தினின்றும் பொற்கிழியைப் பெற வேண்டும் என்ற பேரவாவினுல், எண்ணிலாத புலவர்கள் பிரபு வின் சபாமண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். அவன் அவர் களை உபசரித்து, அவர்கள் பாடும் பாடல்களை ஆவலோடு கேட்பான். ஆனுல் அப்பாடல்களில் ஒன்றும் அவனுள்ளத் திற்கு ஆறுதல் அளிக்கவில்லை. எல்லாம் வெறும் சொல்லடுக் குக்கள்! மோனைகள்! பிராசங்கள்! இச் சொற்குப்பைகளிலே உண்மை மணி ஒன்றேனும் காணப்பெறவில்லையே யென்று பிரபு பெருமூச்செறிவது வழக்கம். எனவே வந்த புலவர்க ளெல்லாம் விதியை நொந்துகொண்டு வீடு செல்வாராயினர்.

இங்ஙனம் இருக்கையில், ஒருநாள் ஆண்டினும் அறிவி னும் ஒருங்கே பழுத்த பெருங்கிழவி—தமிழ்ச்செல்வி—கலைத் தாய்—ஔவைப்பிராட்டி அச்சபைக்கண் திடீரென்று தோன்றி ஞள். 'இக்கிழவி எவ்வாறு பொற்கிழி பெறுதல் கூடும்?' என்று சபையிலிருந்தவரில் பலரும் இரங்கித் தம்முள் உரை யாடலுற்ருர். ஆனுல் பிரபுவோ உருவினைக் கண்டு இகழாது. அந்நரை மூதாட்டியை விரைந்தேற்று உபசரித்து, 'வந்த காரியம் என்ன?' என்று அன்போடு வினவினன்.

அப்பொழுது ஔவை, பிரபுவின் அகக்கருத்தினை நன் குணர்ந்துகொண்டு, பொன்னரசியையும் பொற்கிழியையும் நோக்கி ஒரு வெண்பாவை உருக்கமான குரலில் பாடினுள் அது வருமாறு:—

ஆர்த்தசபை நூற்றெருவர் ஆயிரத்தொன் ரும்புலவர்
வார்த்தை பதினு யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயின் உண்டென் றறு.

ஔவையெனும் அருட்கொடியில் பூத்த இக்கவிமலரின் அழகும் ஒளியும் மணமும் பிரபுவின் உள்ளத்தையும் அங்குக் குழுமியிருந்த புலவர்களின் உள்ளத்தையும் ஒருங்கே வசீகரித்தன. பிரபு மனமுவந்து பொற்கிழியை ஔவையாருக்கே அளித்தான்.

இக்கவி மலரின் மாட்சி உங்களுக்கு இனிது புலனுகலாம். நூற்றில் ஒருவரே அறிஞர் பேசும் சபைகளில் சொல்லுதற்குரியவர். அவ்வாறு சொல்பவருள், புலமைப் பெருக்கோடு விஷயங்களை உய்த்துணரும் புலவர் ஆயிரத்தில் ஒருவரே. அப் புலவருள்ளும் பதினுயிரத்தில் ஒருவரே வார்த்தையின் நயம் தெரிந்த கவிப் புலவர்!

இவ்வண்ணம் சில அரிய உண்மைகளை வெளியிட்டு வரும் ஔவை, பிரபுவை விளித்துப் பேசாது, 'பூத்த மலர்த் தண்டாமரைத் திருவே!' என்று இலட்சுமிதேவியை விளித்துப் பேசத் தொடங்கி, முடிவாகத் தான் கண்டுகொண்ட உண்மையினை வெளியிடப் புகுந்து, 'தாதா கோடிக்கொருவர்' என்று இரஸிக மணியான பிரபுவின் பெரு வள்ளன்மையினைச் சிறப்பித்துப் பேசுகிருள். இவ்வாறு தான் வெளியிட்ட உண்மைக்குப் பொன்னரசியாகிய இலட்சுமியையே சாட்சியாக்கி, 'உண்டாயின் உண்டென்றறு' என்று பொற்கிழியை நோக்கிக் குழந்தையுள்ளத்தோடு கூறி முடிக்கிருள். இப்பாட்டு ஔவையாரின் அழகிய மனேதர்மத்தை அப்படியே இனிய செஞ்சொற்களால் சித்திரித்துக் காட்டுகின்றதன்றே?

IX. கம்பர்

எஸ். வையாபுரிப் பிள்ளை

தமிழ் நாட்டுக்குப் பெரும்புகழ் விளைத்து, தமிழ்மொழி என்றும் பெருமையிற் சிறக்குமாறு செய்த கம்பரைக் குறித்து நமக்குத் தெரிந்தது மிகச் சொற்பமே. அவர் உவச்சர் குலத்தில் தோன்றியவர். அவரது தந்தையார் பெயர் ஆதித்தன். அவர் சோழ நாட்டுத் திருவழுந்தூரில் வாழ்ந்தவர். இச் செய்திகள்

சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூ ருவச்சன்
காரணி கொடையான் கம்பன் தமிழினுற் கவிதை செய்தான்

என்றும்,

ஆவின் கொடைச் சகர ராயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரார் குணுதித்தன் சேயமையப் பாடினன்
காரார் காகுத்தன் கதை

என்றும் வரும் பழஞ் செய்யுட்களால் அறியலாம். கர்ண பரம்பரையாகக் கம்பரைக் குறித்துப் பல கதைகள் வழங்குகின்றன. அவருக்கு அம்பிகாபதி என்ற பெயருடைய ஒரு புத்திரன் இருந்தனன் என்றுங் கூறப்படுகிறது. இக்கதைகளுக்கெல்லாம் தக்க ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

கம்பர் வாழ்ந்த காலத்தைக் குறித்தும் இன்னும் விவாதம் தீர்ந்தபாடில்லை.

சங்க காலத்திற்குப் பிற்பாடு கி. பி. ௯-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான் சோழ வமிசம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்

சோழ வமிசம் சிறந்தோங்கி உச்ச நிலையை அடைந்த பின்னரே கம்பர் வாழ்ந்திருத்தல் கூடும்.

புவிபுகழ் சென்னிபோ ரபயன் தோள்புகழ்
கவிகள்தம் மனையெனக் கனக ராசியும்

என்று கம்பர் கூறும் (கிட்கிந்தை. பிலங்காண். 35) செய்யுளிலிருந்து இவ்வாறு முடிவு செய்யலாம். அபயன் என்றது முதற் குலோத்துங்கன் (கி. பி. 1070–1118) தரித்துக்கொண்ட பெயரேயாகும் என்பது சரித்திர நூல் வல்லார் துணிபு. 'போர பயன் தோள்புகழ் கவிகள்' என்றது முதற் குலோத்துங்கன் கொண்ட கலிங்கத்து வெற்றியையும், சயங்கொண்டார் முதலிய கவிஞர்களையும் குறிப்பதெனக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். கலிங்கத்து வெற்றி சுமார் கி. பி. 1100-ல் நிகழ்ந்தது. இக்காலத்துக்குப் பின்னரே இராமாயணம் பாடப்பெற்றதாதல் வேண்டும்.

இராமாயணத்திலே பிறிதோரிடத்தில் (உயுத்த காண்டம், மருத்துமலைப் படலம் 58)

சென்னிநாட் டெரியல் வீரன் தியாகமா விநோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பை

என வருகின்றது. இங்கே காணப்படும் 'தியாகமா விநோதன்' என்பது முதற் குலோத்துங்கன் புத்திரனாகிய விக்கிரம சோழனுக்குரிய பட்டப் பெயராகும். இவ்வரசன் காலம் கி. பி. 1118–1132. இவன் காலத்தில் கம்பர் தமது இராமாயணத்தைத் தொடங்கியிருக்கலாமென்று தோன்றுகிறது. மேலே காட்டிய 'ஆவின் கொடைச் சகரர்' என்ற செய்யுளால் இராமாயணம் பாடிமுடித்த காலம் கி. பி. 1178 என்று ஆகும். இந்தக் காலக் குறிப்புக்களையும் பிற செய்திகளையும் நோக்கினால், கி. பி. 12-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் கம்பர் தமது இராமா

யணத்தை இயற்றினுரென்று கொள்வதே நேரிது. இக் காலமே கர்ணபரம்பரைச் செய்திகளுக்கும், சரித்திர முடிவுகளுக்கும், இலக்கிய சரிதத்திற்கும் ஒத்ததாக வுள்ளது.

12-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சோழராதிக்கியம் உச்ச நிலையை அடைந்திருந்தது. அப்பொழுதுதான் தமிழ் நாட்டில் ஏகசக்கிராதிபத்தியம் முதன் முதல் அவர்களுக்கு ஏற்பட்டது. இவ்வகையான ஏகசக்கிராதிபத்தியத்தைக் காவிய வுலகிலும் நிறுவியமைத்தவர் கம்பர் என்று சொல்லுதல் தகும்.

ஆனுல் அவர் காலத்துச் சோழ அரசர்களாகிய விக்கிரம சோழனும், இரண்டாம் குலோத்துங்கனும் (கி. பி. 1133–1150), இரண்டாம் இராஜராஜனும் (கி. பி. 1151–1163) அவரது பெருமையை யுணர்ந்து, தகுதிக்கேற்ப அவரைப் போற்றினுர்களென்று சொல்ல முடியவில்லை. கலையையும் கவியையும் பேராதரவோடு போற்றி வந்த அவ்வரசர்கள் இவ்வாறு பராமுகமாயிருந்தது ஆச்சரியமே. இதற்கு அவர்களுடைய குருவாயிருந்த ஒட்டக்கூத்தர் ஒருவேளை காரணமாயிருந்திருக்கலாம். இவ்வொட்டக்கூத்தரே ஆஸ்தான கவிஞராய்க் கவிச் சக்கரவர்த்தி என்ற பெருமையைப் பெற்று, அரசர்களுடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் உரியவராயிருந்தார். புகழ்விரும்பியும் பொருள் விரும்பியும் அரசவைக்கு வந்த மற்ற இளங் கவிஞர்களை யெல்லாம் இவர் வாதில் வென்று அடக்கித் தமது பதவியை நிர்வகித்து வந்தாரென்று கர்ணபரம்பரை கூறுகிறது. வேறொரு காரணமும் சொல்லுதல் கூடும்: அரசர்கள் சைவசமயப் பற்று மிக்குடையவர்களா யிருந்தனர். இரண்டாங் குலோத்துங்கன் வைணவத் துவேஷங் கொண்டவனுகவும் இருந்தனன். தில்லை முன்றிலிற் கிடந்த கோவிந்தராஜ சுவாமியின் விக்கிரகத்தைத் தூக்கிக் கடலில் எறிந்தவன் இவனே. இவ்வரசனைப் போன்ருர் வைணவத்தைச் சார்ந்தது எனக் கருதத்தக்க இராமாயணம் பாடிய புலவரை அன்பு

செய்தற்கு நியாயம் இல்லை. ஆனால், மதக் கோட்பாடுகளில் உள்ளம் அழுந்திப் பரமதத் துவேஷம் பூண்டவராய்க் கம்பரும் இருந்தாரென்று கருதுதல் கூடாது. அவர் பாடிய கடவுள் வணக்கம் பொதுப்பட அமைந்திருத்தலே இதற்குத் தக்க சான்று. அவரது பரந்து விரிந்த கல்வி கேள்வியும், இயற்கை மதிநுட்பமும், அன்பு நிறைந்த உளப் பண்பும் அவர் மனத்தை விசால நோக்குடையதாகச் செய்திருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது.

ஒட்டக்கூத்தரது அநாதரவும் அரசர்களுடைய சைவப் பற்றும் கம்பர் அரசவையில் ஏறுதவாறு செய்துவிட்டன வென்று சொல்வதைக் காட்டிலும், அவரே தமக்குத் தடை ஏற்படுத்திக்கொண்டாரென்று சொல்வது மிகப் பொருந்தும். அமைதியான வாழ்க்கையையே அவர் விரும்பியவர். அரச வைக்குச் சென்று புகழும் பொருளும் ஈட்டவேண்டுமென்ற அவாவே அவர் மனத்தில் முளைக்கவில்லை. தமது இயல்பினை நன்குணர்ந்திருந்த பிரபுவாகிய சடையப்ப வள்ளலோடு தாம் விரும்பியபடியே எளிய, அமைதியான வாழ்க்கையை நடத்தி வந்தார். இத்தகைய வாழ்க்கையினுஞ் சிறந்ததொன்று உள தாக அவர் மதிக்கவில்லை.

> தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
> இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
> நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்(து)
> உம்பர் உறைவார் பதி (நாலடி. 137)

என்பதே அவர் கொள்கையா யிருந்தது.

இங்ஙனமாக அரசவையை நெருங்காது நெடுந்தூரத்தில் அவர் தனித்திருந்தது அவருக்கு நன்மை பயப்பதாயிற்று. கவியுலகில் அவர் ஒரு புரட்சிக்காரரென்று சொல்லவேண்டும். அவருடைய இயற்கைப் பேராற்றல் எதனையும் எதிர்க்கத் தக்கதா யிருந்தது. கவியைப் பற்றிய அளவில் பலர்க்கும்

ஒப்ப முடிந்த பல கொள்கைகளையும் அவர் தகர்த்தெறியத் துணிவு கொண்டார். இயற்கையோடு பொருந்தியதாயும் எளிமையாயும் கவி இருந்தால், அக்காலத்துப் புலவர்கள் அதனை இகழ்ந்துவந்தார்கள். சப்த ஜாலத்தையும் அலங்கார விசேஷங்களையும் பெரிதும் பாராட்டிவந்தனர். பெரும்பாலார் எதுகை மோனைச் சிறப்புக்களையும் சொற் சாதுரியத்தையும் கவிச் சுவையின் முக்கியாம்சங்களெனக் கருதினர். இவற்றை யெல்லாம் கம்பர் ஒரு பொருட்டாக மதிக்கவே யில்லை. உணர்ச்சியும் சொல்லும் ஒருவழிப்பட்டு உளம் நெகிழ்க்கும் அமுதமயமாகிய இன்னிசைகளை அவர் சிருஷ்டித்தனர். இவ் வாருக அவர் காலத்து வழங்கிய காவிய நியதிகளைப் புறக் கணித்து 'கம்பர் போன போக்கு' என்ற பழமொழிக்கு இலக் காயினர்.

இங்ஙனம் எளிமையையும் அமைதியையும் புரட்சி நெறி யோடு சேர்த்தி யொழுகிய கம்பரது கவியுள்ளம் பெருக்கெடுத் துக் கரைகடந்து செல்லுவதாயிற்று. பன்னெடுங்காலமாக வளர்ந்து பெருகிப் பாரத மக்களின் உள்ளத்தைப் பிணித்து வந்திருந்த இராம சரிதமே தமது கவித்வ சக்திக்கும் கலை யுணர்ச்சிக்கும் ஏற்றதொரு பொருளெனக் கம்பர் எண்ணினர். அவரைப்போன்ற பேராற்றல் படைத்தவரன்றி, ஏனையோர் இம்முயற்சியில் அஞ்சுவர். ஒரு பக்கம், வான்மீகியின் இதி காசம், அதன் காம்பீரியம், அதன் எளிமை, அதன் இனிமை. மற்றொரு பக்கத்தில் இராம சரிதத்தை நன்குணர்ந்து அனுப வித்திருந்த பொதுஜனங்கள். இவர்களே முடிவாக மதிப் பிடும் அதிகாரிகள். ஏனெனின், நமது நாட்டில் இதிகாசங் கள் இவர்கள் முன்னிலையில் பாடப் பெறுதற்கே இயற்றப் பட்டன. வான்மீகியின் இராமாயணம் இவ்வாறு அங்கீகாரம் பெற்றதென்பது மகரிஷிகளின் முன்னிலையில் குசலவர்கள் இன்னிசையுடன் இதனை ஓதி அவர்களைக் குதூகலங்கொள்ளச் செய்ததனுல் அறியப்படும்.

மதிப்பதிகாரிகள் யாவரேயாயினும், கம்பர் தமது அருஞ் செயலில் சிறிதுந் தளர்வின்றிப் பேரூக்கத்துடன் இராமாயணத்தை இயற்றி முடித்தனர்.

கம்பருடைய அதியற்புத கவித்வ சக்தியானது இராம சரித நிகழ்ச்சிகளிலே எவ்வாறு ஈடுபட்டு மேன்மேலும் ஓங்கி வளர்ந்துள்ளதென்பது இராமாயணத்தைப் பல ஆண்டுகள் கற்றுத் தெளியவேண்டுவதோர் உண்மை. வான்மீகியின் மொழிபெயர்ப்பாள ரல்லர் கம்பர். அம்மகரிஷியின் காலத்திற்கும் இப்புலவர் பெருமான் காலத்திற்கும் மிகக் குறைவாக மதிப்பினும் 15 நூற்றாண்டுகளேனும் இடைப்பட்டிருக்க வேண்டும். இந்நெடுங்காலத்தில் காவிய நோக்கமும் வாழ்க்கை லக்ஷியங்களும் முறைகளும் வேறுபட்டிருக்கவேண்டும். புது நோக்கங்களுக்குத் தக்கபடி கம்பர் இராம காதையில் வேறுபாடுகள் செய்திருக்கிறார். ஆற்றலோடும் உள்ளுணர்ச்சியோடும் கதா பாத்திரங்களைச் சிருஷ்டித்திருக்கின்றார். ஏதேனும் ஒரு கட்டத்தை எடுத்துக்கொண்டால், அதன் உயிர் நிலையைத் தமது கவித்வ சக்தியால் உணர்ந்து, ஒருகாலும் நாம் மறக்கவொண்ணாதபடி சித்திரித்துவிடுகின்றனர். பாத்திரங்களின் செயல்களாலும் சம்பாஷணைத் திறத்தாலும் அவர்களை உயிர்த்தத்துவம் நிரம்பியவர்களாக நிருமித்து நமது மனக்கண்முன் நடிக்கச் செய்கின்றனர். இந்த அபூர்வமான நாடகத் திறமை கம்பர் காவியத்தில் எங்கும் காணப்படுதலால், அதனைக் கம்ப நாடகமென்று சில ரஸிகர்கள் வழங்குகின்றனர். கம்பருடைய தமிழிலிருக்கும் இனிமையும் அழகும் எளிமையும் காம்பீரியமும் பிற தமிழ் நூல்களில் இல்லையென்று உறுதியாய்க் கூறலாம்.

அவர் தம் காலத்து அரசர்களால் மதிக்கப்பெறாது போயினும், பொது ஜனங்கள் அவரது பெருமையை உணர்ந்து 'கவிச் சக்கரவர்த்தி' என்று வழங்கலாயினர். இச்சிறப்புப் பெயர் கம்பருக்கு என்றும் நிலைத்திருக்குமென்பது திண்ணம்.

X. டேவிட் லிவிங்ஸ்டன்

பெ. நா. அப்புஸ்வாமி


'சிங்கத்தின் வாயில் நீ அகப்பட்டுக்கொண்டு, அது நற நற என்று உன்னைக் கடித்தால், அப்போது உனக்கு எப்படியிருக்கும்?' என்று ஒரு கேள்வி கேட்டால் எத்தனை பேரால் விடை சொல்லமுடியும்? அதிகப் பேர்கள் இருக்கமுடியாது அல்லவா? சிங்கத்தின் வாயில் அகப்பட்டுக்கொள்ளுகிறவர்கள் மிகச் சிலர். அப்படி அகப்பட்டுக்கொண்டுவிட்டால், அப்புறம் தப்பிவருகிறவர்கள் கூட உண்டா என்று நினைப்போம் அன்றோ?

டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர் ஒருமுறை சிங்கத்தின் வாயில் அகப்பட்டுக்கொண்டும், சாகாமல் மறு பிறப்பாகப் பிழைத்து வந்தவர். சிங்கம் கடித்தபோது அவருக்கு வலியே தெரியவில்லையாம்; பயம் தோன்றவில்லையாம். தம்முடைய உடலில் எந்தப் பாகத்தைச் சிங்கம் கடித்துத் தின்னத் தொடங்கும் என்ற மிகவும் விசித்திரமான எண்ணந்தான் அப்பொழுது அவருடைய மனத்தில் தோன்றிற்றும்.

இத்தனை ஆச்சரியமான மனிதர் யார் தெரியுமா? நெசவாளி, வைத்தியன், பாதிரி, தேசசஞ்சாரி ஆகிய நால்வரையும் ஒன்றாகத் திரட்டி, ஓர் உருவாக்கிய ஒருவர். ஆப்பிரிக்காவில் நாகரிக மனிதர் முன்பு கண்டறியாத இடங்களைத் தேடிச் சென்றவர்.

இவர் 1813-ம் வருஷத்தில் ஸ்காட்லாந்து தேசத்தில் பிறந்தார். இவருடைய தாய்தந்தையர் இருவரும் பரம ஏழைகள். ஆதலால் இவருக்குப் பத்தாவது வயதிலேயே இவர் வேலை தேடி அமரவேண்டியதாயிற்று. நூல்நூற்கும் எந்திரசாலை ஒன்றில் இழைகளை முடிபோடும் வேலையில் இவர்

அமர்ந்தார். ஆயினும் இவருக்குக் கல்வியிலே அளவற்ற ஆசை இருந்ததால், தமக்குக் கிடைத்த முதல் வாரச் சம்பளத்தைக் கொண்டு லத்தீன் இலக்கணப் புத்தகம் ஒன்றையும் பிறகு ஒவ்வொன்றாக வேறு சில புத்தகங்களையும் வாங்கிக் கொண்டார். ஒவ்வொரு நாளும் எந்திரசாலையில் வேலை



பார்த்துவரும் பொழுதே, அங்குள்ள எந்திரம் ஒன்றின் விளிம்பிலே தம்முடைய புத்தகத்தைப் பிரித்துவைப்பார்; வேலையின் பொருட்டு அந்த எந்திரத்தின் பக்கமாகப் பல முறை செல்ல வேண்டியிருக்கும்; அப்போது ஒவ்வொரு தடவையிலும் புத்தகத்திலிருந்து ஒவ்வொரு வாக்கியமாக வாசித்துப் புத்தகத்தை முடிப்பார். எந்திரசாலையில் நாள்தோறும் பதினாலு மணி நேரம் வேலை செய்யவேண்டியிருந்ததால், வீட்டிலே தங்கிப் புத்தகங்களை வாசிப்பதற்கு இவருக்கு நேரம் கிடையாது. ஆயினும் படிப்பின்மீதிருந்த அளவு கடந்த ஆசையால் இவருடைய முயற்சி அதிகமாக இருந்தது. மிகப் பாடுபட்டுக் கல்வி கற்ற இவர் தம்முடைய இருபத்தைந்தாவது வயதில் பாதிரியானார்; இருபத்தேழாவது வயதில் வைத்தியப் பட்டமும் அளிக்கப் பெற்றார்.

சீனாதேசத்துக்குச் செல்லவேண்டும் என்பதுதான் இவருடைய நினைப்பு; ஆனால் அப்போது அந்த நாட்டில் யுத்தம் ஒன்று நிகழ்ந்துகொண்டிருந்தபடியால், இவர் சீனாவுக்குப் போவதற்கில்லை. அதற்குப் பதிலாக ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார். கப்பலேறி மூன்று மாதப் பிரயாணம் செய்து, 'கேப்டௌன்' நகரத்தை அடைந்தார். அங்கேயிருந்து மாடு


கள் பூட்டிய கட்டைவண்டியில் ஏறி, மிகவும் மெதுவாகப் பிரயாணம்செய்து, எழுநூறு மைலுக்கு அப்பாலுள்ள 'குருமான்' என்னும் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார். 'பெக்குவாலாந்து' நாட்டின் நடுமையத்திலுள்ள சிற்றூர் அது. அங்கே இவர் இரண்டு வருஷகாலம் தங்கி, பிறகு அதற்கு வடக்காக



வுள்ள 'ட்ரான்ஸ்வால்' பிரதேசத்தில் 'மபோட்ஸா' என்னும் சிற்றூரில் பாதிரிஸ்தலம் ஒன்றை ஸ்தாபிப்பதற்குச் சென்றூர். 'மபோட்ஸா' என்னும் சொல்லுக்கு 'மணவிருந்து' என்பது பொருள். ஆனால் பெயருக்கு ஏற்றபடி அது அத்தனை நல்ல ஊர் அன்று; ஏனென்றால் அந்த ஊரில் சிங்கங்களின் உபத்திரவம் அதிகம்.

ஒரு சமயம், அந்தச் சிங்கங்களுள் ஒன்று மனிதர் வாழும் இடங்களில் தைரியமாய்ப் புகுந்து, ஜனங்களுக்கு அளவற்ற சேதம் உண்டாக்கி வந்தது. பலர் அதற்கு இரையாயினர். இதைக் கேள்வியுற்ற லிவிங்ஸ்ட்டன் ஆட்களைத் திரட்டிக் கொண்டு அதை வேட்டையாடச் சென்றூர். அதன்மீது குறி வைத்து இரண்டுதரம் சுட்டார். அப்போது அந்தச் சிங்கம் திடீரென்று எதிர்த்து, அவர்மேல் பாய்ந்து, அவருடைய தோளைப் பற்றி, உடலைக் கீறி, புய எலும்பையும் கடித்து நசுக்கிவிட்டது. தெய்வாதீனமாக அவர் உயிர்பிழைத்தார். ஆனால் ஆயுள்வரையில் அவருக்கு ஒரு கை ஊனமாகவே இருந்தது.

சில வருஷ காலம் அந்த ஊரில் வாழ்ந்தபின், தம் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு, கலஹாரிப்



R. H. BROCK

பாலைவனத்தைக் கடந்து, வடதிசையாகப் பிரயாணம் செய்தார். தம்முடைய முப்பத்தாறுவது வயதில், அதாவது 1849-ம் வருஷத்தில், கடல்மட்டத்துக்கு மேல் இரண்டாயிரத்து எண்ணூறு அடி உயரத்தில் உள்ள 'ங்காமி' என்னும் ஏரியைக் கண்டுபிடித்தார். 1851-ம் வருஷத்திலே அவர் 'ஜாம்பெஸி' நதியைக் கண்டுபிடித்தார்.

அதன் பிறகு கிழக்குமுகமாகச் சென்று ஆப்பிரிக்காக் கண்டத்தைக் கடந்து இந்துமகா சமுத்திரத்தை அடைய ஆசை கொண்டார். ஜாம்பெஸி நதி செல்லும் வழியையே பின்தொடர்ந்து சென்றால் சமுத்திரத்தை அடைந்துவிடலாம் என்பது அவருடைய யோசனை. அப்படிச் செல்லும் வழியில் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி ஒன்றைக் கண்டுபிடித்தார். 'இவ்விடத்தே புகை ஒலிக்கிறது' என்று பொருள்படும் பெயரால் ஆப்பிரிக்கர்கள் அந்த நீர்வீழ்ச்சியை வழங்கிவந்தார்கள். லிவிங்ஸ்ட்டன் இந்தப் பெயரை மாற்றி 'விக்டோரியா நீர்வீழ்ச்சி' என்னும் புதுப்பெயரை அதற்கு இட்டார். அமெரிக்காவிலுள்ள நயாகரா நீர்வீழ்ச்சி உலகத்திலுள்ள நீர்வீழ்ச்சிகள் அனைத்திலும் மிகப் பெரியதென்று பலர் தவறாக நினைக்கிறார்கள். விக்டோரியா நீர்வீழ்ச்சியிலே விழும் நீரானது நானூறு அடி உயரத்திலிருந்து அகாதமான பள்ளத்திலே விழுகிறது. நயாகரா வீழ்ச்சியின் உயரம் இதில் சரிபாதிதான் உள்ளது. இந்த நீர்வீழ்ச்சியிலிருந்து ஐந்து தூவானப் படலங்கள் வானை நோக்கிக் கிளம்பி, வீசும் காற்றின் போக்குக்கு ஏற்ப நெளிந்து, ஆகாயத்தை அளாவி மேகத்தில் போய்க் கலப்பனபோல் தோன்றுகின்றன. இவற்றுக்கு அந்நாட்டினர் இட்ட 'புகை' என்ற பெயரானது மிகவும் பொருத்தமானது என்பதில் ஐயமில்லை.

லிவிங்ஸ்ட்டன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றபோது அவர் வழிநெடுகக் கண்ட காட்சிகள் கண்ணுக்கு அழகாகத்தான் இருந்தன. ஆனால் அவருடைய பொதிமாடுகளில் பல

ஸெட்ஸீ ஈக்களால் கடியுண்டு இறந்தன; காண்டாமிருகங் களும் யானைகளும் வேண்டா வேளைகளில் குறுக்கிட்டுத் துன் புறுத்தின. ஆதலால் இவை யாவும் அவருக்கு வெறுப்பையே



தந்தன. ஆயினும், அந்த யாத்திரையின் கடைசிப்பகுதியில் அவர் மிகவும் அழகான பிரதேசத்தின் ஊடாகச் செல்ல நேர்ந் தது. அங்குள்ள மலைகளிற் பல தூய வெண்மைநிறமுள்ள சலவைக் கற்களால் அமைந்தவையாயும், நதிகளிற் பலவற்றின் அடித்தலங்கள் பவளநிறச் சலவைக்கற்களால் ஆகியவை யாயும் இருந்தன. இவ்வளவு இரம்மியமான பிரதேசத்தின் ஊடாக ஜாம்பெஸி நதி கடலை நாடிச் சென்றது. திரள் திரளான நீர்ப்பறவைகள் அதன் கரையோரத்தில் கூடுகட்டி யும், அதன் நீர்ப்பரப்பின்மேல் இங்குமங்கும் உல்லாசமாய்ப் பறந்தும் வாழ்ந்தன. அந்நதியின் போக்கையே பின்பற்றிச் சென்ற லிவிங்ஸ்ட்டன், கடைசியாக, இந்துமகா சமுத்திரத் தின் கரையோரத்திலுள்ள 'க்விலிமானி' என்னும் நகரத்தை அடைந்தார். அங்கிருந்து போர்ப்படகு ஒன்றில் ஏறி இங்கி லாந்து சென்றார்.

தம் நாடு சென்ற பிறகு, 'பாதிரி யாத்திரை' என்னும் புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டார். முதன் முதலில்

லைரவிட்டுப் புறப்பட்டபோது யாரும் அறியாச் சாமானியப் பாதிரியாயிருந்த அவர், பதினாறு வருஷம் கழித்து இங்கிலாந்துக்குத் திரும்பியபோது அங்கே தமக்குள்ள கீர்த்தியைக் கேட்டுத் திகைத்துப்போனார். அரசாங்க பூகோள சங்கம் அவருக்குப் பொற்பதக்கம் அளித்தது; பிறநாட்டினர் அவரைக் கௌரவித்துப் பாராட்டினர்; விருந்தும் வரவேற்பும் அவருக்குச் சிறப்பாக நடந்தன. அப்பாவியாயும், ஆடம்பரமான தோற்றம் அற்றவராயும், நெடுங்கால உழைப்பினால் இளைத்த மேனியை உடையவராயும், ஆப்பிரிக்காக் கண்டத்துச் சூரியனால் கரியநிறம் பெற்றவராயும் இருந்த அவரை இங்கிலாந்து அரசி தாமாகவே வலிய அழைத்து, விண்ட்ஸர் மாளிகையில் வரவேற்றார்.


மறு வருஷம் அவர் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு ஜாம்பெஸி நதியின் முகத்துவாரத்துக்கு மீண்டும் வந்து சேர்ந்தார். வரும் வழியில் கேப்டௌன் நகரத்தில் இறங்கினார். பிறகு, ஆப்பிரிக்காவின் மத்தியப் பிரதேசத்திலே இரண்டாவது முறை தேசயாத்திரை செய்யத் தொடங்கினார். மறு வருஷம் 'ஷெர்வா' ஏரியையும் 'ந்யாஸா' ஏரியையும் கண்டுபிடித்தார். ந்யாஸா ஏரியை அவர் முதன் முதலில் பார்த்தபோது, அந்த நாட்டினன் ஒருவன், மிகவும் வயதான கிழவன், அருகே இருந்தான். அவனைப் பார்த்து லிவிங்ஸ்ட்டன் 'ஏரியின் மறுகோடி இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?' என்று கேட்டார். அந்தக் கிழவன் திகைப்படைந்து, 'ஏரியின் மறுகோடியா? அதை யார் கண்டார்கள்! ஒருவன் குழந்தைப் பிராயத்திலே புறப்பட்டு, ஏரியின் மறுகோடியைத் தேடிச்சென்றால், அவன் அக்கோடியை அடையுமுன் கிழவனாகி விடுவானே' என்று பதில்சொன்னான். இவ்வளவு பெரிய இந்த நீர்ப்பரப்பு, சமுத்திர மட்டத்துக்குமேல் ஆயிரத்து ஐந்நூற்று எழுபது அடி உயரத்தில் உள்ளது. இதன் அகலம் நாற்பது மைல்; நீளம் முந்நூற்றைம்பது மைலுக்குக் குறைவில்லை.

இதன் பிறகு, அவர் மூன்று வருஷ காலம் பிரயாணம் செய்துகொண்டே போனார். அங்கே புதர் அடர்ந்த காட்டின் நடுவில் அவருடைய மனைவி மரணமடைந்தாள். அந்தத் துயரத்தைத் தாங்கமாட்டாது லிவிங்ஸ்ட்டன் மனமுடைந்து போனார். 'இதோ இக்கணம் நான் சாவதற்குத் தயார்' என்றார். இம்மாதிரியான எண்ணம் அவருக்கு அதற்கு முன் தோன்றியதே யில்லையாம். ஆனால் அவர் தம்முடைய நெஞ்சை ஒருவாறு தேற்றிக்கொண்டு மேலும் யாத்திரை செய்தார்.

இரண்டு வருஷம் கழித்து, அதாவது 1864-ம் வருஷத்தில் ஊர் திரும்பும்படி பாதிரி சபையிலிருந்து அவருக்கு உத்தரவு வந்தது. தம்மூர் போகும் வழியில் அவர் பம்பாய்க்கு வந்தார். அப்போது அவருக்கு வயது ஐம்பத்தொன்று. பம்பாய்க் கவர்னர் அவரை உபசரித்து வரவேற்றார். லிவிங்ஸ்ட்டன் சிலநாள் நமது நாட்டில் தங்கி, சில பிரசங்கங்கள் செய்துவிட்டு இங்கிலாந்து சென்றார். மறுவருஷத்தில் 'ஜாம்பெஸிப் பிரதேசப் பிரயாணத்தின் வரலாறு' என்னும் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டார்.

பிறகு மூன்றாவது முறையாக ஆப்பிரிக்காவுக்குப் பிரயாணம் செய்தார். போகும் வழியிலும் பம்பாயில் இறங்கிவிட்டுச் சென்றார். அவருடைய யாத்திரைகளில் அவர் பட்ட சிரமம் கொஞ்சநஞ்ச மன்று. வழியில்லாக் காடுகளினூடே நுழைந்தும், நீர் கசிந்துகொண்டேயிருக்கும் சதுப்பு நிலங்களைக் கடந்தும் செல்வது எளிதான காரியம் அன்று. இவ்வாறு அவர் சென்றுகொண்டிருக்கையில் ஒருநாள் மரங்களின் ஊடாக நீலமணி போன்ற நிர்மலமான நீர்ப்பரப்பொன்று தென்பட்டது. அதுதான் 'டாங்கனீக்கா' ஏரி. நானூறு மைல் நீளமும் முப்பது மைல் அகலமும் உள்ளது அது. அப்போது அவர் சென்றுகொண்டிருந்த வழிக்கு இரண்டாயிரம் அடிக்குக் கீழாக உள்ள பள்ளத்தாக்கிலே மிகவும் ரமணீயமாகத் தோன்றிய அந்தக் காட்சியைக் கண்டு லிவிங்ஸ்ட்டன்

ஆச்சரியமடைந்தார். 'மிகவும் ஆழமான பள்ளத்தாக்கில் அந்த ஏரி தங்கிக்கிடக்கிறது. அந்த ஏரியின் பக்கங்களாகிய செங்குத்தான மலைச்சரிவுகளி லுள்ள காடுகள் மிகவும் அடர்ந்து செழித்து வளர்ந்திருக்கின்றன. அவை யாவும் இப்போது பச்சைப்பசேலென்று மிகவும் பசுமையாய்த் தோன்றுகின்றன. மலைச்சரிவுகளி லுள்ள பாறைகளி லிருந்து அழகிய அருவி



கள் துள்ளிக் குதிக்கின்றன. அங்குள்ள சமவெளிகளில் காட்டெருமைகளும், யானைகளும், ஒட்டகச் சிவிங்கிகளும், பல வகை மான்களும் தம் இஷ்டம்போல் மேய்ந்து திரிகின்றன. சிங்கங்கள் கர்ஜ்ஜிக்கும் பயங்கர ஓசையானது இரவிலே நம்மை அச்சுறுத்துகிறது. அதிகாலையிலும் அந்தி வேளையிலும் பெரிய

முதலைகள் நீரிலிருந்து வெளியேறி இரை தேடுகின்றன. இரவிலே நீர்யானைகள் தண்ணீரிலிருந்து உறுமும் ஓசை கேட்டுக்கொண்டே யிருக்கிறது' என்று லிவிங்ஸ்ட்டன் தாம் கண்ட காட்சியை வர்ணித்திருக்கிறார்.

நாளுக்குநாள் அவருடைய உடல் இளைப்புற்று வந்தது. ஒரு சமயம் அவர் 'நான் இளைத்துப்போயிருப்பதைப் பார்த்தால் எனக்கே பயமாயிருக்கிறது' என்று சொன்னார். அவருடைய மருந்துப்பெட்டி வழியில் காணமல் போய்விட்டது. ஆதலால் அவர் தமக்கு வைத்தியமும் செய்துகொள்ள முடியவில்லை. இவ்வளவு தளர்ந்த நிலையிலும் அந்தப் பிரதேசத்தின் சௌந்தரியத்தை அவர் அனுபவித்துக்கொண்டு வந்தார். 'இந்தப் பிரதேசத்தின் அழகு மிக மிக ரமணீயமாய் இருக்கிறது. மலை உச்சிகளிலே உள்ள தாளவிருக்ஷங்கள் மலையின் மாகதக் கிரீடங்கள்போல் விளங்குகின்றன. ஐந்நூறு மைல் அகலம் பரந்துள்ள அந்த அரணியத்தின் அழகை எவ்வாறு வருணிப்பது? தேர்வடம்போன்ற பருமனுள்ள கொடிகள் மிகவும் பிரம்மாண்டமான மரங்களிலே பின்னிக்கொண்டு தோரணங்கள்போல் விளங்குகின்றன. நாம் கண்டறியாப் பலவகைக் காட்டுக் கனிகள் எங்கே பார்த்தாலும் கொத்துக் கொத்தாய்ப் பழுத்துத் தொங்குகின்றன. அவற்றுள் சில ஒரு குழந்தையின் தலையத்தனை பெரிதாக இருக்கின்றன. விசித்திர விசித்திரமான பறவைகளும் குரங்குகளும் எங்கே பார்த்தாலும் கூட்டம் கூட்டமாகத் திரிகின்றன' என்று அவர் வர்ணிக்கிறார். ஆனால் இவ்வளவு அழகு மிக்க நாட்டிலே வாழ்ந்துவந்த மக்களிற் சிலர் மிகவும் கொடிய நரமாமிச பட்சணிகளாம்! அங்கே லிவிங்ஸ்ட்டன் கண்ட ஒருவன் பத்துப்பேரைத் தான் கொன்று தின்றதற்கு அறிகுறியாக அவர்களின் தாடையெலும்புகளை மாலையாக அணிந்திருந்தானும்.

நாளுக்குநாள் லிவிங்ஸ்ட்டனுடைய உடல் நிலையும் மனோதிடமும் தளர்ச்சியடைந்துகொண்டே வந்தன. ஆனால் அவ

ரறியாமலே எதிர்பாராத் துணையொன்று அவரை நாடி வந்து கொண்டிருந்தது. அவரிடமிருந்து செய்திகள் ஒன்றும் கிடையாததால் கவலையுற்ற நண்பர்களிற் சிலர் அவருக்குத் துணையை அனுப்பத் தீர்மானித்தார்கள். நியூயார்க் நகரத்திலே பிரசுரமாகிவந்த 'நியூயார்க் ஹெரல்டு' என்னும் பத்திரிகை நிர்வாகிகள் ஸ்டான்லி என்பவரை அழைத்து, 'லிவிங்



ஸ்ட்டன் ஆப்பிரிக்காவில் எங்கேயோ இருக்கிறார்; அவரைத் தேடிக் கண்டுபிடித்தாகவேண்டும்' என்று கட்டளையிட்டார்கள். ஸ்டான்லி ஆப்பிரிக்காவுக்குச் சென்று, இடம் இடமாய் அலைந்து விசாரித்துக் கடைசியாக அரணியத்தின் நடுவிலே லிவிங்ஸ்ட்டனைக் கண்டுபிடித்தார். அத்தனை நெடுந்தூரம் பிரயாணம் செய்து, அவ்வள்வு அரும் பாடுபட்ட ஸ்டான்லிக்குத் தாம் தேடிச் சென்றவரை நேரில் கண்டபொழுது உண்

டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. லிவிங்ஸ்ட்டனை அப்படியே ஆவலோடு வாரி அணைத்துக்கொள்ளவேண்டும் என்று அவருக்குத் தோன்றிற்றும். நடுக்காட்டில், சிறு குடிசையின் முன், லிவிங்ஸ்ட்டன் நின்றுகொண்டிருந்தார். அவருடைய மேனி இளைத்துத் தளர்ந்து நோயுற்று ஒளிமங்கிப் பசந்து கிடந்தது. அவருடைய ஆடை மலினமாய்க் கிழிந்து கிடந்தது. சில ஆப்பிரிக்கர்கள் அவரைச் சூழ நின்றுகொண்டிருந்தார்கள். ஆதலால் ஸ்டான்லி தம் மனத்துள் குதித்தெழும் பேரானந்தத்தை அடக்கிக்கொண்டு, மேல்நாட்டு நாகரிக முறைப்படி தம்முடைய தொப்பியைத் தலையினின்றும் எடுத்து, 'தாங்கள் தான் டாக்டர் லிவிங்ஸ்ட்டன் என்று நினைக்கிறேன்' என்று சொன்னார். இதைக் கேட்டதும் லிவிங்ஸ்ட்டனுடைய முகத்திலே புன்னகை தவழ்ந்தது. அவரும் மகிழ்ச்சியோடு தம்முடைய தலையிலிருந்த குல்லாவைத் தலையினின்றும் தூக்கி 'ஆம்' என்று பதில் சொன்னார். அவ்விருவரும் சிறிது நேரம் ஒருவரையொருவர் பார்த்தவண்ணம் மௌனமாக நின்றார்கள். பிறகு சந்தோஷமாகக் கைகுலுக்கினார்கள். 'உங்களைப் பார்க்கக் கொடுத்துவைத்ததற்காக நான் கடவுளை மனமார வணங்குகிறேன்' என்று ஸ்டான்லி தழுதழுத்த குரலில் சொன்னார்.

லிவிங்ஸ்ட்டனுடைய உடல் மிகவும் நோயுற்றிருக்கக் கண்ட ஸ்டான்லி அவரைத் தம்மோடு ஊருக்குத் திரும்பும்படியாக மன்றாடிக் கேட்டுக்கொண்டார். ஆனால் லிவிங்ஸ்ட்டன் அதற்கு இணங்கவில்லை. அவர்கள் இருவரும் சிலகாலம் ஒன்றாகப் பல புதிய பிரதேசங்களைக் கண்டுபிடித்தார்கள். மறு வருஷம் ஸ்டான்லி தம் நாட்டுக்குத் திரும்பச் சென்று, தாம் லிவிங்ஸ்ட்டனைக் கண்ட அற்புத நிகழ்ச்சியை வெளியிட்டார். என்றும் அழியாப் புகழ் அவருக்குக் கிடைத்துவிட்டது. லிவிங்ஸ்ட்டனோ அந்த நாட்டைவிட்டு அதன் பிறகு வெளிச் செல்லவே இல்லை.

ஸ்டான்லி பிரிந்துபோன பிறகு லிவிங்ஸ்ட்டன் ஒரே இடத்தில் நிலையாயிராமல் புதிய இடங்களை மேன்மேலும் தேடிச் சென்றார். செல்லச் செல்ல அவருடைய நோயும் அதிகரித்துக்கொண்டே வந்தது. கடைசியில் அவரால் நடக்க முடியவில்லை; ஆட்கள் அவரைத் தூக்கிக்கொண்டு செல்ல வேண்டியிருந்தது. அந்த நிலையிலும் அவர் தம்முடைய பிரயாணத்தை நிறுத்தவில்லை. அவருடைய தேகம் க்ஷீணமடைந்து மிகவும் பலவீனமாய்ப் போயிற்று.

கடைசியாக அவர் 'இலாலா' என்னும் இடத்தை வந்து அடைந்தபோது அவர் தம்முடைய ஆட்களைப் பார்த்து, 'எனக்குச் சாகும் தறுவாய் வந்துவிட்டது; சிறு குடிசையொன்று கட்டிக்கொடுங்கள்' என்றார். அவர்களும் அப்படியே செய்தார்கள். அந்தக் குடிசையில் அவர் சிலகாலம் படுத்த படுக்கையாய்க் கிடந்தார். வரவரப் பலவீனம் மேலிட்டுக் கொண்டு வந்ததால், சாமானியக் குளிரையுங்கூட அவரால் தாங்கமுடியவில்லை. ஆதலால் அவர் தம்முடைய ஆட்களைப் பார்த்து, 'குளிர் நடுக்குகிறது, கூரையின்மேல் இன்னும் கொஞ்சம் புல்லைப் போடுங்கள்' என்றார். இப்படியிருக்கையில் அவரிடத்திலே மிகவும் விசுவாசமாயிருந்த வேலைக்காரன், வழக்கம்போல் ஒருநாள் காலையில் அவரைக் காண வந்தபோது, அவர் படுக்கையின் பக்கத்தில் முழந்தாளிட்டுத் தெய்வத்தைப் பணிவதுபோல் இருக்கக் கண்டான். கிட்டச் சென்று பார்த்தான். அப்போதுதான் அவர் இறந்துவிட்டார் என்பது அவனுக்குத் தெரிந்தது. அவருடன் இருந்த பணியாட்கள் அனைவரும் மிகவும் வருத்தமடைந்தார்கள். அந்த நாட்டு வழக்கப்படி அவர்கள் அவருடைய உடலைக் கீறி, அதினின்று அவருடைய இருதயத்தை வெளியே எடுத்து, அவர் இறந்த இடத்திலேயே அதை அடக்கம் செய்தார்கள். அந்த இடமானது இலைகள் செறிந்த காட்டின் நடுவே மிகப் பெரியதொரு

மரத்தின் அடியில் உள்ள இடம்; லிவிங்ஸ்ட்டனுடைய மனத்துக்கு மிகவும் உகந்த இடம்.

பிறகு அவர்கள் அவருடைய உடலுக்குப் பரிமள கந்தங்களிட்டுப் பிறர் அறியாவண்ணம் சாமான் மூட்டையைப்போல் கட்டி, மிகவும் சிரமப்பட்டு, 'ஜான்ஸிபார்' என்னும் துறைமுகப்பட்டணத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். வழியிலே அவர்களுக்குப் பலவிதமான இன்னல்களும் இடையூறுகளும் நேர்ந்தன. ஜான்ஸிபாரிலிருந்து அவருடைய உடலானது இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. கிறிஸ்தவர்களின் பெருங் கோயிலும், இங்கிலாந்து நாட்டின் வீர மைந்தர்களை அடக்கம் செய்யும் நல்லிடமு மாகிய 'வெஸ்ட்மினிஸ்ட்டர்' என்னும் இடத்திலே அவரது உடலை அடக்கம் செய்தார்கள்.

ஆப்பிரிக்காவின் காடுகளும் பாலைவனங்களும் மனித சஞ்சாரமற்றவையாயும், அச்சமும் ஆபத்தும் நிறைந்தவையாயும் உள்ளவை. அவற்றின் ஊடாகச் சென்ற பாதைகளே லிவிங்ஸ்ட்டனுக்குப் புகழளிக்கும் வழியாக இருந்தன. ஆப்பிரிக்காக் கண்டத்தில் புது இடங்களைத் தேடிச் சென்ற மார்க்கதரிசிகள் அனைவரினும் லிவிங்ஸ்ட்டனையே மிகவும் மேம்பட்டவராக உலகம் போற்றிவருகிறது.

லிவிங்ஸ்ட்டன் தூய்மை மிக்கவர். எளிதில் உருகும் மனம் உடையவர். தயையும் இரக்கமும் நிரம்பியவர். பச்சைக் குழந்தையைப்போல் கள்ளம் கபடற்றவர். தம்முடைய வாழ்க்கை நெறியாக அவர் கடைப்பிடித்து வந்த நீதி என்னவென்றால் 'தெய்வத்துக்கு அஞ்சு; தீவிரமாக உழை' என்பதே.

XI. கஜப் புளுகு

'துமிலன்'

சென்ற வருஷம் கூடிய 'காட்டிலாகா உத்தியோகஸ்தர்கள் மகா நாடு' மிகச் சிறப்பாக நடைபெற்றது. மகா நாட்டின் முக்கிய அம்சமான இரவு 'டின்ன'ருக்குப் பிறகு எல்லோரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, மூன்று புலிகள், நான்கு சிறுத்தைகள், ஒரு நொண்டிக் கரடி, இருபது கவுளி வெற்றிலை, முப்பது கேஸ் ஸிகரெட்டுகள் ஆகியவை போன இடம் தெரியவில்லை. ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் தந்தம் பிரதாபங்களை எடுத்துச் சொல்லிக்கொண் டிருந்தார். கிருஷ்ணு ஜில்லா உத்தியோகஸ்தர் சந்திரநாதன் ஒரு சமயம் துங்கபத்திரை நதிக் கரையில் தம்மீது பாய வந்த ஒரு சிறுத்தையைக் குப்புறப் படுத்த வண்ணம் வயிற்றில் சுட்டுத் தள்ளியதைப்பற்றி மயிர்க் கூச்செறியும்படி விவரமாகக் கூறினுர். பன்னீர்செல்வம் தாம் ஏககாலத்தில் இரண்டு கரடிகளுக்கு மத்தியில் அகப்பட்டு உயிர்தப்பியதைப் பற்றிக் கேட்பவரின் கால்கள் வெடவெடத்துப் பூமியில் தாளம் போடும் வண்ணம் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொன்னுர். இந்த இரண்டு கரடி வீரரின் தைரியத்தையும் சமயோசித சாமர்த்தியத்தையும் எல்லோரும் மூக்கின்மேல் கையை வைத்து மிகவும் சிலாகித்தனர்.

இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டு சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்த மாஜி அஸிஸ்டென்ட் பாரஸ்ட் கன்ஸர்வேட்டர் ராஜாங்கம் நாயுடு மட்டும் மூக்கின்மீது விரலை வைக்கவில்லை. அவர் அப்படிச் செய்யாததற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலாவதாக, அவர் போட்டிருந்த மூக்குக்

கண்ணாடியின் விளிம்பு மூக்கை முக்கால் வாசிக்குமேல் அடைத்துக்கொண்டிருந்தது. இரண்டாவதாக, நாயுடுவின் மூக்கு விஷயத்தில் பகவான் மிகவும் சிக்கனமாக இருந்ததால், அவர் தம்முடைய சப்பை மூக்கை விளம்பரம் செய்துகொள்ள விரும்பவில்லை. மூன்றாவது காரணந்தான் மிக முக்கியமானது. பிறருடைய சாமர்த்தியங்களை அவ்வளவு சுலபமாக ஒப்புக்கொள்ளும் பயித்தியக்காரத்தனம் நாயுடுவினிடம் கிடையாது; ஒப்புக்கொள்ள முயலவும்மாட்டார். ஆனால் சந்தர்ப்பம் நேரிடும்போதெல்லாம் தம்முடைய பிரதாபங்களைத் தண்டோராப் போடுவார். நாயுடு தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியை அப்படியே தூக்கிக்கொண்டு எழுந்து வந்து, மற்றவர்கள் பக்கத்தில் அமர்ந்தார். 'பன்னீர்செல்வம் கரடிகளிடமிருந்து தப்பியதைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. ஆனால் நான் ஒரு மதம்பிடித்த யானையினிடம் அகப்பட்டுத் தப்பியதைவிட இதெல்லாம் ஒன்றும் பிரமாதமில்லை. அந்த யானையை இப்பொழுது நினைத்தாலே பயமாயிருக்கிறது' என்று அவர் சொல்லியபோது அவருடைய கைகள் நடுக்கமெடுத்தன.

'அதைச் சொல்லுங்களேன் கேட்கலாம்' என்று ஏக காலத்தில் பல குரல்கள் எழுந்தன. சற்றுக் கட்டுமஸ்தான தேகமுடைய பீமசேனராவ் நாயுடுவிடம் நெருங்கி வந்து உட்கார்ந்தார். அவருக்கு இந்த மாதிரிப் பேச்சென்றாலே தம்மையறியாமல் உற்சாகம் வந்துவிடும்.

'சொல்கிறேன்' என்று கூறிவிட்டு நாயுடு மூக்குக் கண்ணாடியைக் கழற்றி இரண்டு நிமிஷநேரம் நன்றாகத் துடைத்துவிட்டுச் சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டார். பிறகு, 'நான் சிலரைப்போல் கதை கட்டுவது வழக்கமில்லை. ஒன்றைப் பத்தாகச் சொல்லமாட்டேன். என்ன நடந்ததோ அதை அப்படியே கூறுவதுதான் வழக்கம். நான் சொல்வது

என்னவோ கதைபோல்தா னிருக்கும். ஆனால் முற்றிலும் நிஜம் என்பதைப் பற்றி நீங்கள் எள்ளளவும் சந்தேகப்பட வேண்டியதில்லை' என்று பீடிகை போட்டார்.

'அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் நம்பத் தயார்' என்று பீமசேனராவ் உறுதி கூறினார்.

ராஜாங்கம் நாயுடு தம் கதையை ஆரம்பித்தார்:

'இருபது வருஷங்களுக்கு முன் ஒரு சமயம் நான் வட மலையாளத்தில் வேலை பார்த்தேன். குறும்பா நாடு ஸர்க்கிள் என் சார்ஜில் இருந்தது. உத்தியோகம் ஏற்று ஒரு வாரம் இருக்கும். கவிலம்பாரா அம்சத்தைச் சேர்ந்த காட்டின் பக்கம் ஒருநாள் கால்நடையாகச் சென்றேன். வேலைக்காரன் அச்சுதன் என் பின்னால் வந்தான். அப்பொழுது நல்ல வசந்த காலம். எங்கே பார்த்தாலும் பலவித வர்ணமுள்ள புஷ்பங்கள் காட்சி யளித்தன. புஷ்பங்களின் நறுமணம் கம்மென்று வீசிக்கொண்டிருந்தது. காட்டுக்குள் கொஞ்சதூரம் சென்று வரலாமென்று ஆசை தோன்றிற்று. சுமார் ஒரு மைல் தூரம் சென்றிருப்போம். காட்டில் யானைகள் இருக்கின்றனவென் றும், போய்க்கொண்டேயிருந்தால் ஆபத்து வரும் என்றும் அச்சுதன் எச்சரித்தான். ஆனால் அவன் சொல்லியதை நான் லக்ஷியம் செய்யவில்லை. 'உனக்குப் பயமாயிருந்தால் நீ போ என்று சொல்லிக் கோபித்துக்கொண்டேன். என்னிடம் துப்பாக்கி இருந்ததால் அவ்வளவாக எனக்குப் பயம் தோன்ற வில்லை. காட்டின் அழகில் ஈடுபட்டவனாய் அச்சுதன் பின்னே வருகிறானா இல்லையா என்பதைகூடக் கவனியாமல் சென்று கொண்டிருந்தேன்.

கால்மணி நேரத்திற்கெல்லாம், 'ஐயோ' என்ற சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். யானை துதிக்கையால் அவனை மோந்து மோந்து பார்ப்பதும், தடவித் தடவிக் கொடுப்பது மாய் இருந்துவிட்டுச் சிறிதுநேரம் ஏதோ யோசனை செய்வது

போலிருந்தது. அந்தச் சமயம் அச்சுதன் ஒரு பக்கமாய்ப் புரண்டு, ஒரு கையை உயரத் தூக்கினான். மறு நிமிஷம் யானை அங்கே நிற்கவில்லை. நான் இருந்த பக்கமாக வர ஆரம்பித்தது. அச்சுதன் எங்கே தன் வழக்கப்படி 'மாமூல்' கேட்கிறானோ என்றுதான் அது பயந்துவிட்டது என்று எனக்குத் தோன்றியது.

யானை நான் இருந்த பக்கம் ஆடி அசைந்துகொண்டு வந்தது. இந்தப் பரஸ்பர சந்திப்பு நாங்கள் எதிர்பார்த்ததன்று. யானை வேட்டையாட வேண்டுமென்று நானும் கிளம்பி வரவில்லை; அந்த யானையும் ஸ்ரீமான் டி. ராஜாங்கம் நாயுடு, பாரஸ்ட் ஆபீஸர் அவர்களைச் சந்திக்கலாமென்று நினைத்து வந்திராது. எனக்கென்னவோ திடீரென்று யானையைப் பார்க்கவேண்டாமென்று தோன்றியது. இந்தச் சமயத்தில் அதுவும் என்னைக் கவனித்துப் பார்த்து, ஆச்சரியப்பட்டதுபோலிருந்தது. அதன் நடையின் வேகமும் அதிகமாயிற்று.'

'உடனே நீங்கள் கையில் துப்பாக்கியெடுத்துப் பிடித்தீர்களாக்கும்?' என்று பீமசேனராவ் கேட்டார்.

'இல்லை, மணிக்கு இருபதுமைல் வேகத்தில் ஓட்டம் பிடித்தேன். நான் எவ்வளவு தூரம் ஓடியிருப்பேனோ தெரியாது. மிகவும் களைத்து மேலே ஓடமுடியாமல் போகும் வரையில் ஓடினேன். பிறகு சற்று நின்று, சிரமபரிகாரம் செய்துகொண்டு, பக்கத்திலிருந்த ஒரு பெரிய மரத்தில் ஏறி, உயர்ந்த கிளையில் உட்கார்ந்துகொண்டேன். சிறிது நேரத்திற்கெல்லாம் யானை அந்த வழியாக நானிருந்த மரத்தின் பக்கம் வந்து நின்றது. நான் சும்மா இருக்கக் கூடாதா? துப்பாக்கிக் குறிக்கு நேரான இடத்தில் அது நிற்கக் கண்டதும் துப்பாக்கியை எடுத்துச் சுட்டேன்.'

'யானை அப்படியே சுருண்டு விழுந்துவிட்டதாக்கும்?' என்று ஒருவர் கேட்டார்.

'இல்லை; குண்டு தவறிப்போய் அதன் காதில்தான் பட்டது. அது உடனே வெகுண்டு, நாலுபக்கமும் திரும்பிப் பார்த்துவிட்டு, உயர நோக்கியபோது எனக்குக் கதிகலங்கி விட்டது. அன்று பூமாதேவியின் பாரம் என்னாலோ யானையாலோ குறைவுபட்டாக வேண்டுமென்று கடவுள் நிச்சயித்துவிட்டதாகத் தோன்றியது. என் மனத்தில் பலவித எண்ணங்கள் மாறி மாறித் தோன்றின. ஒரு மதம் பிடித்த யானையின் சவத்தின் பக்கத்தில் நான் துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருப்பதுபோலவும், அப்படியுள்ள படத்தின் கீழே 'ஸ்ரீமான் ராஜாங்கம் நாயுடு தன்னந்தனியாக எதிர்த்துச் சுட்ட யானை' என்ற எழுத்துக்களுடன் பிரபல பத்திரிகைகளிலெல்லாம் பிரசுரமாகியிருப்பதுபோலவும் எண்ணிப் புளகாங்கிதமடைந்து கர்வத்துடன் யானையை நோக்கினேன்.

அந்தச் சமயத்தில் யானை மரத்தைத் துதிக்கையால் சுற்றிக்கொண்டிருந்தது.

அதைக் கண்டதும் வாழ்க்கையில் நான் செய்த நல்லது கெட்டது எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு தினசரிப் பத்திரிகைக்குச் சந்தா அனுப்பாமலேயே காலங் கழித்துவந்ததும், பிறகு அந்தப் பத்திரிகாசிரியர் புதுச்சேரிக்கு ஓடிப்போனதும் ஞாபகத்துக்கு வந்து, வெகுவாக மனத்தைப் புண்படுத்தியது. ஒருநாள் ஸினிமாவின் சாயந்திர ஆட்டத்துக்கு என் மனைவியை அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லிவிட்டு ஏமாற்றியதை எண்ணியபோது, யானையின் கையில் அல்லது காலில் அகப்பட்டால் நேரே ரௌரவாதி நரகத்துக்குத்தான் போகவேண்டுமென்று தோன்றியது.

அப்போது யானை மரத்தை ஆட்டத் தொடங்கியது.

வேட்டைக்காரர்கள் யானையிடமிருந்து தப்பிய கதைகளையெல்லாம் ஞாபகப்படுத்திக்கொண்டு பார்த்தேன். அப்படிச் செய்தால் தப்புவதற்கு ஏதாவது வழி தோன்றுதா

என்று ஆசை. ஆனால் யானைகளால் மனிதன் கொல்லப்பட்டு, அவை தப்பியோடிய கதைகள் மட்டுமே ஞாபகத்துக்கு வந்தன. அதைச் சுட முயன்று குறி தவறிப்போனால், பின்னும் வெறிகொண்டு மரத்தைப் பிடுங்குமே என்று பயந்து சுடா திருந்தேன்.

யானை மரத்தைக் கால்வாசி அசைத்துவிட்டது.

குடும்பத்தைப்பற்றிய நினைவுகள் வந்தன. ஆனால் என் குடும்பம் என்பது நான், என் மனைவி, ஒரு குழந்தை ஆகிய மூவர் கொண்ட சிறிய குடும்பமே யாதலால் அந்த நினைவுகள் நீடித்திருக்கவில்லை. மரமோ ஆடுகிறது. நாழிகை கழித்து வீடு திரும்பினால் மனைவி 'காப்பி ஆறிப்போய்விட்டதே, சொல்லாமல் நீங்கள் பாட்டுக்கு எங்கே போனீர்கள்?' என்று கோபிப்பாளே என்ற பயமும் பிடித்துக்கொண்டது.

இந்தச் சமயத்தில் என் மார்பிலிருந்து ஏதோ சரசர வென்று கீழே ஊர்ந்து போவதுபோ லிருந்தது. திகிலால் உடம்பு சிலிர்த்துக் குளிர்ந்துபோயிற்று......"

'ஐயோ, பாம்பாக்கும்' என்றார் பீமசேனராவ்.

'பாம்பு என்றுதான் நானும் திகிலடைந்தேன்; ஆனால் அது இல்லை. என் சட்டையிலிருந்த பொத்தான்தான் கழன்று அப்படி மெதுவாகக் கீழே விழுந்தது. நான் என்னவோ எல்லாவற்றையும் பிரமாதப்படுத்திச் சொல்லுகிறேன் என்று எண்ணாதீர்கள். அப்பொழுது நான் அடைந்த உணர்ச்சிகளை அப்படியே சொல்லுகிறேன்' என்றார்.

யாரும் ஒன்றும் பதில் பேசவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டனர்.

'மரம் ஆட்டம் எடுத்துவிட்டது.'

'யானை மரத்தைப் பிடுங்கிக் கீழே வீசி யடித்தால் என் உடம்பில் ஒரு பாகம்கூட அகப்படாது. அது மரத்தைப் பிடுங்குவதில் மும்முரமாக விருக்கும்போது கீழே இறங்கி ஓடி விடலாமென்று ஒரு யோசனை தோன்றியது. குரங்குபோல்

கிளையிலிருந்து கிளைக்குத் தாண்டிக் கடைசிக் கிளைக்கு வந்தேன். அந்தக் கிளை கீழே தரை வரையில் தொங்கிக்கொண்டிருந்தது. ஆயிற்று, மரம் இன்னும் இரண்டு நிமிஷத்தில் கீழே விழுந்துவிடும்; யானையோ என்னைப் பார்க்கவில்லை. இதுதான் சமயமென்று நான் கீழே குதித்து ஓடத் தொடங்கினேன்.'

'ஆஹா ஹா!' என்று பீமசேனராவ் வியந்து, நாயுடு மேலே சொல்லப்போவதை ஆவலுடன் எதிர்பார்த்தார்.

'நான் நூறு கஜ தூரம் போவதற்குள் மரம் கீழே விழுந்துவிட்டது. மரத்தில் நான் இல்லாததை யானை அறிந்ததும், நாலுபுறமும் தேடிப்பார்த்து, நான் ஓடுவதைக் கண்டுவிட்டது......'

'அப்பா! கதையைக் கேட்கும்போதே பயமாயிருக்கிறதே! உங்களுக்கு அப்பொழுது எப்படித்தான் இருந்ததோ?' என்று பீமசேனராவ் ஆச்சரியத்துடன் வினவினார்.

'அதை ஏன் கேட்கிறீர்கள்? நான் புனர்ஜன்மம் எடுத்தேன் என்றே சொல்லவேண்டும்' என்று நாயுடு பதிலளித்து, மேலே கதையைத் தொடங்கினார். அவர் கதையில் தம் முழு மனத்தையும் பறிகொடுத்திருந்தார். அவர் இந்த உலகத்திலேயே இல்லை.

'யானை பாய்ச்சலாகப் பாய்ந்து வந்தது. எனக்கு முன் சிறிது தூரத்திலிருந்த ஒரு வாய்க்காலின்மீது போட்டிருந்த மெல்லிய மூங்கில் பாலத்தைக் கடந்து தப்பலாமென்று எண்ணினேன். ஆனால் யானை வெகு சமீபத்தில் வந்துவிட்டது. என்னால் பாலத்திற்குப் போகமுடியாதென்று கண்டதும், கடைசியாக, வந்தது வரட்டு மென்று தைரியமாகத் திரும்பி நின்று, யானையை நோக்கிக் குறிவைத்துச் சுட்டேன்.'

'யானை சுருண்டு கீழே விழுந்துவிட்டதாக்கும்' என்றார் பீமசேனராவ்.

'இல்லே, துப்பாக்கியில் குண்டு இல்லே; யானே என்னேக் கொன்றுவிட்டது! என்று ஆவேசத்துடன் சொன்னுர் ராஜாங் கம் நாயுடு.

அப்பொழுது அங்கே கிளம்பிய சிரிப்பையும், ஆரவாரத் தையும், கைகொட்டலேயும் பார்க்கவேண்டுமே!

XII. மின்சாரமும் மனித வாழ்க்கையும்

பெ. நா. அப்புஸ்வாமி

நாம் இக்காலத்தில் வாழும் நவநாகரிக வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் மின்சாரம் பின்னிக்கிடக்கிறது. நமது வீடுகளில் அது விளக்கேற்றுகிறது; விசிறி வீசுகிறது; மணி அடிக்கிறது; நீர் இறைக்கிறது; வெந்நீர் போடுகிறது; அறைகளேத் துலக்கிச் சுத்தமாக்குகிறது; துணிகளுக்கு இஸ்திரி போடுகிறது; கிராமபோனேயும் தையல் எந்திரத்தையும் சுற்றுகிறது. அது நெல்லேக் குத்துகிறது; தானியங்களேயும், மிளகாயையும் அரைக்கிறது; சீயக்காயையும், பாக்கையும் பொடிக்கிறது; காப்பிக்கொட்டையை வறுத்துத் தூளாக்கித் தருகிறது. வேண்டுமானுல், காப்பியும் போடுகிறது; ரொட்டி வாட்டுகிறது; சமைக்கிறது. ரேடியோவை ஒலிக்கச்செய்து உலகம் முழுவதிலும் நடக்கும் செய்திகளே நமக்கு உணர்த்துகிறது; நல்ல சங்கீதத்தையும் பிரசங்கங்களேயும் எளிதாகக் கேட்கச் செய்கிறது; உற்ருர் உறவினரைப் பற்றிய செய்திகளே வெகு துரிதமாக நமக்குத் தெரிவிக்கிறது. நாம் வீட்டிலிருந்தபடியே அயல் வீட்டாரோடும் அயல் ஊராரோடும் அதன் உதவியால் பேச முடிகிறது. வீட்டை விட்டு வெளியே புறப்பட்டால் அங்கும் அது செய்கிற உதவிகள் எத்தனே! நம்மைக் கடைக்கோ, ஆபீசுக்கோ, நாடகமேடை முதலிய

பொழுது போக்கு இடங்களுக்கோ, அயல் ஊர்களுக்கோ ஏற்றிச் செல்கிறது. கீழிருந்து மாடிக்குத் தூக்கிக்கொண்டுபோய் விடுகிறது. நோயுற்றபோது நமக்குச் சிகிச்சை செய்கிறது. இவ்வாறு அது செய்துவரும் செயல்களுக்குக் கணக்கே இல்லை.

நகர வாழ்விலே இவ்வாறு உதவிசெய்யும் மின்சாரம் கிராம வாழ்க்கையிலும் மிகவும் உதவி செய்யக்கூடியதாக இருக்கிறது. ஆயினும், நமது நாட்டிலே நாம் அதை இன்னும் அத்தனை அளவாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. மேல் நாடுகளிலோ, அதைக்கொண்டு பற்பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். உழுதல், பரம்படித்தல், விதை விதைத்தல், விதையை முளைக்கத் தூண்டுதல், பயிரை வளரச் செய்தல், கதிர் அறுத்துச் சூட்டடித்தல், நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சுதல் முதலிய விவசாய வேலைகளுக்கெல்லாம் மின்சாரம் அங்கே உதவுகிறது. நமது நாட்டிலும் இவ்வகைக் காரியங்களில் மின்சாரத்தைச் சிறிது சிறிதாக, மேன்மேலும் பயன்படுத்த முயன்று வருகிறார்கள்.

இப்போது நமது நாட்டில் கிராமங்களிலுங்கூட, வீடுகளுக்கும், கடைகளுக்கும், கோழிக்கூடுகள் மாட்டுக்கொட்டில்கள் முதலியவற்றுக்கும், தெருக்களுக்கும், கலியாணங்களுக்கும், திருவிழாக்களுக்கும், வாரச் சந்தைகளுக்கும், அவ்வப்போது கிராமத்துக்கு வரும் சிறு நாடகங்களுக்கும், சினிமாக்களுக்கும், சர்க்கஸ்களுக்கும் விளக்கேற்ற அதை உபயோகிக்கத் தொடங்கிவிட்டார்கள். வீடு முதலிய எல்லா இடங்களிலும் விசிறி வீசுதல்; கிணற்றிலிருந்து வீட்டுக்கு நீர் இறைத்தல்; தோட்டங்களிலும் வயல்களிலுமுள்ள செடி கொடிகளுக்கும் பயிர்களுக்கும் மரங்களுக்கும் நீர் பாய்ச்சுதல்; சூட்டடித்தல்; நெல் முதலியவற்றைக் குத்தி உமியையும் தவிட்டையும் போக்குதல்; பருத்தியிலிருந்து விதையைப் போக்கிப் பஞ்சு வேறு விதை வேறாகப் பிரித்தல்; நிலக்கடலை முதலியவற்றின் மேல்தோலை அகற்றுதல்; தானிய வகைகளை

அரைத்துத் திரித்துப் பொடித்து மாவாக்குதல்; சோளத் தட்டை முதலியவற்றைத் துண்டு துண்டாக நறுக்கிக் கால் நடைகளுக்குத் தகுந்த உணவாகத் தயார்செய்தல்; கரும்பை ஆலையிலிட்டுச் சாறு பிழிதல்; புன்னைக்கொட்டை, ஆமணக்கு முத்து, இலுப்பமுத்து, நிலக்கடலைப் பருப்பு, எள்ளு முதலியவற்றிலிருந்து எண்ணெய் ஆட்டுதல்; மரம் அறுத்தல்; கிராம வாழ்விற்கு ஏற்ற சின்னஞ்சிறு எந்திரசாலையிலுள்ள எந்திரங்களை ஓட்டுதல்—இவை முதலிய பல காரியங்களில் மின்சாரம் மேன்மேலும் பயன்பட்டு வருகிறது. இவ்வாறு பயன்படுவதற்கு வேண்டிய சௌகரியங்களை எல்லாம் அரசாங்கத்தார் செய்துவருகிறார்கள்.

இப்பொழுது, ஏதாவதொரு காரணத்தால் மின்சாரம் திடீரென்று நின்றுவிட்டால் நமக்கு எத்தனை சௌகரியங்கள் குறைந்துபோகும்! வாழ்க்கையே கஷ்டமாகிவிடும் என்று கூடத் தோன்றுகிறது.

மின்சாரம் உபயோகத்துக்கு வரத்தொடங்கிச் சுமார் நூற்றைம்பது வருஷங்களே ஆகின்றன. அக்காலத்துக்கு முன்னும் மின்சாரம் இல்லாமலில்லை; ஆனால், அதன் இயல்பையும் ஆற்றலையும் மக்கள் தெரிந்துகொள்ளவில்லை. தம்முடைய குற்றேவல்களையெல்லாம் செய்யவல்ல பணியாளாக அதை வசமாக்கிக்கொள்ளவில்லை. அப்படிச் செய்ய முடியும் என்பதையே அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இப்பொழுதோ, மின்சாரத்தின் தத்துவங்களை ஆராய்வதில் ஈடுபட்ட விஞ்ஞானிகளின் ஊக்கத்தாலும் மதிநுட்பத்தாலும் இதை ஒட்டிய அறிவு மேன்மேலும் பெருகிக்கொண்டே வருகிறது.

'மின்சாரத்தைப் பற்றிய அறிவு ஏற்பட்டு நூற்றைம்பது வருஷந்தானா ஆகிறது! இத்தனை காலமாக அதைப்பற்றிய அறிவு ஏன் உண்டாகாமல் இருந்தது? இயற்கையில் மின்சாரம் இல்லாமலிருந்ததா? மதிநுட்பமுள்ள விஞ்ஞானிகள் முன் காலத்தில் இல்லையா? எத்தனையோ பேர்கள் இருந்திருக்கிறார்

களே! அவர்கள் இதை ஏன் கண்டுபிடிக்கவில்லை?' என்று கேட்க லாம். ஒலியையும், வெப்பத்தையும், ஒளியையும் போலவே மின்சாரமும் உலகெங்கும் இருக்கிறது; இருக்கவும் செய்தது. ஆயினும், அது சற்றே மறைவாய் இருந்தது என்று சொல்ல வேண்டும். அப்படி என்றால், அது மின்சாரத்தினுடைய குறை யன்று; நம்முடைய குறையே. இருட்டிலே மறைந்து கிடக்கும் பொருள் இருக்கவே இருக்கிறது; ஆனால் நம்முடைய கண் களுக்கு அது தோன்றுவதில்லை; வெளிச்சத்தைக் கொண்டு வந்து தேடிப்பார்த்தால் அது புலப்படும். அதைப்போலவே தான் மின்சார விஷயத்திலும். இயற்கை நிகழ்ச்சிகளை உணரும் பொருட்டு நமக்குச் சில தனி உறுப்புக்கள் இருக் கின்றன. ஒலியைக் கேட்பதற்கென்று நமக்குக் காதுகள் இருக்கின்றன. ஒளியைப் பார்ப்பதற்கென்று நமக்குக்கண்கள் இருக்கின்றன. வெப்பத்தை நம்முடைய உடல் முழுதும் உணருகிறது. ஆனால் மின்சாரத்தை உணர்வதற்கென்று அமைந்த விசேஷ உறுப்பு ஒன்றும் நமக்கு இல்லை.

எத்தனையோ மின்சாரக் கருவிகளை நாம் நித்தியப்படி உபயோகித்து வருகிறோம். ஆயினும், சாதாரணமாக அவை எப்படி வேலை செய்கின்றன என்பதை அறிந்துகொள்ளுவது கஷ்டமாக இருக்கிறது. நாம் உபயோகிக்கும் மற்ற எந்திரங் களிலும் கருவிகளிலும் அவ்வாறு இல்லை. நம்முடைய கடி காரம் ஓடுகிறது. திறந்து பார்த்தால் அது எப்படி ஓடுகிறது என்பது தெரிகிறது. அதற்குச் சாவி கொடுக்கிறோம்; ஒரு வில் அமுங்குகிறது; அதனால் கடிகாரம் ஓடுகிறது. ஓர் எஞ்சின் ஓடுவதைப் பார்க்கிறோம். அதிலே தண்ணீர் கொதிப்பதையும், அத்தண்ணீர் நீராவியாவதையும், அந்நீராவி வேலை செய்து சக்கரங்களைச் சுழற்றுவதையும் கவனிக்க முடிகிறது. நீரின் உதவியாலும், காற்றின் உதவியாலும் வேலை செய்யும் பிற எந்திரங்களிலும் இப்படியே. மளமள என்று ஓடும் நீரைப் பார்க்க முடிகிறது; ஹோ என்று அடிக்கும் காற்றை உணர

முடிகிறது; அவை வேலைசெய்யும் முறைகளும் நன்றாகக் கண்ணுக்குத் தெரிகின்றன. மின்சாரத்திலோ என்றால், அப்படி யில்லை. மின்சாரம் நமது கண்ணுக்குத் தெரிவதில்லை; காதுக்குக் கேட்பதில்லை. சுவரில் உள்ள ஒரு முளையைக் கீழே சாய்க்கிறோம்; இருட்டறை பளிச்சென்று பிரகாசமாகிறது. ஒரு பொத்தானை இலேசாக அழுத்துகிறோம்; ஓசையற்ற இடத்திலே கணீரென்று மணி அடிக்கிறது; அல்லது விசிறி விர்ரென்று சுழன்று காற்றடிக்கிறது. ஓரிடத்திலும் சக்கரம் ஒன்றையும் காணோம். வெறும் கம்பிகளைத் தவிர வேறொன்றும் இருப்பதாகத் தெரிவதில்லை. இந்நிகழ்ச்சிகள் நம்மைத் திகைக்கச் செய்கின்றன. மின்சாரத்தின் தன்மையையும் அது வேலைசெய்யும் முறையையும் நம்முடைய சாமானிய ஐம்புலனுறுப்புக்களால் அறிவதற்கில்லை. மின்சார விளைவுகள் வெறும் புலனுறுப்புக்களுக்குச் சாதாரணமாய் எட்டாதவை. அவ்விளைவுகளை யொட்டிய அனுபவங்களைத் திரட்டித் தொகுத்துப் பிரித்து, அறிவாலும் ஊக்கத்தாலும் ஆராய ஆராயத்தான் அவற்றின் நுட்பங்கள் நாளடைவில் வெளியாயின. அதன் தன்மையை ஒருவாறு தெரிந்துகொண்டதும், பிறகு அதைப் பற்றி விரிவாக அறிந்துகொள்வது எளிதாயிற்று. ஓரிடத்தில் களவாடிய கள்ளனைப் பிடித்துவிட்டால், அவன் திருடிய திருட்டுக்கள் எல்லாம் துலங்குவதுபோல், மின்சாரம் உண்டென்று உணர்ந்ததும், அதைப்பற்றிய அறிவு மளமளவென்று பெருகிவிட்டது.

மேலே சொல்லிய ஒலி, வெப்பம், ஒளி ஆகிய இம்மூன்றும் யாவரும் உணரும்படி புறத்தே தோன்றிக்கிடக்க, மின்சாரம் மட்டிலும் மறைவாய்க் கிடப்பது ஏன்? 'நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும், அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு' என்பது போலவா இதுவும்?—இருக்கலாம். கொடிய விஷப்பாம்பு தீண்டினால், மரணம் உண்டாவதற்குச் சிறிது நேரம் பிடிக்கும்; பரிகாரமும் உண்டு. ஆனால் கொடிய

மின்சாரம் தீண்டினால், உடனே மரணம்; பரிகாரத்துக்கு இடமே கிடையாது. அத்தனை கொடிய சக்தியுள்ள மின்சாரம் மறைவாயிருந்தாலும் மனிதனுக்குக் கீழ்ப்படிந்து குற்றேவல் செய்துவருகிறது. மனிதன் தன்னுடைய அறிவின் திறத்தினாலும், மனத்தின் துணிவினாலும் மின்சாரத்தையும் வென்று வசப்படுத்திவிட்டான்.

XIII. கிழவியின் நிழல்


கி. வா. ஜகந்நாதன்

வெயில்; படை பதைக்கும் வெயில். அந்த வெயிலில் கொத்தர்களும், கல்தச்சர்களும் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வேலையிலே கண். வெயிலின் வெம்மையை அவர்கள் அவ்வளவாக உணரவில்லை. ஆயிரக்கணக்கான கூலியாட்கள் அங்கே வேலை செய்துகொண்டிருந்தனர். நூற்றுக்கணக்கான சிற்பியர் தங்கள் கலைத்திறனைக் காட்டினர். சிவபாதசேகரன்—சோழ சக்கரவர்த்தி—இராஜராஜ சோழன் நெடுநாட்களாக எண்ணி எண்ணிச் சங்கற்பம் செய்து கொண்ட காரியம்; ஒரு பிரம்மாண்டமான ஆலயத்தைத் தஞ்சைமாநகரில் நிருமிக்கவேண்டுமென்று ஆர்வத்தோடு தொடங்கிய முயற்சி அது.

சோழ நாட்டிலுள்ள சிறந்த சிற்பிகளும் பிற நாட்டிலிருந்து வந்த சிற்பிகளும் அந்தப் பெரிய கோயிலின் நிருமாணத்திலே ஈடுபட்டிருந்தனர். சக்கரவர்த்தி நருமதா நதியிலிருந்து பிரும்மாண்டமான பாணலிங்கத்தைக் கொணர்ந்து ஜலவாஸம் செய்வித்திருந்தான். தஞ்சைக்கு மூன்று மைல் தூரத்திலிருந்து அந்த ஆலய விமானத்திற்குச் சாரம் கட்டியிருந்தார்கள். அந்த இடத்துக்குச் சாரப்பள்ளம் என்னும் பெயர் இப்பொழுதும் வழங்குகிறது.

நாளுக்கு நாள் ஆலயம் உருப்பெற்று வந்தது. அதைக் கண்ட இராஜராஜன் உள்ளம் பூரித்தான்.

ஆலய விமானத்தைச் சாத்தியமானால் வானளாவ நிரு மித்து விடவேண்டு மென்பது அவன் ஆவல். அவன் மனம் அப்படி ஒரு கோபுரத்தைக் கற்பனை செய்து பார்த்தது. அதன்படியே செய்வதென்பது மனிதனால் சாத்தியமா? மனம் கற்பனை செய்யும் வண்ணமே கை செய்துவிட்டால் அப்பால்



தேவலோகமென்று ஒன்று இருக்கவே நியாயமில்லை. அது பூலோகத்துக்குத் தாழ்ந்து பணிந்து வாழவேண்டியதுதான். கடவுள் அப்படி அமைக்கவில்லை. மனிதனை நினைக்கப் பண்ணி னார். நினைத்தபடி யெல்லாம் செய்ய அவனுக்குச் சக்தியைக் கொடுக்கவில்லை.

தன்னுடைய ஆவல் முழுவதும் நிறைவேருவிடினும் அதிற் சிறிதளவாவது நிறைவேற்ற முயலவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டான் அரசன். சிற்பிகள் ஆலய விமானத்தை நிருமிக்கத்தொடங்கினர். அடிப்பீடத்திலே அவ்விமானத்தின் உயரத்திற்கு ஏற்ற பரப்பை அமைத்தார்கள். இராஜராஜனுடைய புகழ்போல, தமிழ் நாட்டுக் கலைச்செல்வத்தின் எழுச்சிபோல, கோபுரம் வானை நோக்கி நிமிரத் தொடங்கியது.

விமானத்தின்மேல், வெயிலில், கருமமே கண்ணுக வேலை செய்துவந்த சிற்பியர்கள் சோழ சக்கரவர்த்தியின் அன்புக்குப் பாத்திரரானுர்கள். உணவு முதலிய சௌகரியங்களிற் சிறிதும் குறைவின்றி அவன் ஏற்பாடு செய்திருந்தான். கலைஞர்களின் பெருமையை அவன் நன்கு உணர்ந்தவன். அந்த வெயிலில் அவர்களுக்குத் தாகம் உண்டாகுமாளுல் யாரேனும் சிற்ருள் வந்து நீர் கொடுப்பான். அது மிகவும் இனிமையாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும். குளத்திலிருந்து எடுத்துவந்த நீராளுல் அவ்வளவு தண்மை இராது. சிற்பிகள் அந்தத் தண்ணீர் அவ்வளவு குளிர்ச்சியாகவும், விலாமிச்சை வேரின் மணமுடையதாகவும் இருப்பதை உணர்ந்து, 'இது எங்கேயிருந்து வருகிறது?' என்று விசாரிக்கத் தொடங்கினர்.

ஒரு கிழவியின் கைங்கரியம் அது. 'மகாராஜா எவ்வளவோ அன்பாக இந்தக் கோயிலைக் கட்டுகிருர். இவர்களெல்லாம் மிகவும் சிரத்தையாக வேலை செய்கிருர்கள். நாமும் இந்தக் கைங்கரியத்திலே கலந்துகொள்ளவேண்டும்' என்று எண்ணிளுள் அவள். 'நம்மால் இயன்றது இதுதான்' என்று நினைத்துத் தினந்தோறும் விடியற்காலையிலே எழுந்து பெரிய மிடாக்கள் நிறையத் தண்ணீரை நிரப்பி விலாமிச்சை வேர் முதலியன போட்டு வைத்திருப்பாள். வேலைக்காரர்கள் அங்கே வந்து தாகம் தீர்த்துக்கொள்ளுவார்கள். விமான

வேலையில் ஈடுபட்டவர்களுக்குச் சிற்றுண்டிகள் கொண்டுபோய்க் கொடுப்பார்கள்.

'இவ்வளவு சிரத்தையாக நமக்குத் தாகத்திற்குத் தண்ணீர் தரும் இந்தக் கிழவி யார்?' என்று சிற்பிகள் ஆச்சரியப்பட்டார்கள். அவளை வந்து பார்த்துச்சென்றார்கள். ஒவ்வொரு நாளும் மாலையில் வேலை முடிந்தவுடன் அந்தப் பாட்டியிடம் வந்து பேசிவிட்டுச் செல்வார்கள். அவளும் மிக்க அன்போடு அவர்களுக்கு ஏதேனும் சிற்றுண்டி தருவாள்.

இவ்வாறு பாட்டியின்பால் ஈடுபட்டவர்களுள் சிற்பியர் தலைவனும் ஒருவன். விமான வேலை நிறைவேறும் தறுவாயில் இருந்தது. அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன் றிற்று. 'இந்த ஆலய நிர்மாணத்திலே உண்டாகும் புண்ணி யத்திலே ஒரு பங்கு இந்தக் கிழவிக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்' என்று அவன் எண்ணினான்.

'பாட்டீ, நாளையோடு விமான வேலை முடிந்துவிடும். மேலே கும்பம் வைக்கவேண்டியதுதான் பாக்கி. இவ்வளவு நாள் நீ மிகவும் சிரமப்பட்டு எங்களுடைய தாகத்தைத் தீர்த்துவைத்தாய். உனக்கு அதனால் எவ்வளவோ புண்ணியம். உன்னுடைய பொருளாக அந்த ஆலயத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் ஒன்றை வைக்கவேண்டுமென்பது என் ஆசை. ஏதாவது கொடு' என்றான் சிற்பியர் தலைவன்.

'நான் என்ன பெரிய காரியம் செய்துவிட்டேன்! குளத்து ஜலத்தைக் குடி என்று சொன்னேன். அவ்வளவுதானே! நீங்களெல்லாம் எவ்வளவோ புண்ணியவான்கள். இந்த உல கம் உங்களைப் பாராட்டிப் புகழும். மகாராஜாவின் கீர்த்தி உலகம் உள்ளளவும் நிற்கும்' என்றாள் பாட்டி.

சிற்பியர் தலைவன் பாட்டியை இலேசில் விடவில்லை. ஏதாவது கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று வற்புறுத்தி னான். 'என்னிடம் தங்கம் வெள்ளியா இருக்கிறது? இந்த வாசலிலே படியாக இருக்கிறதே, இந்தக் கல்தான் சிறிது

உபயோகமாக உள்ளது. இதை வைத்துக்கொண்டு நீ என்ன செய்வாய்?' என்று அந்தக்கிழவி கூறினாள்.

'இதுவே போதும்; உன்னுடைய புண்ணியம் நிலை கொள்வதற்கு இதுவே அடையாளக் கல்லாக இருக்கும் என்று சொல்லிவிட்டு அவன் ஓர் ஆளைக்கொண்டு அந்தக் கல்லைப் பேர்த்து எடுத்துச் சென்றான்.

வானளாவ நிமிர்ந்து நின்றது விமானம். இராஜராஜன் வணங்காமுடி வீரன். அவன்கூடக் கழுத்து வலிக்க நிமிர்ந்து பார்த்தான். அவனுக்கு உண்டான உவகைக்கு அளவேது? தன்னுடைய வாழ்விலே முக்கியமானதொரு காரியத்தைச் சாதித்துக்கொண்டவன் ஆனான். விமானத்தின் சிகரத்திலே கலசம் பதிக்கப்பெற்றது. ஆலயத்திலே மூர்த்திகளின் பிரதிஷ்டை வெகு விமரிசையாக நிகழ்ந்தது. சோழநாட்டுக் கலைச்செல்வத்தின் கூம்பு, இராஜராஜ சோழனின் அன்புச் சிகரம், இராஜராஜேச்வரம் என்னும் அத்திருக்கோயிலின் விமானம் தேவலோகத்தை எட்டிப் பிடிக்கவில்லையேயொழிய அது மனிதனுடைய செயற்கையின் உயரத்தை எட்டிப் பிடித்தது. பிரகதீசுவரருக்கு ஏற்ற பெரிய விமானமாக அது அமைந்தது.

கும்பாபிஷேகம் நடைபெற்றது. இராஜராஜனுடைய பட்டாபிஷேகங்கூட அவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை. அவன் முடிபுனைந்தது சோழ அரசின் உரிமையைப் பெற்றதற்கு மாத்திரம் அடையாளம். அதன்பின் அவன் பெற்ற வெற்றி, அவன் உள்ளத்துள் வளர்ந்துவந்த சிவபக்தி, அவனுக்குக் கலைகளின்பால் இருந்த பேரன்பு இவ்வளவுக்கும் அடையாளமாக ஓங்கி நிற்கும் அத்திருக்கோயிலின் கும்பாபிஷேகம் சோழ சக்கரவர்த்தியின் வெற்றிப் பிரதாபத்தையும் பக்தியையும் புகழையும் உலகம் அங்கீகரிக்கும் திருவிழாவாக அமைந்தது. ஜன சமுத்திரத்தின் இடையிலே அந்தக் கோபுரம் ஒரு கப்பலின் கூம்புபோல நின்றது.

இராஜராஜன் அன்று ஆனந்தக்கடலில் மூழ்கியிருந்தான். இறைவன் தான் எண்ணியதை நிறைவேற்றியருளினான் என்ற கர்வம் அவன் நெஞ்சினுள்ளே ரீங்காரம் செய்தது. 'நாம் கிருதார்த்தம் அடைந்தோம்' என்ற திருப்தியோடு நில்லாமல், 'நாம் நம் ஆற்றலால் இதைச் சாதித்தோம்' என்ற அகங்காரமும் அந்த அன்புள்ளத்திலே தலைகாட்டியது.

இரவிலே அவன் பள்ளிக் கட்டிலிலே படுத்தான். உறக்கம் வருமா? உள்ளம் ஆனந்த அலைமோதிக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அந்தக் கொந்தளிப்பிலே சிறிது அமைதி எற்பட்டது. கொஞ்சம் கண் அயர்ந்தான்.

'பிரபோ! இந்த ஏழையின் சங்கற்பத்தை நிறைவேற்றிய திருவருளை நான் பன்னிப் பன்னிப் பாராட்டுவதை யன்றி வேறு என் செய்யவல்லேன்!' என்று மனமுருகக் கண்ணீர் வழிய இராஜராஜன் கூறினான்.

அவன் எதிரிலே சைவத் திருவேடம் பூண்டு பிருகதீசுவரர் நின்றார். 'நீ செய்ததெல்லாம் நல்லதே; உன்னுடைய அன்பினால் நிருமிக்கப்பட்ட ஆலயத்திலே ஒரு கிழவியின் நிழலிலே நாம் சுகமாக இருக்கிறோம்.' இதுதான் அவர் பேசிய திருவார்த்தை. அப்பால் அவர் மறைந்துவிட்டார்.

அரசன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். அவன் மேனி முழுதும் மயிர்க்கூச்செறிந்தது. வேர்வை துளித்தது. 'இறைவன் கனவில் எழுந்தருளினான்; நம் ஆலயத்திற் குடிகொண்டான்; இது நாம் பெற்ற பாக்கியம்!' என்று அவன் குதூகலித்தான். ஆனால் அந்தக் குதூகலம் முழுதாக இல்லை; அதிலே ஒரு குறை இருந்தது: 'கிழவியின் நிழலிலே இருப்பதாகப் பரமேசுவரன் வாய் மலர்ந்தானே. அது என்ன?' என்று யோசிக்கலானான். 'நாம் நிருமித்த ஆலயத்தில் "கிழவியின் நிழல்" எங்கே இருக்கிறது? கிழவியின் நிழல் என்றால் என்ன? கிழவி யார்? அவள் எங்கே இருக்கிறாள்?' என்ற கேள்வி

கள் அவன் உள்ளத்தே எழுந்தன. 'அவள் யார்?' என்று பலதடவை வினவிக்கொண்டான். யார் சொல்வார்கள்?

அரசன் கண்ட கனவு மந்திரிகளுக்குத் தெரிந்தது. அவர்கள் விசாரிக்கத் தொடங்கினார்கள், அரசனுக்கு இருந்த உற்சாகம் திடீரென்று தடைப்பட்டு நின்றது. 'இறைவன் திருவுள்ளத்திலே இருக்கும் அந்த முதிய புண்ணியவதி யார்? யார்?' என்று அரசன் உசாவிக்கொண்டே இருந்தான்.

சிற்பியர் தலைவனுக்குத்தான் இரகசியம் தெரியும். அரசன் பெருங் கவலைக்கு உள்ளாகியிருப்பதை உணர்ந்த அவன் அரசனை அணுகினான். விஷயத்தை வெளியிட அவன் மனம் துணியவில்லை. தான் செய்த காரியம் நன்றியறிவுக்கு அடையாளமாக இருப்பினும் அரசன் அதைப் பெருங் குற்றமாக எண்ணிவிடுவானோ வென்று அவன் நடுங்கினான். பிறகு ஒருவாறு துணிந்து கூறத் தொடங்கினான்.

'மகாராஜா, நாங்கள் விமான வேலை செய்த காலத்தில் எங்களுக்கு மிகவும் குளிர்ந்த தண்ணீர் தந்து எங்கள் தாகத்தை ஒரு கிழவி போக்கினாள். அவளுக்குக் கைம்மாறாக எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவளுடைய பொருள் ஒன்றை இந்த ஆலயத்திலே சேர்த்துவிடவேண்டுமென்று எண்ணி அவளைக் கேட்டேன். அவள் தன் வீட்டு வாயிலில் இருந்த படிக் கல்லைத் தந்தாள். விமானம் நிறைவேறும் தருணத்தில் இருந்தமையின் விமானத்தின் உச்சிக் கல்லாக அதை வைத்தேன்; அது அங்கே நன்றாகப் பொருந்திவிட்டது' என்று அவன் கூறி முடிப்பதற்கு முன் அரசன், 'ஹா! ஹா!' என்று விம்மிதனானான். அவன் கண்ணில் நீர் துளித்தது. சிறிது நேரம் அவன் தன்னையே மறந்திருந்தான். அவனுடைய கர்வம் பங்கப்பட்டுவிட்டது. அவ்வளவு முயன்று செய்தும், அவன் நிருமித்த ஆலயத்திலே இறைவன் இருந்தும், பயனை நினையாமல் அன்பு செய்த கிழவியே இறைவனுக்கு நிழல் தரும் பாக்கியத்தைப் பெற்றாள்.

'அப்படியா! உங்களுக்கு நீரும், பகவானுக்கு நிழலும் தந்த அந்தப் புண்ணியவதியை நான் தரிசிக்கவேண்டும்' என்ருன் அரசன்.

கிழவி வந்தாள். 'தாயே, உன் பெருமையே பெருமை. எங்கள் மனத்திலே இறைவன் இருக்கிருன்; அவன் திருவுள்ளத்திலே நீ இருக்கிருய். உன் அன்பின் நிழலிலே அவன் வசிக்கிருன். நான் நிருமித்தேனென்று இறுமாந்திருக்கும் அந்தப் பெரிய கோயிலிலே, எனது அகங்காரத்தின் வெம்மையே சூழ்ந்திருக்கிறது. அதனிடையில் உன்னுடைய தன்னலமற்ற உபகாரத்தின் அடையாளமான கல்லின் நிழலிலே, உன்னுடைய அவ்யாஜமான பிரேமைக் குடையின் கீழ் என் குல தெய்வம், சோழ குல மூர்த்தி, விசுவமே தன்னுடைய உருவமான பிருகதீசுவரன் உளமகிழ்ந்து கோயில்கொண்டிருக்கிருன். நீ நீடு வாழ்க!'

மன்னன் இவ்வாறு தன் உள்ளத்தைத் திறந்துவிட்டான். யாவரும் பிரமித்துப் போயினர்.

கிழவி பழைய கிழவியாக இருக்கவில்லை. அவள் அரச குடும்பத்துள் ஒருத்தியைப்போல வாழலானுள்.

XIV. சீவக சிந்தாமணி

ச. த. சற்குணர்

சீவக சிந்தாமணியின் அமைப்பும் உவமை முதலியவற்றின் வகைகளும் பிற்காலத்தில் உண்டான பல காவியங்களில் காணப்படுகின்றன. பழைய திருவிளையாடலைவிடப் பிற்காலத்துத் திருவிளையாடலாகிய பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணமானது அதிகமாகப் படிக்கப்பட்டுவருகிறது. அதற்குக் காரணம் அது சீவக சிந்தாமணியை அதிகமாகத் தழுவியிருத்தலே என்று எனக்குத் தோன்றுகிறது.

சேக்கிழார் புராணத்தில், அவர் காலத்திலிருந்த சோழ வரசன் சீவக சிந்தாமணியைப் படித்துக்கொண்டிருந்தானென்றும், சமண சமயக் காப்பியமாகிய அதனை வாசிப்பதினும் நாயன்மார் சரிதையைப் படித்தல் நலமென்று சேக்கிழார் கூறினரென்றும் கூறப்பட்டிருக்கின்றது; இந்த வரலாற்றினால் அக்காலத்தில் அரசன் சீவக சிந்தாமணியில் ஈடுபட்டிருந்தானென்று தெரிகின்றதல்லவா? அதனாலே அதன் பெருமை நன்றாகப் புலப்படுகிறது.

தமிழில் பஞ்சகாவியங்கள் என்று கூறப்படும் ஐந்து நூல்களில் காலத்தால் முற்பட்டவை சிலப்பதிகாரமும் மணிமேகலையும். ஆனால் சொல்லும்பொழுது சீவக சிந்தாமணியைத் தான் முதலிற் சொல்லுகிறார்கள். அந்த முறையும் அதன் பெருமையையே விளக்குகின்றது.

தமிழில் பல சிந்தாமணிகள் இருக்கின்றன; சோதிட வைத்திய வேதாந்த சிந்தாமணிகள் இருக்கின்றன. ஆயினும் தனியே 'சிந்தாமணி'யென்றால் அத்தொடர் சீவக சிந்தாமணியைத்தான் குறிக்கும்.

சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் என்னும் புலவர் உரையெழுதியிருக்கிறார். அவர் மிகச் சிறந்த உரையாசிரியர்; பல நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். அவரைப்பற்றி மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் மிகவும் உருக்கமாக ஒரு செய்யுள் பாடியிருக்கிறார்கள். அமுத வாயுடையவர், பரம வுபகாரியென்று பாராட்டியிருக்கிறார்கள். அத்தகைய சிறந்த புலவர் உரை எழுத எடுத்துக்கொண்டதும் சீவக சிந்தாமணியின் பெருமையைப் புலப்படுத்தும். அவர் மிகவும் சிரமப்பட்டு, ஜைன சம்பிரதாயங்களை அறிந்துகொண்டு சிந்தாமணிக்கு உரை எழுதினாராம். தமிழ், வடமொழி என்னும் இரண்டு மொழியிலும் வன்மையையுடைய உரை ஆசிரியராகிய பரிமேலழகர் மிக நுட்பமாக எழுதுபவர். அவர் தமக்கு ஏற்றபடி திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் உரை எழுதினார்.

அதுபோலப் பலநூற் பயிற்சியுடைய நச்சினர்க்கினியர் சீவக சிந்தாமணியின் பெருமையை அறிந்து அதற்கு உரை எழுதுதலை ஏற்றுக்கொண்டார்.

ஐரோப்பியர்கள் பலர் தமிழைக் கற்றுக்கொண்டு இதன் பெருமையைப் பாராட்டியிருக்கின்றனர். வீரமா முனிவர் என்ற ஒரு பெரிய பாதிரியார் அங்ஙனம் தமிழைக் கற்றவர்களுள் ஒருவர். அவருடைய இயற்பெயர் 'பெஷி' என்பது. அவர் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் கற்றுக்கொண்டார். இந்தத் தேசத்துச் சன்யாசிகளைப்போலவே காஷாய உடை, பாதக்குறடு, சடை முதலியவற்றையுடையவராக இருந்தார். அவர் தமிழில் இலக்கண நூல் ஒன்று எழுதியிருக்கிறார். தேம்பாவணி என்று ஒரு காவியம் இயற்றியிருக்கிறார். வேறு சில நூல்களையும் எழுதியிருக்கிறார். அவர் ஓரிடத்தில் ஆங்கிலத்தில் 'தமிழ்ப் புலவர்களுக்குள் சீவக சிந்தாமணி ஆசிரியர் சிறந்தவர்' என்று கூறியிருக்கிறார்.

நன்னூல் உரையில், தன்மையாற் பெயர்பெற்ற நூலுக்கு உதாரணமாக, 'சிந்தாமணி' கூறப்பட்டிருக்கிறது. சிந்தாமணி என்பது தேவலோகத்தில் உள்ள ரத்தினத்தின் பெயர். அது நினைத்ததெல்லாம் தரும். அதைப்போல இந்த நூலும் பல பயன்களைத் தரும். சீவக சிந்தாமணியிற் கூறப்படும் கதாநாயகனுகிய சீவகன் 'சிந்தாமணி' என்று கூறப்படுகிறான். நூலினுள் அங்ஙனம் மூன்று இடங்களில் அச்சொல் வருவதைக் காண்கிறோம்.

சிந்தாமணியின் கதாநாயகனுன சீவகனிடத்தில் பல அருமையான குணங்களைக் காண்கிறோம். அருள், வலி, ஆண்மை, கல்வி முதலிய சிறந்த குணங்கள் அவனிடம் நிரம்பியிருக்கின்றன. துன்பப்படுவோர்களிடத்தில் அவன் இரங்கி உபகாரம் செய்கிறான்; ஆசிரியரிடத்தில் பணிவாக நடந்து கொள்ளுகிறான்; தனக்கு உதவிபுரிந்த பலரிடத்தும் நன்றியறிவுடையவனுக இருக்கிறான்; தான் பிறந்த இடமாகிய சுடு

காட்டை அழித்து, அங்கே பல கட்டடங்களைக் கட்டி நாள் தோறும் பலபேர்களுக்குப் பால் கொடுக்கும்படி செய்விக்கிறான்.

இந்தக் காவியத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நூலின் கடைசிப்பகுதி முத்தியிலம்பகமென்பதாகும். சீவகன் இறுதியில் துறவை அடைவதாகக் கூறப்படுகிறது. இழந்த அரசைப் பெற்று இன்பங்களை அனுபவித்துக்கொண்டிருந்த சீவகன் ஒருநாள் ஒரு தோட்டத்திற்குச் சென்றான். அங்கே ஒரு குரங்கு பலாப்பழமொன்றைப் பறித்துக்கொணர்ந்து தன் மனைவியாகிய பெண்குரங்கினிடம் கொடுத்தது. அதனை அது தின்பதற்குள் தோட்டக்காரன் அதனை அதனிடமிருந்து பிடுங்கிக்கொண்டான். அக்காட்சியைக் கண்டவுடன் சீவகனுக்கு வைராக்கியம் ஏற்பட்டது. 'நாம் பெற்றிருக்கும் இந்தச் செல்வமும் ஒருவர் கையிலிருந்து மற்றொருவருக்கு மாறுவதுதானே' என்று அவன் எண்ணினான். புத்தன் சிறிய விஷயத்தை யறிந்து துறந்ததுபோலச் சீவகனும் இந்தக் காட்சி காரணமாகத் துறந்தான்.

இந்தக் காவியத்திற்கு மணநூல் என்று ஒரு பெயர் உண்டு. இதில் எல்லா விஷயங்களும் மணங்களாகவே கூறப்படுகின்றன. முதலில் சீவகன் படிக்கின்றான்; கல்விக்குத் தெய்வமாகிய நாமகளை மணந்ததாக முதல் இலம்பகம் கூறுகின்றது. பின்பு வெற்றி பெற்றதைச் சொல்லும் பகுதி கோவிந்தையாரிலம்பகம் என்பது; விஜயலட்சுமியை மணந்ததுபற்றி அஃது அங்ஙனம் அமைக்கப்பட்டது. பின்பு சீவகன் பல பெண்களை மணந்துகொள்கின்றான். கடைசி இலம்பகத்தில் அவன் முத்தி பெறுதல் கூறப்படுகிறது; அங்கும் முத்திமகளை அவன் மணம் செய்துகொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நூலாசிரியராகிய திருத்தக்க தேவர் சமணசமயத்தினர். சமணர்கள் நான்கு வணக்கங்கள் கூறுதல் வழக்கம்.

அருக சரணம், ஸித்த சரணம், ஸாது சரணம், தர்ம சரணம் என்பவை அந்த நான்கு. திருத்தக்க தேவர் தம்முடைய ஆசிரியரை அருக சரணம் பாடித் தரும்படி கேட்டார். அவர் இயற்றித் தந்தார். பின்பு ஸித்த சரணத்தைத் திருத் தக்க தேவர் எழுதித் தம் குருவினிடம் காட்டினர். தம் முடைய பாட்டைவிட அது சிறந்ததாக இருந்ததைக் கண்ட குரு திருத்தக்க தேவர் பாடிய ஸித்த சரணத்தை முதலில் வைத்துப் பின்பு தாம் எழுதிய அருக சரணத்தைச் சேர்க்கச் சொன்னர். தேவரும் ஆசிரியர் கட்டளைக்கு அடங்கி அங் ஙனமே செய்தார்.

சிந்தாமணியில் திருக்குறள், புறநானூறு முதலிய நூற் கருத்துக்கள் பல வந்துள்ளன; பல அருமையான உவமை களும் உருவகங்களும் வந்துள்ளன.

காந்தருவதத்தையார் இலம்பகத்தில், 'துன்பமுற்றவர்க் கல்லால் இன்பமில்லை' என்று ஓரிடத்தில் இருக்கிறது. இந்தக் கருத்து மிகவும் அருமையானது. துன்பம் உற்றால்தான் இன்பம் தெரியும். முதலிலேயே இன்பம் இருந்துவிட்டால் அதன் அருமை தெரியாது.

துன்பம் வந்த காலத்தில் நகுக என்று ஓரிடத்தில் கூறப் பட்டிருக்கிறது. திருக்குறளில் 'இடுக்கணழியாமை' என்னும் அதிகாரத்துட் கூறப்பட்ட பல கருத்துக்கள் மிகவும் அழகாக இங்கே எடுத்து ஆளப்படுகின்றன. துன்பத்தை இன்பமாகக் கொள்ளும் நிலையை அங்கே கூறியிருத்தல் அறிந்து மகிழத் தக்கது. துன்பமும் இன்பமும் மனத்தால் விளைவனவே. ஒன்றை இன்பமாக நினைத்துவிட்டால் அஃது இன்பமாகவே இருக்கும். இந்தச் சிறந்த கருத்தைச் சிந்தாமணியில் காண் கிறோம்.

சீவக சிந்தாமணியைப் படிப்பதனுல் நாம் பல விஷயங் களை அறிந்துகொள்ளலாம். எந்தக் காப்பியமாயினும், அதில் உள்ள பொது விஷயங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

XV. சீமைக் கடிதம்

எம். லக்ஷ்மியம்மாள்

இங்கே இப்பொழுது, வஸந்தகால ஆரம்பமாம். இன்னும் ஒரு மாதத்துக்குள் மழைக்காலம் ஓய்ந்துவிடுமென்று ஜனங்கள் படும் சந்தோஷம் கொஞ்சமன்று. இந்த வருஷம் கடுங்குளிர்; பத்து வருஷங்களாக இவ்வளவு கடுமையான மழைக்காலம் கண்டதேயில்லை யென்று சிலபேர் சொல்கிறார்கள். இப்பொழுது கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாக ஒரே மப்பு; காலையில் எங்கும் இலேசாய்ப் புகை பரவினாற்போல் காணப்படும்; அதனூடே மரஞ் செடிகளும், கட்டடங்களும் பிரமாண்டமாய்த் தோன்றும்; அநேகமாய் மத்தியானத்துக்குள் இந்த மப்பு இருண்டு, சிறிது தூரத்துக்கப்பால் கண்ணுக்கு ஒன்றும் தெரியாமல் மறைத்துவிடும். சில சமயங்களில் பத்து நிமிஷத்தில் மப்புக் கலைந்து மாயமாய்ப் போய் வெயிலடிக்கும்; அப்படியில்லாமல் நாலைந்து நாள் ஒரே மூடு பனியாக இருந்தால்தான் சங்கடம்; அப்பொழுது மூச்சு விடுவதே கஷ்டம்; இதைவிடப் பனி பெய்தாலும் மழை பெய்தாலும் ஜனங்களுக்குத் திருப்திதான்; ஏனெனில் அப்பொழுது குளிர் குறையும்; காற்றும் சுத்தமாயிருக்கும்.

இங்கு நான் கண்ட புதுமைகளில், பனி-மழையை விட அழகான காட்சி வேறொன்றுமில்லை. முதல் முதல் பார்த்தவுடன் அது இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. ஜன்னல் வழியாகக் காற்றில் ஏதோ பஞ்சு பறப்பதுபோல் காணப்பட்டது; வெகு சீக்கிரம் பனிச் சிதர்கள் இரண்டு மூன்றிலிருந்து இருபது முப்பதாகத் திரண்டுவிட்டன; அரைமணி நேரத்துக்குள் பூமியெல்லாம் புல் பூண்டு தெரியாமல் பனிமூடிவிட்டது. அப்பனியை அள்ளி வாயிற் போட்டுக்கொண்டால்,

அதன் ஸ்பரிசம் சில்லிட்ட கற்கண்டுப் பொடிபோலிருக்கும்; அதைச் சேர்த்து நொறுக்கிப் பந்துபோலாக்கி ஆடலாம்; பொம்மைகள் செய்யலாம்; அது கட்டியான பின்பு, உஷ்ணத்தால் இளகுமே யன்றி இலகுவில் உடையாது. கட்டிப் பனியின்மேல் குழந்தைகளும் பெரியவர்களும் சறுக்கி விளையாடுவது வெகு அழகான காட்சி. பனி பெய்து ஓய்ந்தபின், பாதையிலிருந்து ஒரு புறமாய் ஜனங்கள் அதை விளக்குமாற்றால் தள்ளிக் குவிப்பார்கள். இந்தக் குவியல்கள் இளகித் தண்ணீராய் ஓடும்பொழுது, ஜனங்கள் சறுக்கி விழாமல் பத்திரமாய் நடக்கவேண்டும்.

மப்போ, மந்தாரமோ, பனியோ, மழையோ எது வந்தாலும் சரி; காலை எழு மணிமுதல் இராத்திரி பன்னிரண்டு மணிவரை, ஜனங்கள் தெருக்களில் கூட்டங் கூட்டமாய்ச் சாய்வதற்குக் குறைவேயில்லை. தலையில் தொப்பி, கழுத்து முதல் கணைக்கால்வரை அழுத்தமான கோட் ஒன்று, காலில் ஜோடு, கையுறை தரித்த கையில் குடையொன்று, பையொன்று; இவ்விதக் கோலத்துடன் ஆண்பாலாரும் பெண்பாலாரும் ஆயிரக்கணக்காக அவரவர்கள் பாட்டைப் பார்த்துக்கொண்டு போவார்கள்; தோட்டங்களி னருகில் உலாவுகிறவர்களைத் தவிர, மற்றவர்களுடைய நடை ஓட்டந்தான் தெருவிலும், ரயில், பஸ் வண்டிகளிலும் ஜனங்கள் அநேகமாய் மௌனம் சாதிப்பார்கள். உரத்த குரலில் பேசுவோர் அநேகமாய் அயல் நாட்டுக்காரர்கள் தான்.

'பஸ்' வண்டிகளைப் பெண்கள் ஓட்ட நான் பார்க்கவில்லை; யுத்தம் முடிந்தபின் பெண்கள் அந்த வேலையை விட்டுவிட்டார்களாம். பஸ் வண்டிகளிலும், ரயில் வண்டிகளிலும் தோல் வாரைப் பிடித்துக்கொண்டு பெண்கள் நிற்க, புருஷர்கள் சௌக்கியமாய் உட்கார்ந்துகொண்டிருப்பதை அநேகந் தடவை பார்த்திருக்கிறேன். சில வருஷங்களுக்குமுன் இவ்விதக் காட்சியை ஈனமென்று சொல்வார்களாம்; இப்பொழுதோ, பெண்

பாலாரும் புருஷர்களுடன் சமமான உரிமைகளை உடையவர்கள் என்று ஏற்பட்டுவிட்டதால், பெண்களை 'மெல்லியலார்' என்று ஆதரிக்கும் கொள்கைகள் முன்னவ்வளவு வழங்கவில்லையாம். பெண்-போலீஸாரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேனே யொழிய, இன்னும் ஒருத்தியையேனும் பார்க்கவில்லை; ஆனால் கடைகளிலும், 'ஹோட்டல்'களிலும், தபாலாபீசுகளிலும் பெண்கள்தாம் பெரும்பாலும் காணப்படுகிறார்கள். இளம் பெண்கள் கைப்பாடு பட்டு ஜீவனம் செய்வதும், தன்னந்தனியே குடித்தனம் செய்வதும், தனிவழிப் போவதும் இப்பொழுது சகஜம்; அவர்கள் பாட்டிமார் நாளில் கிடையாது. இங்குள்ள ஸ்திரீகளின் சுதந்திரமும் சாமர்த்தியமும் அவர்கள் ஜனசமூக வாழ்க்கையில் ஊன்றி உதித்தனவாகையால், ஒருவரும் அவற்றை அதிசயமாகப் பாராட்டுவதில்லை. சாமர்த்திய மில்லாத அயல்நாட்டுப் பெண்கள்கூட இங்கு தைரியமாய் வாழலாம்.

விருந்தாளிகளை அழைத்துக்கொண்டு, 'ஹோட்டல்'களில் சாப்பிடுவதும், வேலையொழிந்த ஓய்வு நேரத்தைத் தோட்டங்களிலும், 'க்ளப்'களிலும், நாடகசாலைகளிலும் கழித்துவிட்டு, படுக்கைக்கு மட்டும் விடுதிக்குப் போவதும் இங்கே சகஜம். வீட்டு வாடகை அநியாயச் செலவு; தவிரவும் வீட்டுக்குத் தக்கபடி சாமான்கள் வாங்கிப் போடுவதும், வேலைக்காரர்களை அமைப்பதும் வெகு கஷ்டம். சாதாரண வீடுகளில், அநேகமாய்ச் சமையலறையும், உக்கிராணமும் நிலவறைகளாக இருக்கும். படுக்கை யறைகள் மாடியில்; சாப்பாட்டுக் கூடமும் வரவேற்கும் கூடமும் கீழ்த்தளத்தில்; இவை யிரண்டுந் தான் வீட்டின் முக்கியமான பாகம்.

இந்த அறைகளில் ஜன்னல் திரைகள், கம்பளங்கள், நாற்காலி, மேஜை முதலிய எல்லாம் ஒன்றுக்கொன்று இசைந்த வர்ணங்களில் இருக்கவேண்டும். சுவர்களில் படங்களும், மேஜைகளில் பூக்களும் இல்லாத அறை பாழிடம்

போலத்தான் பாவிக்கப்படும். தீக்கணப்பிடத்தைச் சுத்தப் படுத்தி, பளபளவென்று துடைத்து, அதன் மேற்பரப்பைப் பலவிதமாக அலங்கரித்து வைக்கவேண்டியது குடித்தனத் துக்கு லக்ஷணம். சாப்பாட்டிடத்தில் வைத்திருக்கும் சீனுப் பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டு, ஒருகுடும் பத்தின் அந்தஸ்தைச் சுமாராய் மதிக்கலாமாம்; ஆனுல், சமையலறையில் உபயோகப்படுவன, அநேகமாய், இரும்பு அல்லது இனுமல் பாத்திரங்களே. சமையல்காரிகளும், வேலைக் காரிகளும் அகப்படுவது முன்னைக்கிப்பொழுது எவ்வளவோ கஷ்டம் என்று சொல்லுகிருர்கள்.

தினம் வேலையொழிந்த பின்பு வேடிக்கையாய்ப் பொழுது போக்க அவகாச மில்லாவிட்டால், அதைப்போலக் கஷ்டமும் ஈனமுமான வாழ்வு வேறில்லையென்று அநேக ஜனங்கள் நினைக் கிருர்கள். இந்தப் பட்டணத்தில் இருபதிருபத்தைந்து நாடகசாலைகளும், எத்தனையோ சித்திரசாலைகளும், காட்சி பங்களாக்களும் தோட்டங்களு மிருக்கின்றன; எங்கே போனு லும் ஜனக்கூட்டமே.

குளிரின் கொடுமையால், படுக்கையும் கம்பளிகளும் பளு வான உடைகளும் இங்கே அத்யாவசியம்; இவை இல்லாமல், ஏழை ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பற்றி வெகு கொரமான கதைகள் நான் கேட்டிருக்கிறேன். ஸர்க்காரும் பரோபகாரி களும் அக்கஷ்டத்தை நிவர்த்தி செய்ய என்ன பாடு பட்டும், உலகத்தில் ஓரிடத்திலும் அது தீரும் வழி இன்னும் ஏற்பட வில்லை.

நம்மூரில் என்ன விசேஷம்?

XVI. தினசரிதை

ஆனந்தரங்கப் பிள்ளை

தேசும்புமீ 8வ: கார்த்திகை உயிகூ சித்தார்த்தி:

இந்த நாள் செவ்வாய்க்கிழமை ராத்திரி நடந்த அதிசயமே தென்றால், சவரிமுத்து முதலி மகன் ஆசாரப்பனுக்கு சரீரம் சொஸ்தமில்லாம விருந்தபடியினாலே அந்த வீட்டிலே அந்த வியாதிஸ்தனுடனே கூடப் படுத்துக்கொண்டிருந்த பேர் அய்யா மேஸ்திரி, கனகப்ப முதலி, அம்மையப்ப முதலி மைத்துனன், பேர் விளங்கா வெள்ளாழப் பிள்ளையாண்டான் ஒருத்தர், ஆக நாலுபேர் படுத்துக்கொண்டிருக்கச்சே, ராத்திரி பதினஞ்சு நாழிகைக்குமேல், நாலுபேர் தடிகாரரும் ஒருத்தன் சேகுவைக்காரன் போலேயும் ஆக அஞ்சுபேருமாய் வந்த தாய்த் தலைக்கடையிலே படுத்திருந்தவன் சொற்பனம் கண்டானும். அப்படியிருக்கச்சேதானே அந்த அஞ்சுபேரும் மெய்யாக வந்ததாய் அவன் கண்ணுக்குத் தோற்றப்பட்டது.

அதின்பேரிலே அவனை ஒரு தடிகாரன் ஓங்கி ஒரு அடி போட்டானும். அவன் அந்தமட்டிலே திண்ணைமேலே படுத்திருந்தவன் தாழ விழுந்து, பயந்து பயந்து குப்புறப் படுத்துக் கொண்டானும். அப்படியிருக்க, அவனை விட்டுப்போட்டு, உள்கட்டுக்குப் போய், கதவை யிடிச்சார்களாம். உள்ளே படுத்திருந்த பேர் 'ஆரோ தெரியாது' என்று பேசாமல் இருந்தார்கள். அப்படியிருக்க, நாலுதரம், ஆறுதரம் மறு படியும் கதவை யிடிச்சார்களாம். அதின்பேரிலே அய்யா மேஸ்திரி என்கிறவன் எழுந்திருந்து 'ஆரடா அது கதவை இடிக்குறது' என்று கதவைத் திறந்து பார்த்தான். ஒருத்தரையும் காணோம். அந்த மட்டிலே படுத்துக்கொண்டான்.

பின்னேயும் சற்று நேரத்துக்குள்ளே யெல்லாம் சரீர சொஸ்தமில்லாமலிருக்கிற ஆசாரப்பனுக்கு சலவைபோலே கண்டுபோச்சு. மூச்சில்லாமல் பிராண அவஸ்தை கண்டது. அப்படிக் கண்ட உடனே இந்த வயித்தியன் அய்யா மேஸ்திரியை எழுப்பிப் பார்க்கச் சொன்னார்கள். இவன் எழுந்திருந்து, கிட்டப்போய், கையைப் பிடிச்சுப் பார்த்த மாத்திரத்திலே இவனுக்கு சுரணே தெரியாமல், அந்த மட்டிலே கல்லாகக் கவிழ்ந்து இவனும் பேச்சு மூச்சில்லாமல், போறது வாறதாய், தலேயும் நாணிப்போய், கால் கை யெல்லாம் சோர்ந்து போச்சுது.

அந்தமட்டிலே ரெண்டு மூணு பேராய்க் கூடி கைலாகிலே எடுத்துக்கொண்டுபோய் அய்யா மேஸ்திரி வீட்டிலே கொண்டுபோய், போட்டுவிட்டு வந்துவிட்டார்கள். உள்ளே படுத்திருந்த பேருக்குள்ளே ரெண்டுபேர் பேச்சுத்தான் இப்படி ஆச்சுதே. பின்னே ஒருத்தன் வெள்ளாழப் பிள்ளேயாண்டான் பெட்டிமேலே படுத்திருந்தவனே அழைக்க, அழைக்க பேச்சுமூச்சில்லாமல் கிடந்தவன் கிடந்தபடியே சுரணே தெரியாமல், பிடவையுடனே மூத்திரம் பெய்துகொண்டு அவன் பேச்சுமூச்சும் ஆய்ப்போனதாய் தீர்ந்தது.

அதன் பிறகு மந்திரவாதிகள் சோனகர் இப்படிப்பட்ட பேர்களே அழைப்பிச்சுப் பார்க்கச் சொன்னார்கள். அவர்கள் வந்து பார்த்து, அதுக்கேற்றபடிக்கு கோழி கொண்டு வந்து சுற்றியும், சோறு சுற்றிப்போட்டும், கழிப்புக் கழிக்கிறதென்று சொல்லியும், தமிழ் ஞாயத்துக்குள்ளே எப்படி நடக்குமோ அதைப் பார்க்கப் பின்னேயும்பத்துப் பங்கு அதனமாய் மந்திரவாதிகள் நடப்பிச்சார்கள். அதுகளுக்கெல்லாம் அவர்களும் சம்மதிச்சு விவரங்கள் கேட்டதெல்லாம் கொண்டு வந்து கொடுத்து, சம்மதியான படிக்குப் பார்க்கச் சொன்னார்கள்.

செய்யுட் பாடக் குறிப்புரை

1. தோத்திரம்

I. கடவுள்

இது கம்பராமாயணத்தின் காப்புச் செய்யுள். இன்ன தெய்வம் என்று குறித்துக் கூருது, பொதுவான பரம்பொருளைத் துதிப்பது.

உள ஆக்கல் = உண்டாக்குதல், படைத்தல்; நிலைபெறுத்தல் = நிலை பெறச் செய்தல், காத்தல்; நீக்கல் = அழித்தல்; அலகுஇலா = எல்லையில் லாத, முடிவில்லாத; விளையாட்டு உடையார் = விளையாட்டுக்களை (லீலை களை) உடையவர்; சரண் = அடைக்கலம்.

உலகங்களை யெல்லாம் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத் தொழில்களையும் தமக்கு ஒய்வில்லாத லீலையாகக் கொண்டவர் முழுமுதற் கடவுள்; அத்தகைய அவருக்கே நாங்கள் அடைக்கலம்.

II. கலைமகள்

இதனை இயற்றிய சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் படிப்பவர் மனத்தில் வீராவேசத்தோடுகூடிய தேசபக்தியை எழுப்பக்கூடியவை. தோத்திரம், காவியம் முதலிய பிற வகைகளிலும் இவர் கவிகள் இயற்றி யுள்ளார். இவையன்றிக் கதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

வெள்ளைத்தாமரை கலைமகளுக்குரியதாக நம் பண்டை நூல்கள் கூறும். வீணை ஒலி முதலிய மற்றவை கலைகளுக்குரியவை யாதலால் அவற்றிலும் கலைமகள் இருப்பதாகக் கவி பாவனை செய்கிருர். இவைபோல 'மனத்துக் கும் அறிவுக்கும் இன்பந்தரத்தக்க எல்லாப் பொருள்களிலும் கலாதேவி வீற்றிருக்கின்ருள்' என்பது கருத்து.

III. தாய்நாடு

பாட்டின் இலகுத் தன்மையையும் பொருள் அமைப்பையும் கவனிக்க.

'வந்தே மாதரம்' என்னும் வடமொழித் தொடருக்கு 'தாயை வணங்கு கிறேன்' என்பது பொருள். அதை இவர் 'மாநிலத் தாயை வணங்குதும்' என்று அமைத்திருக்கிருர்.

II. நீதி

I. திருக்குறள்

குறள் வெண்பாவினால் ஆகிய நூலுக்கு, 'குறள்' என்பது ஆகுபெயர். திரு என்பது அதனுடைய சிறப்பைக் குறிக்கும் அடைமொழி. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களைக் கூறும் மூன்று பெரிய பகுதிகளை உடையது. இந்நூலில் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரம் ஒன்றுக்குப் பத்துக் குறள். இதனை இயற்றியவர் திருவள்ளுவர்.

இதற்குப் பரிமேலழகர் என்பவர் இயற்றிய சிறந்த உரை ஒன்று உளது; வேறு சிலரும் உரை இயற்றியுள்ளனர்.

அறத்துப்பாலிலும் பொருட்பாலிலுமுள்ள சில அதிகாரங்களிலிருந்து எடுக்கப்பட்ட குறள்கள் இங்கே தரப்படுகின்றன.

1. என்பு = எலும்பு; இங்கே உடம்பைக் குறிக்கிறது; ஆகுபெயர்.

2. இனிய = இன்சொற்கள்; இன்னாத = கடுஞ்சொற்கள்; குறிப்பு வினையாலணையும் பெயர்கள்; கனி, காய் என்பவற்றோடும் இனிய இன்னாத என்பவற்றை முறையே சேர்த்துக்கொள்ளவேண்டும்.

3. நன்றி = பிறர் நமக்குச் செய்த நன்மை.

4. உள் = மனத்தினுள்; நாவினால் சுடுதல் = நா அடக்கமின்றிப் (பிறர் மனம் புண்படப்) பேசுதல்; வடு = (மறையாத) தழும்பு; 'வடு உள் ஆறாது' எனக் கூட்டவும்.

5. நன்றிக்கு வித்து = தருமத்திற்குக் காரணம்; ஆதலால் அது இன்பம் தரும்.

6. வாய்மை மனத்திலுள்ள பல குற்றங்களாகிய இருட்டைப் போக்க வல்லது; ஆதலால் சிறந்த விளக்காகும்.

7. 'முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்' என்பது இக்குறளிலிருந்து வந்ததே.

8. என்ப: முதல் இரண்டும் 'என்று சொல்லப்படுவன' எனப் பொருள்படும்; வினையாலணையும் பெயர். இறுதியிலுள்ள என்ப—'என்று சொல்லுவார்கள்' எனப் பொருள்படும்; பலர்பால் வினைமுற்று.

9. என் உடையரேனும் = எது எல்லாம் உடையவரானாலும்.

10. எண்ணி = தீர ஆலோசித்து; கருமம் = (செய்யத்தக்க) காரியம்.

11. நாடி = ஆராய்ந்து, உற்று நோக்கி; மிக்க = மிகுதியானவற்றால்; கொளல் = (இயல்பை) அறிந்துகொள்க. வியங்கோள் வினைமுற்று.

12. திருவினை = செல்வத்தை; (திரு + இன் + ஐ. இன் : சாரியை); முயற்று இன்மை = முயற்சி இல்லாமை. முயல் + து = முயற்று: தொழிற் பெயர்; வரத்து என்பது போல.

14. நீரவர் = (நற்குணங்களையுடைய) அறிவாளிகள்; பிறை = குறைச் சந்திரன்; மதி = பூர்ணசந்திரன்; நீரவர் கேண்மை பிறை நிறை நீர; பேதையார் நட்பு மதிப் பின் நீர.

15 நெஞ்சத்து அகம் நக = மனத்தினுள்ளூற (இருவரும்) மகிழும்படி.

II. இனியவை நாற்பது

இனிய பொருள்களைக் கூறும் நாற்பது பாட்டுக்கள் கொண்ட ஒரு நூல். இதனை இயற்றியவர் பூதஞ்சேந்தனார்.

1. அமர்வு = சேர்க்கை; அம்கண் = அழகிய இடம் (அகன்ற); விசும்பு = ஆகாயம்; அகல் நிலா = (ஒளி) பரந்த நிலவு; பங்கம் = குற்றம்.

2. த்தானம் = ஸ்தானம் (தன்னுடைய) நிலைமை; (தான்) இருக்கும் இடம் என்றும் கூறலாம்; ஊனம் = குறைவு; உயர்ந்த பொருள் = மிக்க பொருள்; உயர்ந்ததாகிய கல்விப்பொருள் என்றும் கூறலாம்.

3. கை இகந்து = விட்டு நீங்கி; உயர்ந்த செய்கைகளை நினைந்து ஊக்கம் கொள்ளவேண்டும்; ஒளிபட = புகழ் உண்டாகும்படி.

4. கருமப்பொருள் = கருமமாகிய பொருள், செய்கைகள்; பற்று = பற்றுக்கோடு, ஆதாரம்; பற்று அமையா = ஆதாரமாயில்லாத; தெற்றெனவு இன்றி = (தன்னைத்) தெளிதல் இன்றி, தன்னம்பிக்கை இல்லாமல்; தெளிந்தாரை = நம்பினவர்களுக்கு; தீங்கு ஊக்கா = தீமை செய்யாத; பத்திமை = அன்பு.

III. நான்மணிக்கடிகை

நான்கு + மணி + கடிகை = நான்கு இரத்தினத் துண்டங்கள். ஒவ்வொரு பாட்டிலும் இரத்தினம்போன்ற நான்கு அரிய விஷயங்களைப்பற்றிக் கூறும் நூல். இது 101 பாட்டுக்கள் கொண்டது. 'விளம்பிநாகனார்' என்பவரால் இயற்றப்பெற்றது.

1. மொய் = வலிமை; சிதைக்கும் = கெடுக்கும்; பொய் பேசுகிறவனுக்குத் தன் 'பொய் வெளிப்பட்டுவிடுமே' என்கிற கவலையால் உடம்பு கெட்டுப் போகும்.

2. துன்னிய = நெருங்கிய; மக்களின் = குழந்தைகளைப்போல; 'தம் பொருள் என்ப தம் மக்கள்' — திருக்குறள்; ஈன்றாளின் என்ன கடவுளும் இல் = பெற்ற தாயைக் காட்டிலும் சிறப்பாக உள்ள தெய்வம் எதுவும் இல்லை; 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.'

3. நல்நெறி = நல்ல (துறவு) வழி. கீழ்மக்கள் ஊரூராய்ச் சுற்றித் திரிவர்; ஆதலால் அவர்களுக்கு ஒரூர் இல்லை. கைத்து = கைப்பொருள்.

4. கிளைஞர் = சுற்றத்தார்; சுற்றக் கட்டு இல்லாதவனுக்குக் கோபம் வந்தால் அது அவனுக்கே தீமை தரும்.

IV. நாலடியார்

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. முன் வந்துள்ள நான்மணிக்கடிகை, இனியவைநாற்பது, திருக்குறள் ஆகிய மூன்றும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்தவையே. நான்கு அடிகளால் வருவதில் சிறப்புடையனவான வெண்பாக்களால் ஆகியதனால் 'நாலடி' என்றும், அதனோடு ஆர் விகுதி சேர்த்து 'நாலடியார்' என்றும், 400 பாட்டுக்கள் கொண்டதாதலால் 'நாலடி நானூறு' என்றும் இதன் பெயர்கள் வழங்குகின்றன. இந்நூல் 40 அதிகாரங்களை உடையது. அதிகாரம் ஒவ்வொன்றுக்கும் 10 பாட்டு.

இந்நூலிலுள்ள பாட்டுக்கள் சமண முனிவர் பலரால் இயற்றப்பட்டவை; அவற்றைத் தொகுத்து, அதிகாரப் பாகுபாடு முதலியன செய்து அமைத்தவர் 'பதுமனார்' என்னும் புலவர் என்பர். 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்று வழங்கும் பழமொழி இதன் சிறப்பையும் திருக்குறளின் சிறப்பையும் விளக்கும்.

1. கிளைபொருள் = கிளைக்கின்ற (வளர்கின்ற) செல்வம்; மதுகை = பலம்; உரன் = அறிவு; 'கிளை'—வினைத்தொகை.

2. மம்மர் = மயக்கம்; இங்கே அஞ்ஞானத்தைக் குறிக்கிறது.

3. நிறுப்பான் = நிறுத்துகிறவன். 'பெருமையும் சிறுமையும் தான்தர வருமே' என்பதை இப்பாட்டு நினைப்பூட்டுகிறது. இத்தொடர் எதில் உள்ளதென்பதை நீங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

V. சிலப்பதிகாரம்

கோவலன், கண்ணகி இவர்களுடைய வரலாற்றைக் கூறும் சிறந்த நூல். தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. சேர இளவரசரும் துறவியுமான இளங்கோவடிகள் என்பவரால் இயற்றப்பெற்றது. அகவற்பாக்களால் ஆகியது. ஒவ்வொரு பகுதிக்கும் 'காதை' என்பது பெயர்.

'வரந்தரு காதை' என்பது இந்நூலின் இறுதியில் உள்ளது. கண்ணகி சேரநாட்டில் தெய்வமாகியபின், வரம் தந்த வரலாற்றைக் கூறுவது. இவ் அறவுரை நூலின் இறுதியில் ஆசிரியர் வாக்காக அமைந்துள்ளது.

அடி 3. புறஞ்சொல் போற்றுமின் = ஒருவரைப்பற்றிக் காணாதவிடத்தில் குறை கூறுதலாகிய சொல் சொல்லாதபடி (உங்களைப்) பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

7. பொருள்மொழி = (உண்மைப்) பொருளடங்கிய (உபதேச) மொழிகள்.

9. பிழைத்துப் பெயர்மின் = தப்பி அகன்று செல்லுங்கள்.

13. வெள்ளைக் கோட்டி = பயனற்ற உரைகள் கூறும் கூட்டம்.

15. ஒல்லுவது = இயலுவது.

16. செல்லும் தேஎத்துக்கு = போகுமிடத்துக்கு, மறுமைக்கு; தேம் = தேசம், இடம்; இனிய ஓசையின்பொருட்டு 'தேஎம்' என அளபெடுத்தது.

17. மல்லல் = வளப்பம்; மா = பெரிய. சிலப்பதிகாரத்தில் ஒவ்வொரு காதையும் 'என்' என முடியும். இதனோடு தொடர்புடைய மணிமேகலை என்னும் பெருங்காப்பியத்திலும் இவ்வாறே. இங்ஙனம் 'என்' என்று முடியும் செய்யுளுக்கு இயைபு என்று பெயர்.

VI. நன்னெறி

நன்னெறி = நல்ல வழி; நல்ல வழிகளைக் கூறும் நூலுக்குப் பெயராயிற்று. இதனை இயற்றிய சிவப்பிரகாச சுவாமிகள் 18-ம் நூற்றாண்டினர்; வீரசைவ மதத்தினர்; பல பிரபந்தங்களையும், பிரபுலிங்க லீலை என்னும் காவியத்தையும் இயற்றியுள்ளார்.

1. எழுந்து ஓங்கு = மேன்மேலும் வளர்கிற; காத்துக்கொள்ளுதல் = அடக்கிக்கொள்ளுதல்; தட + கரை = தடங்கரை = பெரியகரை (அணை); தட — உரிச்சொல்.

2. தீர்வு உள்ளார் = தீர்த்துக்கொள்ளுதலை நினையாதவராய், உறும் என்பது யாப்பிலக்கணத்தின்படி இனிய ஓசை தருவதற்காக உறூஉம் என அளபெடுத்தது. கறை = களங்கம்.

3. எந்தை இரப்பார்க்கு ஈந்து நல்கூர்ந்தான் என்று கூட்டுக. பைந்தொடி = பசுமையான (பொன்) வளையல்; இங்கே வளையல்களை அணிந்த ஒரு பெண்ணைக் குறிக்கும்; அன்மொழித்தொகை; பைந்தொடீஇ = மகடூஉ முன்னிலை; அரம்பை = வாழை; கீழ்க்கன்றும் கனி உதவும் என்க.

4. கூற்றம் = (உடம்பையும் உயிரையும் வேறாகப் பிரிக்கிற) யமன்; கொல்வான் = (நம்மைக்) கொல்லும்பொருட்டு; உய்க = (உலகத் துன்பங்

களிலிருந்து) தப்பிக்கொள்ளுங்கள். வெள்ளத்தை முன்பு ஒரு பாட்டிலும் கூறியிருப்பதை நோக்குக. ஒரு பொருளைப் பலவிதமாகத் திருஷ்டாந்தம் கூறும் தன்மையைக் கவனிக்கவும்.

III. காவியம்

I. பாரத வெண்பா

'பெருந்தேவனார்' என்னும் பெயருடைய புலவரால் இயற்றப்பெற்ற பாரதம். இது வெண்பாவினால் ஆகியது; அதனால் 'பாரத வெண்பா' என வழங்குகிறது. (நளவெண்பாவின் குறிப்பைப் பார்க்க.) இதைப் 'பெருந்தேவனார் பாரதம்' என்றும் சொல்வதுண்டு. இது இடையிடையே வசனமும் கொண்டது. இந்நூலாசிரியர் தெள்ளாறெறிந்த நந்திவர்மனைக் குறிப்பிடுதலாலே அவன் காலமாகிய 9-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

கடைச்சங்கக் காலத்திலேயே பெருந்தேவனார் என்ற ஒரு புலவர் வெண்பாவினால் இயற்றிய பாரதம் ஒன்று உண்டு; அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. இவ் விரண்டாவது பெருந்தேவனார் பாரதமும் முழுதும் கிடைக்கவில்லை. இதில் உத்தியோக, பீஷ்ம, துரோண பருவங்களே கிடைக்கின்றன. இதன்பின் வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதமே இப்பொழுது பிரசித்தமாக வழங்குகின்றது. இவையன்றித் தமிழில் வேறு சில பாரத நூல்களும் உள்ளன.

பாரதம் = பரத வமிசத்தவர்களான பாண்டவ, கௌரவர்களின் வரலாற்றைக் கூறும் நூல். இது முதலில் வியாசமுனிவராலே வடமொழியில் இயற்றப்பெற்றது. பாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடைபெற்றது. பதின்மூன்றாம் நாளில் அருச்சுனனுடைய புதல்வனான அபிமன்யு செய்த வீரப்போரின் விவரத்தைக் கூறுவது இப்பகுதி.

1. படை இரண்டும் = இரண்டு பக்கத்துப் படைவீரர்களும்; கை வகுத்து = அணிவகுத்துக்கொண்டு.

2. கட்டு = வியூகம், அணிவகுப்பு.

3. வேந்தனை = தருமபுத்திரனை; பட்டம் = நெற்றிப் பட்டம்.

4. உருமு = இடி. இது நெல்லு, எள்ளு முதலியவைபோல 'உ' சாரியை பெற்று 'உருமு' என வரும்.

5. தெவ் = பகை. இச்சொல்லும் முன்னதுபோல 'தெவ்வு' என வரும்.

7. ஓதம் மால் வண்ணன் = கடல் நீர் போலும் மனம் கவரும் (அழகிய) நிறமுடையவன்.

9. கொற்றவன் = வீமன். ஈசன்பால் பெற்ற வரத்தால் தடுத்தவன் = செயத்திரதன். அவன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து, அவருடைய கொன்றைமாலை ஒன்றைப் பெற்ருன். அது அவனுக்கு ஆபத்துக் காலத்தில் உதவும் என்பது வரம். அதனை இப்பொழுது பயன்படுத்திக் கொள்பவனுய் அம்மாலையை எடுத்து வீச, அது அபிமன்யு நின்ற இடத்தைச் சுற்றி மதில்போல் வளைத்துக் கிடந்தது. வீமன் அந்தரங்கமான சிவபக்தியுடையவனுதலால் அம்மாலையைத் தாண்டிக் கடந்து உட்புகாமல் நின்றுவிட்டான். இவ்வாருகச் செயத்திரதன் வீமனைத் தடுத்தனன்.

10. மார் = மார்பு.

11. மாலொடு = திருமாலிடத்தில்; உருபு மயக்கம்; அபிமன்யு திருமாலிடத்தில் படைப் பயிற்சி பெற்ற வரலாறு:—அபிமன்யு சுபத்திரையின் கருப்பத்தில் இருக்கும்பொழுதே கண்ணன் அவனுக்கு நுட்பமாகப் பிரமாஸ்திரம் முதலிய சில அஸ்திரப்பிரயோக முறைகளையும், சக்கரவியூகத்தைப் பிளந்துகொண்டு உட்புகும் முறையையும் உபதேசித்தார் என்பது. சக்கரவியூகம் 'சகடவியூகம்' எனவும் கூறப்படும்.

12. தான் தன் படையே ஆயினுன் = வேறு சேனையும் ஆயுதமும் இன்றித்தானே எல்லாமாய்த் தனிப்பட்டவனுனன்; முன்படையும் பின்படையாக = (பகைவருடைய) முன்னணிப்படையும் தனக்குப் பின்னுள்ளவையாக; மொய்த்து = மொய்க்க, சூழ; எச்சத் திரிபு.

அபிமன்யு, துரோணர் அணிவகுத்திருந்த சக்கரவியூகத்தைப் பிளந்துகொண்டு உள்ளே புகுந்து, போர் செய்ததனுல், படைகள் அவனுக்குப் பின்புறமும் சூழலாயின.

II. சீவக சிந்தாமணி

இதுவும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இதனுடன் நீங்கள் மூன்று பெருங்காப்பியங்களின் பெயர்களை அறிந்திருக்கிறீர்கள். மற்றிரண்டு, வளையாபதி, குண்டலகேசி என்பன.

சீவக சிந்தாமணியைப்பற்றிய விவரங்களை ஒரு வசன பாடத்தால் நீங்கள் அறிவீர்கள். இங்குப் பாடமாக வந்துள்ள பாட்டுக்கள் முதலாவதாகிய நாமகள் இலம்பகத்தில் உள்ளவை. இக்காவியத்தின் உட்பிரிவுகள் இலம்பகம் என்று குறிக்கப்படுகின்றன. தருமதத்தன் என்னும் அமைச்சன் கட்டியங்காரன் என்னும் அமைச்சனுக்குக் கூறும் பகுதி இது.

1. தார் பொலி = மாலையால் (அழகுற) விளங்குகின்ற; வெளவின் = (உயிரைக்) கவர்ந்தால் = கொன்ருல்.

2. உலகமாந்தர்கள் தேவரும் வேந்தரும் ஒப்ப என்று ஓதுப. மன்னர்க்கு = மன்னரைக் குறித்து.

3. மன் = மிகுதியாக, உரிச்சொல்; மருளி மற்றவை = மயக்கத்தை யுடைய மற்றத் தெய்வங்கள்; மற்று = அவ்வாறின்றி; மருளி அவை = மயக்கத்தை உடைய அத்தெய்வங்கள் என்றும் மாற்றிப் பொருள் கூறலாம்.

4. 'மன்னவன் உறங்குமாயினும், தன் ஒளி வையகம் காக்கும்' என்று கூட்டிக்கொள்க. ஒளி = புகழோடுகூடிய ஆணை; திரை = அலை; அலைகளை உடைய கடலுக்கு ஆகுபெயர். இறங்கு = (தமது தெய்வத்தன்மை) கெட்டுப்போகிற; கண் இமையார் = கண் இமைகொட்டாதவர்கள் — தேவர்கள். அறங்கள் வெளவ = (தம்மைக் குறித்து உலகத்தவர் செய்யும்) புண்ணியங்களை (அசுரர்கள்) அபகரிக்க.

5. நவை = தீங்கு.

III. இராமாயணம்

இந்த மகாகாவியம் கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் = இராமனுடைய சரிதம்.

கம்பராமாயணத்தில் பெரும் பிரிவுகளுக்குக் 'காண்டம்' என்பதும், அவற்றினுட் சிறு பிரிவுகளுக்குப் படலம் என்பதும் பெயர். இராமாயணம் ஏழு காண்டங்களை உடையது. அவற்றுள் இரண்டாவதான அயோத்தியா காண்டத்தில் உள்ளது இப் பகுதி.

கைகேயி சூழ்வினைப்படலம் = கைகேயியின் சூழ்ச்சிகளைத் தெரிவிக்கும் பிரிவு. மந்தரை என்னும் கூனியால் மனம் மாறுபட்ட கைகேயி, இராமனுடைய பட்டாபிஷேகத்தைத் தடுத்து, அவன் வனம் போகும்படி பண்ணுதற்குச் செய்த சூழ்ச்சிகள் இப்படலத்தில் கூறப்படுகின்றன.

இராமனது முடிசூட்டு விழாவின்பொருட்டு அனைவரும் சபாமண்டபத்திலே கூடியிருந்தனர்; கைகேயிக்கு வரமளித்த தசரதர் அவளது அந்தப்புரத்திலே வருத்த மிகுதியால் மூர்ச்சித்துக் கிடந்தார்.

1. ஆயது ஓர் அமைதியின் கண் = அவ்வாறாகிய அந்தச் சமயத்தில்; ஐயனை = இராமனுக்கு; எயும் = பொருத்தமான, வேண்டிய; வேதபாரகர் = வேதத்தைக் கரைகண்டவர்கள்; மாதவக்கிழவன் = பெருந்தவசியான வசிட்டர்.

2. கன்னி = கன்னியாகுமரி; வாரி = கடல்; பூரித்து = நிறைத்து; அங்கியின் வினை = அக்கினி காரியம், ஹோமம்.

3. காலம் வந்து அடுத்தது = முகூர்த்தவேளை சமீபித்துவிட்டது; பிணி அற = (பிறவி) நோய் நீங்க; பெரியவன் = வசிட்டன்; வல்லையில் = சீக்கிரமாக; பரிவின் = அன்போடு.

4. நிவந்த = உயர்ந்த; கண்டிலன், கேட்டான் — முற்றெச்சங்கள்; காணுதவனுய் அங்குள்ளாரைக் கேட்க, (அவர்கள் மூலம் தசரதர் கைகேயியின் அந்தப்புரத்திலிருப்பதை) அறிந்து; மடந்தைமாரின் சொல்ல = (காவலான) பெண்கள் மூலமாகத் தெரிவிக்க; கொணர்க = அழைத்துவருக.

5. பெரும் பரிவு இயற்றி = பேரன்பு செய்து; சிற்றவை = சிறிய தாயார்; போதுதி = வருவாயாக; வியங்கோள் வினைமுற்று: போது பகுதி.

6. ஐயன் = இராமன்; ஆயிரம் மௌலியான் = ஆயிரந் திருமுடிகளை யுடைய விசுவ ரூபியான திருமால்.

7. கோடி = பெற்றுக்கொள்வாயாக; ஐந்து அவித்து = ஐம்புலன்களை அடக்கி; அரிதின் செய்த தவம் உனக்கு ஆக = (நாங்கள்) சிரமப்பட்டுச் செய்த தவத்தின் பயன் உனக்கு உதவுவதாக; துழாய்த் தெரியலாய்க்கு = துளசி மாலையை அணிந்த உனக்கு.

8. உனது அருள்மிகுந்த கண்ணுக்கொப்பாகிய தாமரையும் உனது (திருமேனி) நிறத்துக்கு ஒப்பான மேகமும் (அத்தன்மைகளை அடைய) என்ன புண்ணியம் செய்தன! செம்மல் = ஆண்பாற் சிறப்புப் பெயர்; புருஷோத்தமன்.

9. கைகேயிக்கு இராமனிடத்திலிருந்த அன்பைப்பற்றிக் கூறுவது.

10. ஆயன = அத்தகைய செய்திகள்; அண்ணல் = இராமன்; 'செம்மல்' என்பதுபோன்ற சிறப்புப்பெயர்; அயர்ந்து தேரூத் தூயவன் = மூர்ச்சை யுற்று (இன்னும்) தெளிவடையாத பரிசுத்தனாகிய தசரதன்.

11. சிந்துரம் = செந்நிறம். இராமனுக்குக் கைகேயியிடம்உள்ள அன்பை யும் மரியாதையையும் இப்பாட்டு நன்கு தெரிவித்தல் காண்க.

12. பின் இரண்டடிகளை, 'மைந்த, இன்று எனக்கு எயதே என்னின் உணர்த்தலாவது ஒன்று ஆகும்; உந்தை உனக்கு உரைப்பது ஓர் உரை உண்டு என்றுள்' என்று கூட்டுக.

13. இயைவதுண்டேல் = நேருமானால்; வருபயன் = விளைகின்ற பலன், மிக்க பயன்; தலைநின்றேன் = (உமது கட்டளையின்) வழியே நிற்பேன். துணிவுபற்றி எதிர்காலம் இறந்த காலமாகக் கூறப்பட்டது; கால மயக்கம்.

14. தாழ் இரு சடைகள் = நீண்ட பெரிய சடைகள்; இரு உரிச்சொல்; பூழி = புழுதி; துறைகள் = நீர்த்துறைகள், தீர்த்தங்கள்.

15. எளிதே = எளிதோ? செவ்வி = அழகு; திருமுகச்செவ்வி இயம்பு தற்கு எளிதே! என்க. முன்பு அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை ஒப்பது; அவ்வாசகம் உணரக்கேட்ட பின்பு அப்பொழுது அலர்ந்த செந்தா மரையினை வென்றது; அம்மா = வியப்பு இடைச்சொல்.

16. மன்னன் ஏவலில் = தசரதருடைய கட்டளையினின்றும்; உலகம் தாங்கும் இன்னல்: பொறுப்பான அரசாட்சி புரிவது எளிதன்று; சிரமமும் கவலையும் தருவது என்பதையும் இராமன் அரசனுடைய ஆணையை மறுக்க மாட்டாமல் மட்டுமே அதை ஏற்றுக்கொண்டான் என்பதையும் உணர்த்து கிறது. காரேறு = மயிலைக் காளை.

IV. நள வெண்பா

நள சரித்திரத்தைக் கூறும் வெண்பாவினால் ஆகிய நூல் = நளவெண்பா. இதுபோல இராமாயண வெண்பா, பாரத வெண்பா முதலிய பல நூல்கள் உள. நளவெண்பாவே யன்றி, 'நைடதம்' என்பதும் நள சரித்திரத்தைக் கூறுவதாகும்; இது விரிவானது; விருத்தப் பாட்டுக்களால் ஆகியது. நள வெண்பா சுருக்கமானது. சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று பகுதிகளையுடையது. 420 பாட்டுக்கள் கொண்டது. இதனை இயற்றியவர் புகழேந்திப்புலவர். இவர் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பர். இவரை ஆதரித்த வள்ளல் முரணை நகர்ச் சந்திரன் சுவர்க்கி. இப்பகுதி தமயந்தியின் சுயம்வரத்தைப்பற்றிக் கூறும் சுயம்வர காண்டத்தில் உள்ளது.

விதர்ப்ப நாட்டு அரசன் மகளான தமயந்தி நிடத நாட்டு மன்னனாகிய நள சக்கரவர்த்தியின் சிறப்புக்களைக் கேட்டறிந்து அவனைத் தனக்குக் கணவனாக மனத்தால் வரித்துக்கொண்டனள். பின்பு தேவர்களில் நால்வர் அவளை மணக்க எவ்வளவோ முயன்றும் பயன்பெறவில்லை. அவள் நளனையே சுயம்வரத்தில் மாலையிட்டாள் என்பது சுயம்வர காண்டக் கதைச் சுருக்கம்.

1. அறம் கிடப்ப = தருமம் தங்கியிருக்க; ஆடல் = வானத்தில் வட்டமிடுதல். தாரான், கிளியும் பருந்தும் ஒரு கூட்டில் வாழ, குடைக்கீழ் அறம் கிடப்ப, உலகு தனி காத்தான் என்று அன்வயம்.

2. நீள் நிறம் = சிறந்த (வெள்ளை) நிறம்; மாண் நிறத்தான் = பெருமை பொருந்திய மார்புடையவன்; அப்பு உள் தோன்றும் முளரி = நீரினுள் உண்டாகும் தாமரை.

4. திசை முகந்த = (எல்லா) திக்குக்களையும் (தனக்குள்) அடக்கிக் கொண்ட, (அதாவது) பல நாடுகளைத் தன் ஆட்சியில் உடைய; மென் தோள் அமை அந்தி என்ற = மெல்லிய தோள்கள் (புசமையான) மூங்கிலை ஒத்திருக்கும் அழகையுடையவள் என்று சொல்லப்படுகிற; அந்தம் = அழகு; அணங்கு = தெய்வப் பெண் (போன்றவள்).

5. எழு அடு = இரும்புத் தூணை (தன் வலிமையால்) பெருமை கெடச் செய்கிற; அடு தோள் — வினைத்தொகை; இலங்கு இழை = (ஒளி) விளங்கும் ஆபரணங்களை அணிந்த அத்தமயந்தி; இலங்கிழை அன்மொழித் தொகை; மிதிப்ப = மிதிக்கும்படி; மாடு = பக்கம்; கொம்பு = பூங்கொம்பு போன்றவள்; உவமை ஆகுபெயர். இலங்கிழை, விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு எனக் கூட்டி முடிக்க.

8. அறைக + என்று = அறைகவென்று; இது 'அறைகென்று' என்று வந்துளது; தொகுத்தல் விகாரம். இதுபோல வரும் இடங்களிலெல்லாம்

இவ்விதமே இலக்கணங் கூறுக. கமுகின் கூந்தல் = பாக்குமரத்தின் தோகை; கங்கைக் கொழுந்து = ஆகாச கங்கையினின்று குதித்தெழும் நீர்.

9. கோதை = கூந்தல் அழகுடைய தமயந்தியின்; கொற்றவனுக்கு = வெற்றியுடைய நளனுக்கு; காட்சியர் = அறிவை உடையவர்கள்; அடையாத வாயில் = (பகைவர் பயம் இல்லாமையால்) எப்பொழுதும் மூடப்படாத (அரண்மனை) வாசல்; இரப்போர் முதலியோருக்கு அடைபடாத என்றும் கொள்ளலாம்.

10. விண்ணரசர் = தேவலோகத்துத் தலைவர்களான இந்திரன், அக்கினி, யமன், வருணன் என்பவர்கள்; கூர = மிக; 'கூர்' என்னும் உரிச்சொல்லால் வந்த வினையெச்சம்; வன்மாலை = கொடிய மயக்கம்; வயம் வேந்தை = வெற்றியுடைய நள மகாராஜனுக்கு, உருபு மயக்கம்; பொன் = லக்ஷ்மியைப்போன்ற தமயந்தி.

V. திருவிளையாடற் புராணம்

திரு + விளையாடல் + புராணம் = (சிவபெருமானுடைய) சிறப்புமிக்க அருள்விளையாட்டுக்களைத் தெரிவிக்கும் பழைய நூல் என்பது பொருள். மதுரையில் கோயில்கொண்டு எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் செய்த 64 லீலைகளைப்பற்றிக் கூறுவது இந்நூல். இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவர் தம் நூலை அரங்கேற்றியது பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கம். இதற்குமுன், 'பழைய திருவிளையாடல்' அல்லது 'வேம்பத்தூரார் திருவிளையாடல்' எனப் பெயர்பெற்ற வேறொரு நூலும் உளது. 'சுந்தரபாண்டியம்' என்ற மற்றொரு நூலும் திருவிளையாடற் சரிதத்தையே கூறுவது. இச்சரிதத்தைச் சுருக்கமாகக் கூறுவன 'திருவிளையாடற் பயகரமாலை', 'திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா' என்பன.

பரஞ்சோதி முனிவரியற்றிய திருவிளையாடற் புராணம் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என மூன்று பெரும் பகுதிகளை உடையது. அவற்றுள், ஒவ்வொரு திருவிளையாடலையும் தனித் தனியே கூறும் உட்பிரிவு 'படலம்' எனப்படும்.

பார்வதி தேவியார் 'தடாதகை' என்னும் பெயருடன் பாண்டிய அரசன் மகளாக அவதரித்தார். சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரை மணந்து, பாண்டிய அரசராகி, மதுரையை ஆண்டார். தடாதகைப் பிராட்டியாரின் திருமணக் காலத்தில் நிகழ்ந்ததொரு விநோத நிகழ்ச்சியைக் கூறுவது இப்பகுதி. இது மதுரைக் காண்டத்தில் உள்ளது.

குண்டோதரன் = குண்ட + உதரன் = சட்டிபோன்ற பெருவயிறன்; இவன் சிவபெருமானுடைய பூதகணங்களில் ஒருவன்.

1. போனகம் அருத்தா = உணவு அருந்தச் செய்து; அருந்து — தன் வினை; அருத்து — பிறவினை; அருத்தா — 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

2. பழுக்காய் = பாக்கு; வழங்கா = வழங்கி, வினையெச்சம்; செல்லுநர் = போகிறவர்களை; வினையாலணையும் பெயர். வேலை = வேளை = சமயம்.

4. அடிகள் = சுவாமிகள்; உணங்குகின்றது = உலர்கின்றது.

5. அடைகல் = தாங்குதலாகமுட்டுக்கொடுக்கப்பட்ட கல்; சிமையம் = சிகரம்; வால்அரி புழுக்கல் = வெண்மையான அரிசிச் சோறு; சாதக்கு = சாதத்துக்கு; 'அத்து' என்னும் சாரியை இன்றிக் 'கு' உருபு சேர்ந்துள்ளது.

6. பாரிடத் தலைவன் = பூதகணத் தலைவன்; பாரிடம் = பூதம்.

7. வான் தருவும் = சுவர்க்கலோகத்துக் கற்பக விருட்சமும்.

8. குறிய தாள் = குறுகிய கால்; குறட்கு = குறுகிய வடிவமுடையவனுக்கு. [குறள் = சிறு வடிவம்; பாக்களுக்குள்ளே மிகக் குறுகிய அளவுடையது 'குறள்வெண்பா'. அதனால் அது 'குறள்' எனப் பெயர்பெற்றது.] சோறும் = (ஆல் = அசை) சொல்லுவோம்; சொல் + தும் என்பது 'சொல்லுதும்' எனவும், 'சோறும்' எனவும் ஆகும். 'சோறும்' என்பதில் 'சொல்' என்னும் பகுதி முதல் நீண்டது. இதுவேபோல 'கொல்', 'செல்', 'வெல்' என்ற பகுதிகளும் நீளும்.

9. இறைமகள் = அரசி; சொன்றி = சோறு; பின் இரண்டடிகளுடன் 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்' என்ற கம்பர் வாக்கை ஒப்பிடுக.

10. பண்ணியம் = பக்ஷணம்; வல்சி = சோறு; நவபண்டம் = நவதானியங்கள்.

11. அலங்கல் ஓதி = பூமாலை சூடிய கூந்தலை உடையவள்; தடாதகைப் பிராட்டி. சுவல் = பிடரி; ஒல்கி = துவண்டு; நிலம் கிளைத்து = (கால் பெருவிரலால்) தரையைக் கிளறிக்கொண்டு; இது நாண மிகுதியைக் காட்டும் இயற்கை நிலை.

12. அம் சில் ஓதி = அழகிய சிறு சுருள்களையுடைய கூந்தலை உடையவள்; குஞ்சி = தலைமயிர்; குடவயிற்றவன் = குண்டோதரன்; நிமலை = மலமற்றவள், குற்றமற்றவள்; நிமலன்—ஆண்பால்.

13. இப்பாட்டோடு கம்பராமாயணத்தில் கும்பகர்ணன் வதைப்படலத்தில் உள்ள 'எறுகின்ற பசியை எழுப்பினன்' என்பதை ஒப்பிடுக.

14. குமுதம் = செவ்வல்லிப்பூ.

15. பெருமான் குண்டோதரனது வயிற்றில் வடவைத் தீயை ஏவிவிட்டதனால், அவன் எவ்வளவு தின்றும் பசி தணியவில்லை. ஈற்றடியில் உள்ள உவமையின் அழகைக் கவனிக்க.

VI. குசேலோபாக்கியானம்

'குசேலோபாக்கியானம்' என்பதற்கு, 'குசேலரைப்பற்றியதான கிளைக் கதை' என்பது பொருள். (குசேல + உபாக்கியானம்). இது பாகவத புராணத்தில் உள்ளது. வல்லூர்த் தேவராச பிள்ளை என்பவராலே தமிழில் எளிய இனிய செய்யுள் நடையில் இயற்றப்பெற்றது என்று நூல்களிற் காணப்படினும் இதை இயற்றி முடித்தவர் மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை என்று மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆசிரியராகக் கூறப்படும் இருவரும் பத்தொன்பதாம் நூற்றாண்டினர்.

குசேலர் என்பது சிதைந்த (கிழிந்த) ஆடையை உடையவர் என்று பொருள்படும் காரணப் பெயர். இவரது இயற்பெயர் 'சுதாமா' என்பது.

சுதாமா இளமைப்பருவத்தில் கண்ணனுடன் குருகுலத்தில் ஓராசிரியரிடம் கல்வி பயின்றவர். பின்பு கண்ணன் துவாரகை மன்னனாகிய பொழுது இவர் மிக்க வறுமையுடையவராயிருக்க, ஒரு சமயம் கண்ணனைப் போய்க் கண்டு அவனருளாலே பெருஞ்செல்வம் உடையவரானார் என்பது வரலாறு.

குசேலர் கண்ணனைக் காணும் பகுதி இது. கண்ணனது அரண்மனை வாயிற்காவலர் முதலிற் குசேலரது எளிய நிலையைக் கண்டு அவரை உள்ளே விட மறுத்தனர். பின்பு அவர் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே கண்ணன் அவரிடங் காட்டிய அன்பைக் கண்டு அதிசயமுற்று, அவரை மிக்க மரியாதையுடன் உள்ளே அழைத்துச் சென்றனர்.

1. ஈற்றடியில் உள்ள நீதி உற்று நோக்கத்தக்கது.

3. எண் அ(ன்)னைக்கு = அஷ்டலக்ஷ்மிகளுக்கும், (அல்லது) யாவரும் மதிக்கும் உலக மாதாவாகிய லக்ஷ்மிதேவிக்கு.

5. திலகம் = நெற்றிப்பொட்டு.

6. பளிதம் = கருப்பூரம்; பவஞ்ச வாழ்க்கை = பிரபஞ்ச வாழ்க்கை.

7. பூன்ற = பூர்ணமான, நிறைந்த.

8. மனைவியின் கடமை அழகாகக் கூறப்படுதல் காண்க.

9. 3-ம் அடி: 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்' என்னும் குறளை ஒப்பிடுக. சிங்கல் = குறைதல்.

10. நெருஞ்சியின் தன்மை நுட்பமாகக் கூறப்பட்டிருத்தலை நோக்குக.

11. பக்கணம் = பக்ஷணம்.

12. அவல் கொடை = அவலைக் கொடுத்தல். இப்பாட்டு பொருள் முடிவுபெறவில்லை; அடுத்த பாட்டோடு தொடர்ந்து முடிகின்றது. இவ்வாறு முடிவது 'குளகம்' எனப்படும்.

13. பொதி = முடிச்சு.

VII. இரக்ஷணிய யாத்திரிகம்

ஆங்கிலத்தில் ஜான் பன்யன் என்பவர் வசனமாக இயற்றிய 'பில்க்ரிம்ஸ் ப்ராக்ரெஸ்' என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது இது. இதன் ஆசிரியர் திருநெல்வேலி ஜில்லாவில் பாளையங்கோட்டையில் வாழ்ந்த எச். ஏ. கிருஷ்ணபிள்ளை என்பவர். இது 1894-ம் வருஷத்தில் வெளியிடப்பட்டது. 'இந்நூலின் செய்யுள் நடை பெரும்பாலும் ஸ்ரீமத் கம்பராமாயணச் செய்யுள் நடையையும் அதன் போக்கையும் அனுசரித்தே இயன்ற மாத்திரம் அமைக்கப்பட்டது' என்று இந்நூலாசிரியர் கூறுகிறார். இந்நூலில் சுமார் 3800 கவிகள் உள்ளன. இது ஐந்து பருவங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பருவத்தின் உட்பிரிவையும் இவ்வாசிரியர் படலம் எனக் கூறுகிறார். இப்பகுதி ஆதிபருவத்தில் சுவிசேஷ மார்க்கப் படலம் என்னும் உட்பிரிவில் உள்ளது.

இப்பகுதியிற் சொல்லப்படும் கதை பைபிள் நூலில் லூக்கா எழுதின சுவிசேஷத்தில் 15-ம் அத்தியாயத்தில் காணப்படுகிறது. உலகத்திலுள்ள சிறு கதைகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததாக ஆங்கில ஆசிரியர்கள் இதனைக் கூறுகிறார்கள்.

1. நிருவிகற்பாக = விகற்பமின்றி; களங்கமில்லாமல்; வேறுபாடில்லாமல்.

2. 'கைப்பொருள் கண்டான்; சொற்பொருள் காணான்'—இதன் பொருள் நயத்தை ஓர்க. கண்டான், காணான் என்றிவ்வாறு மாறுபட ஓரடியுள் வருவது 'முரண்தொடை' எனப்படும்.

4. துற்று = கவளம்; (ஒரு பிடி).

5. என்ன = என்று; புந்தி இல் = புத்தியற்ற.

6. முத்தி = முத்தமிட்டு; ஓர் எல்லையும் உளவோ—ஒருமைப் பன்மை மயக்கம்.

7. அபாத்திரன் = பாத்திரனல்லாதவன்; தகுதியற்றவன்.

8. அளியனேன் = (உம்மால்) ஆதரிக்கப்பட வேண்டியவனை.

9. உகவையின் = விருப்பத்தோடு.

10. சேட்டன் = ஜ்யேஷ்டன் = மூத்தவன்.

11. சோதரன் = சகோதரன்; திருகல் = கோபித்தல்.

VIII. புத்தரும் மகனை இழந்த தாயும்

தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் நாஞ்சி நாட்டிலுள்ள புத்தேரி என்னும் ஊரில் இப்போது வசித்து வருகிறார்கள். மிகவும் எளிமையும், அழகும், புதிய கருத்துக்களும் கொண்ட பாட்டுக்களை இயற்றியிருக்கிறார்கள். அவற்றுள் பல 'மலரும் மாலையும்' என்ற புத்தகத்தில் வெளிவந்துள்ளன. இவர்கள் தமிழாராய்ச்சியிலும், சாசன ஆராய்ச்சியிலும் அதிகம் ஈடுபட்டவர்கள்.

இந்தப் பாட்டு ஆங்கிலத்தில் எட்வின் ஆர்னல்டு என்பவர் இயற்றிய 'ஆசிய சோதி' என்னும் செய்யுள் நூலிலுள்ள பகுதியைத் தழுவி எழுதப் பெற்றது. பௌத்த மதத்தை ஸ்தாபித்த புத்தர் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். எல்லா அறங்களிலும் கொல்லாமையே மேலான அறம் என்று போதித்தவர்.

1. தெளிவு உரை அண்ணல் = தெளிவாகச் சொல்லுகிற புத்தர் பெருமான்; அணங்கினுக்கு = பெண்ணுக்கு.

2. புத்தர் முடமான ஆட்டுக்குட்டியை முதுகிலே தூக்கிவந்த வரலாறு தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய 'மலரும் மாலையும்' என்னும் புத்தகத்தில் காணும் 'கருணைக்கடல்' என்னும் பாட்டில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. 'அரச வாழ்வைத் துறந்து நள்ளிருளில் வெளிப்பட்டுச் சென்ற புத்தர், பிம்பிசார மன்னனுடைய யாகத்துக்காகக் கொண்டுபோகப் பட்ட ஆட்டுமந்தையின் மத்தியில் துன்புற்றிருந்த ஒரு நொண்டி ஆட்டுக் குட்டியைத் தம் தோளில் சுமந்துகொண்டு யாகசாலையை அடைந்து, மன்னனுக்கு அறவுரை கூறி, நாடெங்கும் உயிர்க்கொலையை நிறுத்தினர்' என்பது இந்த வரலாறு.

3. சீர் = சிறப்பு.

5. உள்ளம் நயனத்தின் வழியாய் ஓட = மனத்தில் உள்ள துக்கம் கண்ணீராய்ப் பெருகி ஓட.

6. பரிவு = அன்பு, இரக்கம்.

8. 'சிரித்த முகமென மலர்ந்து செழித்த செடி'—இதன் அழகை மனக் கண்ணில் வைத்துப் பாருங்கள்.

9. வலித்து = இழுத்து.

15. காராம்பசு தன் கன்றினிடத்து அளவுகடந்த அன்புடையது; அரற்றி = புலம்பி; அரிவை = பெண்.

16. சேய் = பிள்ளை.

17. நாவிய = கொழித்த; நாவுரி = நாழியுரி—ஒன்றரைநாழி அளவு.

ஆசிரியப்பா

அடி 1–2. புலவர் கவியெலாம் நிறைந்த = புலவர்களுடைய கவிகளி லெல்லாம் புகழ்ப்பெற்ற.

7. மதலை = குழந்தை.

23. செங்கதிர்ச் செல்வன் = சூரியன்.

30. என ஆங்கு = என்று இவ்வாறு.

34. கைம்மிக = வரம்பு மீற.

42. கடத்தல் = மீறுதல், தப்புதல்.

43. 'என்செய ஐயா' என்பதன்பின் 'என்று கூறி அழுதனள்' என முடிபு வருவித்துக்கொள்க.

21. வெம்மா வினை = கொடிய பெரிய கருமங்கள். எழில் ஆர் கமலத்து எழுந்தோன்: புத்தர், தாம் அவதரித்தவுடன், தமக்கென்று தெய்விகமாகத் தோன்றிய நீலத்தாமரைமலரில் எழுந்தருளியிருந்தார் என்பது வரலாறு.'

IV. பலவகை

1. நெய்தல்

இது யாப்பருங்கல விருத்தி என்னும் செய்யுளிலக்கண நூலுரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுளது. இதில் 'அடிமடக்கு' என்னும் அழகு அமைந்துள்ளது. இயற்கை வருணனை யழகும் சிறப்பாகவுள்ளது.

கழி = உப்பளம்; காவி = செங்கழுநீர்; நுண் தாது = நுட்பமான மகரந்தம்.

2. போர் யானை

'கொடிமதில்'—இது முத்தொள்ளாயிரம் என்னும் சங்கநூலில் உள்ளது. இந்நூல் முழுதும் இப்போது கிடைக்கவில்லை; இதிலிருந்து சில சில பாடல்களே கிடைக்கின்றன.

வீரச்செயலால் நேர்ந்த குறைகளே யெனினும் அவை குறைகள் தாம் என்று நாணியது களிறு. கிள்ளி = கிள்ளி வளவன் என்னும் சோழ அரசன்.

3. மாவளவன் குதிரை

'சாவி அரி'—இது 'திருமாவளவன்' என்னும் சோழ அரசனது போர்க்குதிரையின் வீரச்செயல்களை அழகுற விளக்கும் பழைய பாட்டு.

சூட்டு = அரி தாளின் தொகுதி; கால் இயல் மா = காற்றுப்போல் விரைவாக ஓடும் தன்மையுள்ள குதிரை. 'மா' என்னும் பல பொருள் ஒரு சொல் இடத்துக்குத் தக்கவாறு பொருள்படும். உழக்கி—உழப்புவதனால்; போன்ற — பன்மை வினைமுற்று.

4. தமிழ்

இப்பாட்டுச் சூரியனுக்கும் தமிழுக்கும் சிலேடையானது. தண்டி அலங்காரம் என்னும் அணியிலக்கண நூலின் உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது; அடுத்த பாட்டும் அவ்வாறே.

ஓங்கல் = மலை; ஓங்கல் இடைவந்து = சூரியனுக்காயின், உதயகிரியில் உதித்து, தமிழுக்கு: பொதியில் என்னும் மலையில் தோன்றி வளர்ந்து; இருள் கடிதல் = சூரியன் உலகத்திலுள்ள புற இருளை நீக்குதல்; தமிழ் உலகத்தாரின் அக இருளை (அறியாமை) நீக்குதல்.

6. பாலைவனம்

'பரணி' என்பது தமிழில் உள்ள பலவகைப் பிரபந்தங்களில் ஒன்று. பின்வரும் 'குறவஞ்சி', 'பள்ளு' என்பனவும் பிரபந்த வகையைச் சேர்ந்தனவே.

போரினையும் தலைவனுடைய போர்த்திறமைகளையும் சிறப்பித்துப் பாடுவது பரணியின் இலக்கணம். கலிங்க தேசத்தில் நிகழ்ந்த ஒருபோரையும், அதற்குக் காரணமாயிருந்த விஜயதர சோழனையும் (முதற் குலோத்துங்கன்) சிறப்பித்து 'சயங்கொண்டார்' என்ற புலவரால் பாடப்பெற்றது 'கலிங்கத்துப் பரணி'. இவர் 'கவிச்சக்ரவர்த்தி' என்னும் சிறப்புப் பெற்றவர்.

போருக்கு உரியவள் காளிதேவி; அவளுக்கு உகந்த இடம் பாலை வனம்; அவளுடைய பரிவாரங்கள் பேய்க்கூட்டம். ஆதலால், பரணியில் புலவர்கள் காளி தேவியையும், பாலைவனம் பேய் இவைகளையும் வருணித்துப் பாடுவது வழக்கம். அம்முறைப்படி கலிங்கத்துப்பரணியில் பாலையைப் பாடிய பகுதியிலிருந்து எடுத்த சில பாட்டுக்கள் இங்கு வந்துள்ளன. பேய்களின் வருணனையும் பின் ஒரு தலைப்பின் கீழ் வந்துள்ளதைக் காண்க.

பரணி 'தாழிசை' என்னும் பாவினத்தால் பாடப்படுவது.

1. சாயை = நிழல். வெப்ப மிகுதியால் தரை வெடித்துள்ள வெடிப்புக்குள்ளும் வெயில் நுழைவதைக் கவி சமத்காரமாக வருணிக்கிறார்.

2. அப்பாலைவனத்தில் நிழல் என்பது மருந்துக்கும் கிடையாது என்பதைக் கூறுகின்றது. உள அல்ல = இருப்பனவாக இல்லை.

3. ஒருவகைப் புறா பரல்களைத் (பருக்கைக் கற்களை) தின்று வாழும் என்பது கவி மரபு. அவ்வகைப் புறா பாலைவனத்தில் இருக்கும். பாலைவனத்தின் தரைக்கும், அங்குள்ள புறாவுக்கும் கூறப்பட்டுள்ள உவமையழகை நோக்குக.

4. பாலைவனத்தின் வெம்மை மிகுதியைக் காட்ட இதன்மேல் கூற வேண்டுவதொன்றும் இல்லை. அணி கொண்ட = அணி வகுக்கப்பட்ட; குரங்கு இனங்கள் = (இராமபிரானுடைய) வானர சேனைகள்; கடலுக்கு = கடலில் நீரை வற்றச் செய்வதற்கு.

7. பேய்கள்

இப்பகுதியில் பேய்களின் அங்க வர்ணனை ஒவ்வொன்றும் நம் கண் முன் நேரே நிற்பதுபோலக் காணப்படும்.

2. இருக்கில் = உட்கார்ந்தால். குந்தி உட்கார்ந்தால், முகத்தினும் மேல் நீண்டு செல்லும்படி மூன்று முழ அளவு கொண்ட முழங்கால்களை உடையன.

3. மறிபுறம் = கவிழ்க்கப்பட்ட மேற்புறம். பாம்புப்புற்று, சாதாரணமாகப் பல தொளைகளை உடையதாயிருக்குமாதலால் 'ஒற்றைவான் தொளைப் புற்று' என்று கூறினர்.

4. கொட்டு = மண் வெட்டி; மேழி = கலப்பை: கோத்த அ(ன்)ன = கோத்தது போன்ற; கோம்பி = பச்சோந்தி.

5. அட்டம் இட்ட = பருமனான; ஒக்கலை = இடுப்பு; ஒக்கலை கொள்வன தாய்ப்பேய்கள்.

6. ஒரு கால் = ஒருபோதும்; அணங்கினுக்கு = காளிதேவிக்கு.

8. பிறவிக் குணம்; 9. ஆடம்பரப் புலவர்

இவ்விரண்டு தலைப்பின்கீழும் உள்ள இரண்டு பாட்டுக்களும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய சிறு நீதி நூல்களை இயற்றிய ஔவையாரால் பாடப்பெற்றவை. ஔவை என்னும் பெயருடைய பெண்பாற் புலவர் இருவர் அல்லது மூவர் இருந்ததாகக் கூறுவர். அவருள்ளே இறுதியில் இருந்தவர் இங்குக் குறிக்கப்பட்ட ஔவையார்.

9. விரகர் = தந்திரசாலிகள்; முன்னமே சொல்லிவைத்துப புகழும்படி ஏற்பாடு செய்யப் பெற்றவர்கள். உலகத்தார் வெளி வேஷத்தில் மயங்குவதை இப்பாட்டுக் குறிப்பிடுகின்றது.

10. வினவிடை

இந்தப் பாட்டுக் கம்பரால் இயற்றப்பட்டதாகத் தனிச் செய்யுட் சிந்தாமணியில் காணப்படுகிறது. ஆனல் இது ஆறை (ஆற்றூர்) வாணனைப் பற்றிக் கூறுவதால் இது கம்பன் பாடிய பாட்டாக இருக்கமுடியாது.

முதல் இரண்டு வரிகள் அவ்வரசனது கொடைச் சிறப்பைக் காட்டும். 'ஆரும் நிற்கும்' என்பது முதல் 'அத்தி நிற்கும்' என்பது வரை உள்ள பகுதியின் சொல் நயம் மிக்க இன்பந்தருவது.

ஆர் (திருவாத்தி), வேம்பு, பனை என்பன முறையே சோழ, பாண்டிய, சேர அரசர்களுக்குரிய அடையாளங்கள். தமிழ்நாட்டுப் பேரரசர்கள் மூவரினும்இவன் மேம்பட்டவன் என்பது குறிப்பு. அரசு = அரசர்கள்; அத்தி = யானை. இவை மரத்தின் பெயராகவும் அமைந்துள்ளன.

11. விகடராமன் குதிரை

'முன்னே கடிவாளம்': இப்பாட்டுக் காளமேகப் புலவரால் விகடராமன் என்னும் பிராமணனைக் குறித்து அவனைப் பரிகசித்துப் பாடப்பட்டது. காளமேகப் புலவர் விநோதமாகவும், சிலேடையாகவும், வசையாகவும் விரைவில் பாடும் வல்லமையுடைய ஆசு கவி.

வேதம் போம் = வேதத்தைக் கரைகண்ட; 'முத்தமிழ்த் துறை போகிய' என்றதிற்போல. வேதம் கைவிட்ட என்ற பொருளும் இதில் தொனிப்பதைக் காண்க.

12. மோர்

'காரென்று'—இது ஓர் இடைச்சியிடம் மோர் மிகவும் நீர்ப்பாயிருந்ததைக் குறித்துப் பரிகாசமாகப் பாடப்பட்டது. வார் ஒன்று = நீட்சி பொருந்திய = நீளமான.

13. நாகதேவன் இட்ட உணவு

'வாயில் ஒன்று'—இப்பாட்டை இயற்றிய கவி வீரராகவ முதலியார் தொண்டை நாட்டுச் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்குமுன் இருந்தவர். குருடராதலால் 'அந்தக' என்ற அடைமொழி இவர் பெயரோடு சேர்ந்து வழங்கலாயிற்று. இவருடைய பாடல்கள் ஓசையழகும் பொருள் நயமும் பொருந்தியவை.

நடந்ததை உள்ளபடி கூறும் இயற்கையழகை இப்பாட்டிலே கவனிக்க.

14. உபதேசம்

பட்டினத்தார், பட்டினத்து அடிகள், பட்டணத்துப் பிள்ளையார், திருவெண்காடர் எனப் பலவாறு கூறப்படும் சைவப் பெரியார் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஆனால் இச்செய்யுளை இயற்றியவர் முற்கூறியவர் அல்லரென்றும், இவரது காலம் இற்றைக்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னாக இருந்திருக்கலாம் என்றும் ஊகிக்க இடமுண்டு. இப்பாட்டு இவர் தமது மனத்துக்கு உபதேசம் செய்வதாக அமைந்துள்ளது.

15. நகர் வளம்

'பள்ளு' என்பது, பள்ளர்கள் எனப்படும் உழவர்களின் பலவகை நிகழ்ச்சிகளை வர்ணித்துப் பாடும் ஒருவகைப் பிரபந்தம். முக்கூடல் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சீவலப்பேரி என்னும் ஸ்தலம். முக்கூடற் பள்ளு அத்தலத்தைக் குறித்துப் பாடப்பெற்றதாகும். இதனை இயற்றியவர் 'என்னயினுப் புலவர்' என்பர். இவ்வாறு கூறுதற்குத் தக்க ஆதாரம் காணப்படவில்லை. இந்நூல் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்டது.

1. இப்பாட்டைப்போன்ற அமைப்புடையது முன் வந்துள்ள ஒரு பாட்டு; அஃது எது? செண்டு அலங்காரர் = கையில் செண்டு என்னும் ஆயுதம் தாங்கிய அழகர்.

2. இதுவும் முன் பாட்டுப்போன்றது. புனல் = நீர்; கன்னல் = கரும்பு; சாறு = திருவிழா.

16. மழைக் குறிகள்

மழைக்குறிகள் = மழை வரப்போவதைக் காட்டும் அடையாளங்கள்.

நாட்டு வழக்கத்துக்கு ஏற்றபடி கூறியுள்ள முறைகளும் அவற்றைச் சொல்லும் உலக வழக்கான சொற்களும் இப்பாட்டில் கவனித்தற்கு உரியன.

மால் அழகர் = பேரழகு உடையவர்.

17. மலை வளம்

குறவஞ்சி என்பது ஒருவகை நாடகப் பிரபந்தம்; குறவஞ்சி நாடகம் எனவும் வழங்கும்.

'திருக்குற்றாலம்' என்பது பிரசித்தமான நீர்வீழ்ச்சியை உடையதொரு பாண்டி நாட்டு ஸ்தலம். அங்கே எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது திரிகூடராசப்பன் கவிராயர் என்ற புலவர் இக்குறவஞ்சியை இயற்றினர். இதில் இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழுக்கும் பொருத்த மான பலவகைப் பாட்டுக்கள் அடங்கியுள்ளன. பாட்டுக்கள் மிக்க பொருளழகும் சுவையும் உடையவை. இப்பிரபந்தத்தை இயற்றியதற்காக 1717-ம் வருஷத்தில் இவருக்கு நிலம் மானியமாக வழங்கப்பட்டது.

திருக்குற்றாலத்தில் உள்ள மலை 'திரிகூட மலை' எனப்படும். இப்பிரதேசங்களில் இக்குறவஞ்சி இக்காலத்தும் நாடகமாக நடிக்கப்பட்டு வருகிறது.

'வானரங்கள்' என்று தொடங்கும் இப்பாட்டு, ஒரு குறத்தி திரிகூட மலையின் சிறப்புக்களைக் கூறுவதாக அமைந்தது.

மந்தி = பெண் குரங்கு; வான்கவிகள் = பெரிய (ஆண்) குரங்குகள்; விழி எறிந்து = மேலே எறிட்டுப் பார்த்து; கவன சித்தர் = ஆகாயமார்க்கமாகச் செல்லும் சித்தர்கள்; தேனருவி = குற்றால மலைமேலுள்ள ஒரு நீர் வீழ்ச்சியின் பெயர்; வழுகும் = வழுக்கும், விகாரம்.

18. நூவன்

1. சிங்கன் = தலைமையுள்ள குறவன்; நூவன் = சிங்கனுடைய பரிவாரத்தில் உள்ளவன்.

2. கண்ணி = பறவை பிடிக்கும் கருவி; குளுவர் = சிங்கனுடைய பரிவாரத்தவர்கள்.

3. மேல் = உடம்பு; மட்டீவாய் (மட்டு + ஈ + வாய்) = கள் நாற்றத்தால் ஈ மொய்க்கும் வாய்.

19. விண்ணப்பம்

இவை மஸ்தான் சாகிபு இயற்றிய நிராமயக் கண்ணி என்னும் பாடலில் உள்ளவை. மஸ்தான் சாகிபு ஏறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவர். இவருடைய இயற்பெயர் சுல்தான் அப்துல் காதர் லப்பை ஆலிம் என்பது. இவர் குணங்குடியில் பிறந்தவர்; இவர் துறவியாகிச் சென்னையிலும் வாழ்ந்துவந்தார். இவர் இயற்றிய பாடல்கள் புத்தகமாக வெளிவந்துள்ளன. பாடல்களின் எளிமையைக் கவனிக்க.

20. மாலைச் சூரியன்

இது பாரதி இயற்றியது. இவ்விஷயத்தையே பற்றி இவர் வசன நடையில் எழுதியிருப்பது இப்புத்தகத்தில் வசனப்பகுதியில் தரப்பட்டுளது. இதனோடு அதை ஒப்பிடுக.

22. பூமி

இப்பகுதி புவி எழுபது என்னும் நூலில் உள்ளது. இந்நூல் பூமியின் சிறப்புக்களைக் கூறும் எழுபது பாட்டுக்கள் கொண்டது. ஈட்டி எழுபது, ஏரெழுபது, ஐந்திணை எழுபது முதலியவை போல இதுவும் அளவினால் பெயர்பெற்றது. இந்நூலை இயற்றிய மகா வித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்கார் இக்காலத்திலுள்ள பெரும் புலவர்களுள் ஒருவர்; சொல்வன்மை நிரம்பியவர். சாகுந்தலத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர். பாரி காதை, புவியெழுபது, தொழிற் சிறப்பு முதலிய செய்யுள் நூல்களும், பல ஆராய்ச்சி நூல்களும், சிறந்த கட்டுரைகளும் எழுதியவர்.

1. 'கருணை கூர்பவள் = உயிர்களிடத்து மிக்க கருணை செய்பவள். வருணன், சூரியன், வாயு, அக்கினி முதலியோர்கள் முறையே திருமஞ்சனம் முதலியன புரிந்து வழிபட, அவர்கட்கு அருள் புரிபவள் புவித்தாய்.

2. வாலிது ஆய = தூய்மையுள்ளதான; உடுக்கணம் = நட்சத்திரக் கூட்டம்.

3. கதிர் = கிரணம்; சசி அல் நேரம் = சந்திரன் இராப் பொழுதில்; விட்டு ஒளிர்தல் = விட்டு விளங்குதல்; சுடர் = அக்கினி; பார் மகட்குள கதிர், ஈண்டுப் பயிரின் கதிர்: கம்பநாடரும் ஏரெழுபதில்

> முதிராத பருவத்தும் முற்றியநற் பருவத்துங்
> கதிராகி யுயிர்வளர்ப்ப திவர்வளர்க்குங் கதிரன்றே
> எதிராக வருகின்ற எரிகதிருங் குளிர்கதிருங்
> கதிராகி உயிர்வளர்ப்ப துண்டாயிற் காட்டீரே

எனப் பாடுதல் காண்க; கதிர் என்னும் பெயர் பற்றியும் இருள் கடிதல்வினை பற்றியும் சிலேடித்தவாறு கண்டுகொள்க. கதிர்கள் என்றது பல கிரணங்களுண்மை பற்றி.

வசன பாடக் குறிப்புரை

I. உ. வே. சாமிநாதையர் (மகாமகோபாத்தியாய, டாக்டர்): இவர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள உத்தமதானபுரத்தைச் சேர்ந்தவர். மகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையினிடம் தமிழ்க் கற்றவர். சங்க நூல்களையும் பிற நூல்களையும் மிகவும் சிறந்த முறையில் ஆராய்ந்து பதிப்பித்தவர். மிகவும் தெளிவான அழகிய தமிழ் நடையில் பல ருசியான விஷயங்களை எழுதியிருக்கிறார். அரசாங்கத்தாரால் மகாமகோபாத்தியாயர் பட்டமும், சர்வகலாசாலையாரால் டாக்டர் பட்டமும் அளிக்கப்பெற்றவர்.

II. வே. ப. சுப்பிரமணிய முதலியார் (ஜி. பி. வி. சி.) (ராவ் சாகிப்): இவர் திருநெல்வேலி ஜில்லாவில் வெள்ளக்காலைச் சேர்ந்தவர். தமிழில் மிக்க ஈடுபாடு உடையவர். ஆங்கிலப் பயிற்சி உடையவர். அரசாங்கக் கால்நடை இலாகாவில் உத்தியோகம் வகித்தவர். கம்பராமாயண இன் கவித்திரட்டு முதலிய நூல்களை வெளியிட்டவர்.

III. சி. சுப்பிரமணிய பாரதி: இவரைப்பற்றிய குறிப்பைச் செய்யுட் பகுதியில் காண்க.

IV, X, XII. பெ. நா. அப்புஸ்வாமி (பி. ஏ., பி. எல்.): இவர் பெருங்குளத்தைச் சேர்ந்தவர். விஞ்ஞான விஷயங்களைப்பற்றித் தமிழில் பல கட்டுரைகளையும் சில புத்தகங்களையும் எழுதியிருக்கிறார்.

V, IX. எஸ். வையாபுரிப் பிள்ளை (பி. ஏ., பி. எல்.) (ராவ் சாகிப்): தமிழ், ஆங்கிலம், வடமொழி, மலையாளம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளில் பயிற்சி உடையவர். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். சென்னைச் சர்வகலாசாலையார் வெளியிட்டுள்ள தமிழ் லெக்ஸிகன் என்ற அகராதியின் பதிப்பாசிரியராக இருந்து அதனை முற்றுவித்தார். இப்பொழுது சென்னைச் சர்வகலாசாலையில் தமிழ்த் தலைவராக இருந்து வருகிறார்.

VI. 'எஸ்.' (பி. ஏ., பி. எல்.): தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தவர். தாம் இன்னாரென்று தெரிவிக்கவேண்டாமென்று கேட்டுக்கொண்டவர். வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு முதலியவை நன்கு பயின்றவர். அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகத்திலிருந்தவர்; பட்டமும் பெற்றவர். சுவை மிகுந்த பல கட்டுரைகளையும் கதைகளையும் எழுதியவர்.

VII. க. அ. நீலகண்ட சாஸ்திரி (எம். ஏ.): சர்வகலாசாலையில் சரித்திரப் பேராசிரியராக இருப்பவர். வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், டச்சு முதலிய பாஷைகளில் பயிற்சியுடையவர். பாண்டியர்களைப்பற்றியும் சோழர்களைப்பற்றியும் உள்ள வரலாறுகளைப் பழங் காவியங்கள் மூல

மாகவும், சாஸனங்கள் மூலமாகவும், கல்வெட்டுக்கள் மூலமாகவும் மிகவும் நுணுகி ஆராய்ந்து, தொகுத்து ஆங்கிலத்தில் ஆராய்ச்சி நூல்களாக முதன் முதலாக வெளியிட்டவர்.

VIII. 'பி. ஸ்ரீ'. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள விட்டிலபுரத தைச் சேர்ந்தவர். செய்யுள் நயங்களை மிகவும் அழகாக எடுத்துரைக்கும் திறமை வாய்ந்தவர். கம்பராமாயணச் செய்யுள்களைத் தொகுத்து விரிவுரை யுடன் வெளியிட்டுவருகிறார். திவ்யப்பிரபந்த சாரம் என்னும் நூலை இயற்றி யிருக்கிறார். ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி உள்ளவர்.

XI. 'துமிலன்' (என். ராமஸ்வாமி ஐயர்): 'ஆனந்த விகடன்' ஆசிரியர். மிகவும் ருசியான நகைச் சுவைக் கட்டுரைகள் எழுதுவதில் கைதேர்ந்தவர். ஆங்கிலம் பயின்றவர்.

XIII. கி. வா. ஜகந்நாதன் (வித்துவான்): 'கலைமகள்' ஆசிரியர். திருப்பனந்தாள் ஆதீனம் அளித்துவரும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஞாப கார்த்தத் தமிழ்ப் பரிசு பெற்றவர். டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களிட மிருந்து; ஆராய்ச்சியில் பயின்று, நூல்களை எழுதிவருபவர். 'கலைஞன் தியாகம்' என்னும் கதைத் தொகுதியின் ஆசிரியர். ஆங்கிலமும், வட மொழியும் பயின்றவர்.

XIV. ச. த. சற்குணர் (பி. ஏ., எல். டி.): சென்னைக் கிறிஸ்தவ கலா சாலையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். சிறந்த தமிழ்ப் பற்று உடை யவர். பல கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார்.

XV. எம். லக்ஷ்மியம்மாள் (பி. ஏ. ஆனர்ஸ், லண்டன்; எம். ஏ., எல். டி): சென்னை இராணி மேரி கலாசாலையில் ஆங்கில ஆசிரியராக இருப் பவர். பத்மாவதி சரித்திரம் முதலிய நூல்களை இயற்றிய அ. மாதவையரின் புதல்வி. தமிழில் கட்டுரைகளையும் கதைகளையும் எழுதியிருக்கிறார். ஐரோப் பாவில் பிரயாணம் செய்தவர். இவர் இங்கிலாந்தில் சில காலம் வசித்தார்.

XVI. ஆநந்தரங்கப் பிள்ளை: பதினெட்டாம் நூற்றாண்டில் புதுச் சேரியில் தூப்பிளேயின் துபாஷாக இருந்தவர். தமிழ்ப் புலவர்களைப் போற் றும் கொடையாளி.

செய்யுட் பாட வினுக்கள்

I. தோத்திரம்

I. கடவுள்

1. இச்செய்யுள் இன்ன கடவுளைப்பற்றிய தென்பது புலப்படுகின்றதா?

2. இது திருமாலைப்பற்றிய தென்பர்; அஃது எங்ஙனம் பொருந்தும்?

3. முத்தொழிலையும் விளையாட்டாகச் செய்பவர் தலைவர்: இத்தலைவரை எப்பெயராற் கூறலாம்?

4. சரண் நாங்கள் = நாங்கள் என்றது யாரைக் குறிக்கும்?

II. கலைமகள்

1. சரசுவதி துதியாக நீங்கள் படித்துள்ள பிற பாட்டுக்களுக்கும் இதற்கும் உள்ள வேறுபாடென்ன?

2. இதிற் கூறப்படும் இடங்களெல்லாவற்றையும் சேர்த்து, சரசுவதி தேவியின் இருப்பிடமாக ஒன்று கூறுவதாயின் எவ்வாறு கூறலாம்?

3. தாமரைப் பூவையன்றி மற்றவற்றையும் இடமாகக் கூறுவது எங்ஙனம்?

4. வேதம் எத்தகையது?

5. உள்ளதாம் பொருள் எது?

III. தாய்நாடு

1. வந்தே மாதரம் என்பதன் பொருள் இப்பாட்டிலேயே உள்ளது; கண்டுபிடிக்க.

2. இந்த ஞானம் வந்தாற் பின் நமக்கெது வேண்டும்—இந்த ஞானம் என்பது எதனை?

3. 'வணங்குதும்'–சொல்லிலக்கணம் கூறுக.

4. பாரதியார் பாடலுக்கும் பிற பாடல்களுக்கும் காணும் வேறுபாடென்ன?

II. நீதி

I. திருக்குறள்

1. பெயர்க் காரணம் யாது?

2. இந்நூலுக்குள்ள சிறப்புப் பெயர்களைக் கேட்டு அறிந்து, காரணமும் அறிக.

3. என்பும உரியார் பிறர்க்கு: இதற்கு உதாரணம் காட்டுக.

4. இன்னுத காய் கவர்தல் யாருடைய செயல்?

5. புண்—வடு, வேறுபாடு விளக்குக.

6. பொய்யாமை விளக்கு. இதுபோல 'விளக்கு' என்று கூறத்தக் கவை யாவை?

7. 7, 8, 10. ஒப்புமையுள்ள கொன்றைவேந்தன் வாக்கியம் கூறுக.

8. முயற்சி, முயற்று—விகுதிகள் யாவை? முயற்று என்பது போன்ற வேறு தொழிற் பெயர் ஏதேனும் கூறுக.

9. 'பெரியவர் கேண்மை' என்ற நாலடியார்ச் செய்யுளை ஒப்பிடுக.

II. இனியவை நாற்பது

1. இதுபோலப் பெயருள்ள வேறு சில நூல்கள் கூறுக.

2. அன்பைப்பற்றித் திருக்குறளிற் கூறப்படுவதைக் கவனிக்க.

3. 'மானம் உயிரினும் பெரிது' என்னும் அடியின் கருத்துள்ளதாக உங்களுக்குத் தெரிந்தவற்றைக் கூறுக.

4. 'உயர்ந்த பொருள்'—கல்வி; இன்னும் என்ன பொருள் கூறலாம்?

5. மாட்சியிற் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ் தல் அதனினும் இலமே—இதை எந்தப் பகுதிக்கு ஒப்பிடலாம்?

6. பற்றமையா.........முன்னினிதே: அரசு முறை கூறப்படும் வகை யைக் கவனிக்க.

III. நான்மணிக்கடிகை

1. பொய் சிதைக்கும் பொன்போலும் மேனியை—இக்கருத்துள்ள பழமொழி யாது?

2. 'ஸர்வேந்த்ரியாணும் நயனம் ப்ரதானம்' 'தம்பொருள் என்ப தம் மக்கள்'—இவற்றின் பொருள் அமைந்த பகுதிகளைக் கூறு. 'ஈன்றாளின் என்ன கடவுளு மில்'—இதனோடு ஒப்புள்ள கொன்றைவேந்தன் வாக் கியம் கூறுக.

3. 'தம்மூரென்று ஊரில்லை' என்பதில் நான்கு வகையினருக்கும் உள்ள வேறுபாடுகளைக் கவனிக்க.

4. 'கிளைஞர் இல்போழ்தில் சினம் குற்றம்' என்றால், கிளைஞர் உள்ள போழ்தில் சினம் குற்றமாகாதா?

IV. நாலடியார்

1. இந்நூலைப் பற்றி வழங்கும் பழமொழி யாது? அதில் இன்னும் எந்நூல் சேர்த்துக் கூறப்படுகிறது?

2. சங்கநூல்களில் இது எந்தத் தொகுதியைச் சார்ந்தது? இத்தொகுதியைச் சார்ந்த வேறு நூல்கள் உங்கள் பாடத்தில் வந்துள்ளவற்றைக் கூறுக.

3. இதன் பின் இரண்டு அடிகளை நன்னெறியில் எந்தப் பாட்டோடு ஒப்பிடலாம்?

4. கல்வி 'மருந்து' என்பதுபோல் இன்னும் சில வகைகளில் அதை உருவகப்படுத்திக் கூறுக.

5. 'பெருமையும் சிறுமையும் தான் தர வருமே'—இது எங்குள்ளது? இதை இப்பாட்டின் கருத்து எனலாம் அன்றோ? இக்கருத்துள்ள வேறு பாட்டு ஏதேனும் உனக்குத் தெரியுமா?

V. சிலப்பதிகாரம்

1. சிலப்பதிகாரம் என்ற பெயர்க் காரணம் என்ன? அதன் ஆசிரியர் யாவர்?

2. இதிற் கூறப்படும் அறவுரைகளால் ஆசிரியரின் மதக்கோட்பாடு என்னவென்று தோற்றுகின்றது?

VI. நன்னெறி

1. நன்னெறி என்று நூலுக்குப் பெயர் எவ்வாறு வந்தது? இது போன்ற வேறு சில நூற்பெயர்கள் கூறுக.

2. நன்னெறிப் பாட்டுக்களில் உபமான உபமேயங்கள் எவ்வாறு அமைந்துள்ளன? (எது முன்னே, எது பின்னே?)

3. தடங்கரை: இதைப் பிரிக்க. முதலிலுள்ளது என்ன சொல்?

4. 'விளம்பு'—இது யாரை நோக்கிக் கூறுவது? இதுபோல வந்துள்ள வேறிடங்கள் சில எடுத்துக்காட்டுக.

5. பலவகைப் பகுதியில் 'சந்திரகளங்கம்' என்ற தலைப்புள்ள பாட்டைத் 'தங்குறை' என்று தொடங்கும் பாட்டோடு ஒப்பிடுக.

6. வாழை 'கொடுத்துக் கெடுகிறது' என்பது எவ்வாறு பொருந்தும்?

7. முதற்பாட்டிலும், நாலாம் பாட்டிலும் 'வெள்ளம்' எடுத்துக்காட்டப் பட்டுள்ள முறையைக் கவனிக்க. இவ்வாறு ஒன்றையே வெவ்வேறு வகையில் உதாரணம் காட்டுவது வந்துள்ள இடங்களையும் நோக்குக.

III. காவியம்

I. பாரத வெண்பா

1. பெருந்தேவனார் என்னும் பெயருடைய ஆசிரியர் எத்தனை பேர்? அவர்கள் காலம் என்ன?

2. நளவெண்பாவின் நடையையும், பாரத வெண்பாவின் நடையையும் ஒப்பிடுக.

3. அபிமன்யு வீரத்தில் எவரெவரை நிகர்த்தவன்?

4. அவன் போர்த்திறமை எவ்வாறிருந்தது?

5. ஈசன்பாற் பெற்ற வரத்தால் தடுத்தான்—யார்? வரம் யாது? தடுத்த முறை யாது?

6. தமிழில் பாரதத்தை எவரெவர் இயற்றியுள்ளனர்?

II. சீவக சிந்தாமணி

1. இப்பெயரின் காரணமென்ன?

2. ஐம்பெருங் காப்பியங்கள் எவை? ஐஞ்சிறு காப்பியங்கள் எவை?

3. அரசர் பெருமையைக் கூறுவது யார்? யாருக்கு?

4. தெய்வங்களுக்கும் அரசர்களுக்கும் உள்ள வேறுபாடென்ன?

5. வேந்தரினும் தேவர் குறைந்தவர்—எதனுல்?

III. இராமாயணம்

1. பிணியற நோற்று நின்ற பெரியவன், மாதவக்கிழவன், என்றவை யாரைக் குறிக்கும்?

2. மடந்தைமாரிற் சொல்ல—இன் உருபு என்ன பொருளில் வந்துள்ளது?

3. கைகேயி இராமனிடம் முதலில் மிக்க அன்புடையவளே யென்பது எவ்வாறு தெரிகின்றது?

4. கைகேயியைக் கம்பர் 'கூற்றென வந்தாள்' என்பது என்?

5. இராமனுக்குக் கைகேயியிட மிருந்த அன்பைப் புலப்படுத்தும் உவமை யாது?

6. அரசு நீங்கினமை குறித்து இராமன் மனநிலை எவ்வாறிருந்ததாகக் கம்பர் கூறுகின்ருர்? உவமையுடன் கூறுக.

IV. நள வெண்பா

1. இதுபோல 'வெண்பா' என்னும் பேருடைய வேறு சில நூல்கள் கூறுக.

2. நளனுடைய ஆட்சி எவ்வாறிருந்தது?

3. விதர்ப்பநாடு எத்தகையது?

4. நளனுடைய குணவிசேடங்கள் யாவை?

5. தமயந்தி மாலை சூட்டிய வகை யாது?

6. பாரத வெண்பாவின் செய்யுள் நடையையும், இதன் நடையையும் ஒப்பிட்டுப் பார்க்க.

V. திருவிளையாடற் புராணம்

1. திருவிளையாடல்—பொருள் கூறுக.

2. விருந்தினரைப் பிராட்டி உபசரித்த வகையைக் கூறுக.

3. மடைவளத்தொழிற் புலவர்—இங்கே புலவர் எனல் பொருந்துமா? காரணத்துடன் கூறுக.

4. சிவபெருமான் குண்டோதரனை விடுத்ததன் நோக்கம் என்ன?

5. குண்டோதரனுக்குக் 'குடவயிறன்' என்று கவி பெயர் கொடுத்துள்ளதைக் கவனிக்க. [இது 'குண்டோதரன்' என்பதன் மொழிபெயர்ப்பு]

6. குண்டோதரனது தணியாத பெரும் பசிக்குக் காரணமென்ன?

7. அன்மொழித் தொகைக்குத் திருவிளையாடற் செய்யுட்களிலிருந்து இரண்டு உதாரணம் காட்டி விளக்குக.

VI. குசேலோபாக்கியானம்

1. இது எந்த நூலில் உள்ளது?

2. குசேலர் கண்ணிற்கண்ட கண்ணன் திருவுருவம் எத்தகையது?

3. மெய் நட்பன் என்னும் வாய்மை காத்தருளினன்—யார்? எப்போது? எவ்வாறு?

4. நீருறும் உப்பு, நெருப்புறு பளிதம்—இவ்வுபமானங்களைச் சந்தர்ப்பத்துடன் பொருத்திக் காட்டுக.

5. இல்லாளின் கடமைகள் யாவை?

6. கண்ணனது சௌலப்பியம் எவ்வாறு விளங்குகின்றது?

VII. இரக்ஷணிய யாத்திரிகம்

1. இந்நூல் எதிலிருந்து எவ்வாறு இயற்றப்பட்டது?

2. இக்கதை எதில் உள்ளது?

3. இதனால் அறியப்படும் நீதி என்ன?

4. இக்கதையைச் சுருக்கமாக எழுதிக்காட்டுக.

5. மகன் மீண்டுவந்ததைத் தந்தை எவ்வாறு நினைத்தான்?

VIII. புத்தரும் மகனை இழந்த தாயும்

1. புத்தர் கடுகு வாங்கிவரச் சொன்ன முறை பொருந்துமா? ஏன் அவ்வாறு கூறினர்?

2. உயிரிழந்த உடலின் குறிகள் யாவை?

3. எவ்வுயிருந்தொழ நன்று கண்ட மெய்ஞ்ஞானி: அவர் கண்ட 'நன்று' யாது?

4. நாவிய கடுகு: நாவிய என்பது வேறு எவ்வாறும் வழங்குகிறது?

5. நாவுரி—இதன் இயற்கை உருவ மென்ன? இவ்வாறு சிதைந்து வழங்குவது என்னவென்று கூறப்படும்?

6. இச்செய்யுட் பகுதியில் எவ்வெவ்வகையான பாட்டுக்கள் கலந்துள?

IV. பலவகை

1. நெய்தல்

1. இப்பாட்டுக்கு இத்தலைப்புப் பெயர் கொடுத்தது ஏன்?

2. இரண்டு, மூன்றும் அடிகளின் அமைப்பைக் கவனிக்க. அதற்குரிய பெயரை ஆசிரியரிடம் கேட்டறிக.

6. பாலைவனம்

1. பரணியில் பாலையை வருணிப்பதும் பேய்களை வருணிப்பதும் ஏன்?

2. இவ்விரண்டும் இலகுவில் வருணிக்கத்தக்கனவா? இதனால் ஆசிரியரது எந்தத் திறமை வெளியாகின்றது?

3. சூரியன் அப்பாலையில் எதைத் தேடுகிறான்?

4. பாலையின் கடுமையை இதனினும் நன்கு விளக்குதல் கூடுமோ?

7. பேய்கள்

1. பேய்களின் கதையைக் கேட்கும்போது அவற்றின் உருவத்தைப் பற்றி நமக்கு என்ன தோன்றுவது வழக்கம்?

2. இங்கு வருணிக்கப்படும் உருவங்களின் கற்பனைத் திறமையை நோக்குக.

3. கலிங்கத்துப்பரணியில் இப்பகுதிகள் முழுவதையும் படித்தறிக.

15. நகர் வளம்

1. குறவஞ்சியின் பாட்டுக்கும் இப்பள்ளுப் பாடல்களுக்கும் உள்ள வேறுபா டென்ன?

2. 'முக்கூடல்' எங்குள்ளது? இப்பெயர் இன்னும் எவ்விடத்துக்குப் பொருந்துவது?

16. மழைக்குறிகள்

1. இப்பாட்டைப் படிக்கும்போது எத்தகைய உணர்ச்சி உண்டாகின்றது?

2. மழைக்குறிகள் கூறுவது நாட்டின் நிலைக்குத் தக்கவாறு மாறுபடுவதைக் கேட்டறிக.

17. மலை வளம்

1. மலை வளம் யார் கூறுவதாக வுள்ளது?
2. 'வழுகும்'-இஃது எவ்வாறு இருத்தல்வேண்டும்?
3. 'தேனருவி' என்பது யாது?
4. பாட்டிலுள்ள சொல்லடுக்குக்களைக் கவனிக்க.

18. நூவன்

1. வேடர்களுடைய ஆயுதங்கள் யாவை?
2. நூவன், சிங்கன் இவர்கள் யார்?
3. 'ஈப்புலி' நூவன். இதில் வீரம் எவ்வளவு அழகாக விளங்குகின்றது?

19. விண்ணப்பம்

1. நிராமயப் பொருளுக்கு என்ன என்ன உவமைகள் சொல்லப்படுகின்றன?

2. 'நான் தளரலாகாது' என்பதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டிருக்கிறது?

20. மாலைச் சூரியன்

1. இதன் முதற் பாட்டில் சித்திரிக்கப்படும் காட்சியை மனத்தில் ஊன்றி நோக்குக. இத்தகைய காட்சி செயற்கையில் எங்கே காணலாம்?

2. இப்பாடல்கள் மனத்தில் எத்தகைய உணர்ச்சியுண்டாக்குகின்றன?

3. காளிக்கு இங்கே இடங்கொடுத்ததன் காரணம் என்ன? (என்ன சம்பந்தம்).

4. மாலைச் சூரியன் என்ற தலைப்புள்ள உரைச் செய்யுளையும் கவனித்து ஒப்பிடுக.

21. ஒளியும் இருளும்

1. எங்கும் ஒளி! ஓரிடம் மட்டும் இருள்! இவ்வமைப்பின் அழகை ஊன்றிப் பார்க்க.

2. இந்த இருளைப் போக்க எந்தப் பரிதி வரவேண்டும்?

3. பாரதமாதா பள்ளியெழுச்சி—'பொழுது புலர்ந்தது' என்னும் பாட்டைக் கவனிக்க.

22. பூமி

1. பூமிதேவிக்கு நிகழும் இயற்கையுபசாரங்கள் யாவை?
2. அவள் சயனம் எவ்வாறு நிகழ்கின்றது?

வசன பாட வினாக்கள்

I. வல்வில் ஓரி

1. வல்வில் என்பது யாது?

2. வல்வில் திறமை, ஓரியையன்றி, அவனுக்கு முன்னும் வேறு யாரிடத்தில் காணப்பட்டது?

3. ஓரியைப் பாடிய சங்கப்புலவர் யார்? அவர் பாட்டு எந்நூலில் உள்ளது?

4. புலவர் ஓரியை ஐயமற உணர்ந்தது எவ்வாறு?

5. இப்பாடத்தால் நீங்கள் அறிந்த வாத்தியப் பெயர்களைக் கூறுக.

6. அவற்றுள் தோற்கருவி, தொளைக்கருவி, நரம்புக்கருவி இவை இன்னின்ன என்று தனித்தனியே பிரித்துக் கூறுக.

7. 'உயர்ந்த மக்களின் இலக்கணம் அல்லவா அது'—எது?

II. நமது நாற்கால் நண்பர்கள்

1. நாற்கால் 'நண்பர்கள்' எவை? அவைகளை நண்பர் என்றது ஏன்?

2. குதிரை யானை இவற்றில் அதிக உபயோகமுள்ளது எது என்று உங்களுக்குத் தோன்றுகிறது? ஏன்?

3. ஒட்டகத்தின் உடலமைப்பிலும் அது ஆகாரம் உட்கொள்வதிலும் உள்ள விசேடம் என்ன?

4. செல்வத்துக்கு மாடு என்னும் பெயர் இருத்தல் பற்றி இப்பாடத்திற் கூறப்படுவ தென்ன?

5. மாடு எவ்வாறெல்லாம் பயன்படுகிறது?

III. மாலைச் சூரியன்

1. செய்யுள் பகுதியிலுள்ள மாலைச் சூரிய வர்ணனைக்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்தெழுதுக.

2. இவ்விரண்டுள் எந்த வர்ணனை மேலானதென்று தோன்றுகிறது? ஏன்?

3. சாதாரண உரைநடைக்கும் இப்பாடத்தில் காணும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடு என்ன? இவ்வுரைநடைக்கு என்ன பெயர் கொடுக்கலாம்?

IV. 25,000,000,000,000

1. உபாத்தியாயர் சொல்லம் போன கதைக்கும், பாட விஷயத்துக்கும் தொடர்பென்ன?

2. தூரத்தைக் கணக்கிடுவதற்கு வழங்கும் முறைகளில் மூன்றைக் கூறுக.

3. இப்பாடத்தால் நக்ஷத்திரங்களைப் பற்றி அறிவதென்ன?

4. உரைநடை வினாவிடையாக இருப்பதன் சௌகரிய அசௌகரியங்களைக் கூறுக.

V. சங்க இலக்கியங்கள்

1. தென்னாட்டு மொழிகளுள் தமிழுக்கு அடுத்தபடியாக இலக்கியப் பழமையுடைய மொழி எது? தமிழுக்கு நேரான பழமையுள்ள அயல்நாட்டு மொழிகளெவை?

2. 'சங்க இலக்கியங்கள்' என்பன எவை? அவற்றின் இருபெரும் பாகுபாடுகளைக் கூறு.

3. எட்டுத்தொகையுள் அகப்பொருள் பற்றியன யாவை? புறப்பொருள் பற்றியன யாவை?

4. பரிபாடலின் தனிச் சிறப்பு யாது?

5. 'கல்பொரு சிறு நுரையார்'–இப்பெயர் எவ்வாறு வந்தது? இது போன்ற பெயர் வேறு நீங்கள் அறிவீர்களா?

6. சங்கப்புலவருள் பெண்பாலார் எத்துணையர்? சிலர் பெயர் கூறுக.

7. இதனால் அக்காலத்துப் பெண்-கல்வியைப்பற்றி அறியத்தக்கதென்ன?

8. 'அந்தாலஜி' எனப்படுவது யாது? விளங்கக் கூறுக.

9. தமிழோடொப்பத் தொகை நூலமைப்பு எம்மொழியில் உள்ளது? இவ்விருமொழித் தொகை நூல்களும் எவ்வகைகளில் ஒப்பிடத்தக்கன?

10. கண்ணகனார் பாட்டிலுள்ள உவமையின் நயத்தை விளக்குக.

VI. ப்ளாஞ்செட்

1. ப்ளாஞ்செட்டின் வரலாற்றைப் படித்தபிறகு, நீங்கள் இந்தக் கட்டுரை எழுதியவர் கக்ஷியா? அல்லது அவர் நண்பர் கக்ஷியா? ஏன்?

2. இதை எழுதிய ஆசிரியருக்கு ப்ளாஞ்செட்டைப்பற்றிய முடிவான கருத்து யாது?

3. ப்ளாஞ்செட்டுக்குத் தமிழ்ப்பெயர் யாது கொடுக்கலாம்? பாடத்துள் வந்துள்ளதைக் கவனிக்க.

4. இந்த உரைநடையின் சிறப்பியல்பு என்ன?

5. இந்த நிகழ்ச்சியை ஆசிரியரின் நண்பர் கூறுவதுபோல் ஒரு கட்டுரை எழுதுக.

VII. சோழர்

1. வெள்ளாறு இரண்டு எங்கெங்கே உள்ளன?

2. சோழநாடு என்பது எந்தெந்த ஜில்லாக்கள் கொண்டது?

3. சோழமன்னரின் தலைநகரங்கள் எவ்வெவை?

4. கரிகால்வளவனைப்பற்றி இப்பாடத்தால் நீங்களறிந்தவற்றைக் கூறுக.

5. காவிரிப்பூம்பட்டினம் எவ்வெவ்வகையிற் சிறப்புடையது? அதன் வாணிகச் சிறப்பு எத்தகையது? அது எந்த நூலால் விளங்குகின்றது?

6. 'களவழி நாற்பது'—வந்த வகை யாது?

7 சோழவமிசம் தாழ்வடைந்தபின் மீண்டுந் தலையெடுத்த காலம் எது? அக்காலத்து முதற் சோழ மன்னன் யாவன்?

8. சோழருக்கும் வேங்கிநாட்டுச் சளுக்கியருக்கும் தொடர்புண்டானது எப்போது? எவ்வாறு?

9. தஞ்சாவூர்க் கோவிலைப்பற்றிக் கூறும் மற்றொரு பாடம் எது? சோழவரசர் நினைத்தால் முடியாத காரியம் ஒன்றுமில்லை யென்பதை அக் கோவில் நிரூபிக்கிறது—எப்படி?

10. கங்கைகொண்ட சோழன் யார்?

11. இடைப்பட்ட சோழர் காலத்து ஆட்சிமுறை யாது?

VIII. ஒரு கவிமலர்

1. இப்பாடத்தில், இதை எழுதியவரது கற்பனைத்திறன் எவ்வாறு புலனாகின்றது?

2. இப்பாடம் தொடங்கும்பொழுது உங்களுக்கு ஒரு கதை சொல்ல வருவதுபோலுள்ளதா—கட்டுரையாகத் தோன்றுகிறதா?

3. இதுபோன்ற அமைப்புடைய பாடங்கள் (உங்கள் புத்தகத்தில்) வேறு எவை?

4. அவற்றின் நடையோடு இதை ஒப்பிட்டு உங்கள் கருத்தைக் கூறுக.

5. 'ஆர்த்தசபை' என்ற பாட்டிலே பிரபுவின் உள்ளத்தை மிகவும் மகிழச்செய்த பாகம் எது? ஏன்?

6. இதனால் ஔவையாரைப்பற்றி நாம் அறியத்தக்கதென்ன?

IX. கம்பர்

1. கம்பர் காலம் 12-ம் நூற்றாண்டே என்பதற்குரிய ஆதாரமென்ன?

2. கம்பர் தம் காலத்தில் அரசரால் மதிப்படையாமைக்குக் காரணம் என்ன?

3. கம்பர் கவியுலகிற் செய்த மாறுதல்கள் எவை?

4. 'கர்ணபரம்பரை' யாவது யாது?

5. 'அபயன்' எனப்படுவோன் யார்?

6. 'கவிச்சக்கரவர்த்தி' என்னும் சிறப்புப் பெற்ருேர் யாவர்?

7. கம்பர் செல்வத்தையும் பட்டத்தையும் பெரிதாக மதிப்பவரல்லர். சான்று தருக.

8. கம்பராமாயணத்தின் சிறப்பு இயல்புகள் யாவை?

9. கம்பர் இராமாயணத்தைப் பாட எடுத்துக்கொண்டதேன்?

X. டேவிட் லிவிங்ஸ்ட்டன்

1. இவரிடம் காணப்பட்ட விசேஷ குணங்கள் யாவை?

2. சிங்கத்தினிடம் அகப்பட்டும் இவர் பயப்படவில்லை—ஏன்?

3. லிவிங்ஸ்ட்டன் கல்வி கற்ற வகையைக் கூறுக. இதுபோல வருந்திக் கற்ருேர் வேறு எவரையேனும்பற்றிக் கேட்டறிந்திருந்தால் அதனையும் கூறுக.

4. இவர் கண்டுபிடித்த இடங்களில் பிரசித்தமானவை யாவை?

5. இவர் எழுதிய நூல்கள் யாவை?

6. 'டாங்கனீக்கா' ஏரிப் பிரதேசம் எத்தகையது?

7. இறுதிக்காலத்தில் லிவிங்ஸ்ட்டனுக்கு எதிர்பாராத துணை எவ்வாறு கிடைத்தது?

8. எந்த நால்வரையும் ஒன்ருகத்திரட்டி ஒருருவாக்கியவர் லிவிங்ஸ்ட்டன்? காரணம் என்ன?

XI. கஜப்புளுகு

1. இந்தக் கதையின் பெயர்ப் பொருத்தத்தைப்பற்றிக் கூறுக.

2. ராஜாங்கம் நாயுடுவைப்பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது? அவர் பரிகாசம் செய்வதற்காகக் கதை சொன்னுரா? அன்ரு?

3. பீமசேனராவ் பெயருக்கு எற்ற தைரியம் உடையவரா? காரணம் கூறுக.

4. ராஜாங்கம் நாயுடு சொல்லிய விருத்தாந்தம் நிஜமா, பொய்யா? என்?

XII. மின்சாரமும் மனித வாழ்க்கையும்

1. கிராமங்களில் மின்சாரத்தை எவ்வகைகளில் பயன்படுத்தலாம்?

2. மின்சாரம் நம்மைக் கொன்றுவிடுகிறது; கண்களைக் கெடுத்துவிடுகிறது; ஆதலால் அதை உபயோகித்தல் கூடாது: இது சரியா, தவரு? விடைக்குக் காரணமுங் கூறுக.

3. 'நஞ்சுடைமை தானறிந்து'—இப்பாட்டு எதிலுள்ளது?

4. மின்சாரத்தை எவ்வகைகளால் உண்டாக்கலாம்?

5. நம் தென்னாட்டில் மின்சாரம் மிகுதியாய் உண்டாகிப் பயன்படும் இடம் எது?

XIII. கிழவியின் நிழல்

1. இக்கட்டுரையின் பெயர்ப் பொருத்தம் எவ்வாறு? விளக்குக.

2. இராஜராஜ சோழனுடைய குணவிசேஷங்கள்—இக்கட்டுரையால் அறிவன யாவை?

3. சிற்பியின் நன்றியறிதல் எவ்வாறு புலனாகின்றது?

4. பாணலிங்கம் ஜலவாஸம் செய்விக்கப்படுவது என்? (ஆசிரியரைக் கேட்டு அறிக)

5. 'சாரப்பள்ளம்' என்பது யாது? பெயரின் காரணம் கூறுக.

6. சோழநாட்டுக் கலைச் செல்வத்தின் கூம்பு எது? அது இன்னும் எச்சிறப்புக்களை உடையது?

7. கிழவியைப்பற்றி அரசன் அறிந்தது எவ்வாறு?

XIV. சீவக சிந்தாமணி

1. சிந்தாமணி என்பது யாது? நூலுக்கு அப்பெயர் வரக் காரணமென்ன?

2. ஐம்பெருங் காப்பியங்கள் எவை? அவற்றுள் காலத்தால் முந்தியவை எவை?

3. ஐஞ்சிறு காப்பியங்கள் எவை?

4. சீவகனிடத்திருந்த விசேட குணங்கள் யாவை?

5. சீவகனுக்கு வைராக்கியம் பிறந்த தெப்படி?

6. மணநூல் என்னும் பெயர்க் காரணம் யாது?

7. சமணர் கூறும் நால்வகை வணக்கம் யாவை?

8. திருத்தக்கதேவருடைய பாட்டின் சிறப்பு எவ்வாறு புலனாகின்றது?

9. இன்பதுன்பங்களைப்பற்றிச் சிந்தாமணியுள் கூறப்படும் உண்மை யாது?

XV. சீமைக் கடிதம்

1. இக்கடிதம் சீமையில் எந்த ஊரிலிருந்து எழுதப்பட்டது? இது எப்படித் தெரிகிறது?

2. இது எழுதப்பட்டது எந்த மாதமாயிருக்கலாம்?

3. சீமையிலே வீட்டை வைத்து நிர்வகிப்பதில் உள்ள சிரமங்கள் என்னென்ன?

4. அங்கே மிகவும் ஈனமாகக் கருதப்படுவது எத்தகைய வாழ்க்கை?

5. உங்கள் அனுபவத்தில் நேர்ந்த உல்லாசப்பயணம், சுற்றுப்பயணம் ஏதேனுமொன்றைப்பற்றிக் கடிதமுறையில் எழுதுக.

6. இது கடிதமுறையில் உள்ளதா, வியாசமுறையில் உள்ளதா? ஏன்?

XVI. தின சரிதை

1. நாட் குறிப்பு வைத்துக்கொள்ளும் பழக்கம் உங்களில் எத்தனை பேருக்கு உண்டு?

2. அது வைத்துக்கொள்வதனல் உள்ள நன்மைகளென்ன?

3. இந்த நாட் குறிப்பினல் இதை எழுதியவருடைய தன்மை என்ன விளங்குகின்றது?

4. இது 200 வருஷங்களுக்கு முற்பட்டது; இந்த நடையும் இப்பொழுதுள்ள உலக வழக்கான நடையும் ஒரே மாதிரியானவையா? வேறுபட்டனவா?

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS —1942. B 8438

எல்லாத் தமிழ் மாணவர்களும் படிக்கவேண்டிய நூல்

நமது இந்தியா

எழுதிய ஆசிரியர்

மினு மஸானி

தமிழ்ப்படுத்தியவர்: வ. ரா.

சித்திரக்காரர்: [illegible]. எச். ஜி. மூர்ஹௌஸ்

202 பக்கங்களும் 100 சித்திரங்களும் உடையது

விலை ரூ. 1-8

'ஒவ்வொரு தமிழ் மாணவன் கையிலும் இந்தப் புத்தகம் இருக்கவேண்டும். ஒவ்வொரு வாசகசாலையும் இந்தப் புத்தகம் இல்லாமல் இருக்கக்கூடாது.........இவ்வளவு உயர்வாகப் பேசும்படி இந்த நூலில் என்ன இருக்கிறது? சுருக்கமாய்ச் சொன்னால், நமது எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய வித்து முழுவதும் இதில் இருக்கிறது என்று சொல்லலாம்.'—தினமணி

'இப்புத்தகம் பள்ளிக்கூடங்களுக்கு மட்டுமல்லாமல் நமது நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளில் பற்றுள்ள பொது மக்களுக்கும் விலைமதிக்கக்கூடாத ஒரு துணையாகும்.'—ஹிந்து

A GARLAND OF TAMIL VERSE AND PROSE

BOOK I FOR FORM IV

Selected and edited by P. N. APPUSWAMI

PRICE 13 ANNAS

OXFORD UNIVERSITY PRESS